Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 181 சுபகிருது வருடம், மாசி மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமை (02.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 09, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## கமெண்ட் கந்தர்...

ஸ்ட்ரைக் ஏற்பாட்டுக்குப் பின்னாடி இந்த கவர்ன்மென்ட் ஆக்கள் இருக்கிறாங்கள் போல... பாருங்கோ எல்லாரும் எலெக்சன மறந்துட்டாங்கள்..!






தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவர் வெற்றிடத்திற்காக விண்ணப்பித்துள்ளாராம்.

தேர்தல் உள்ளிட்ட ஆணைக்குழுக்களுக்காக விண்ணப்பங்களைக் கோர அரசியலமைப்புப் பேரவை அண்மையில் நடவடிக்கை எடுத்தது. இதற்கான விண்ணப்பக் காலம் கடந்த மாதம் 15ஆம் திகதியுடன் நிறைவுபெற்றது. இதற்கே அவர் விண்ணப்பித்துள்ளார்.

ஆனால், ஆள் கறாரானவர் என்பதால் அவரை உள்ளே எடுக்க அனுமதிப்பார்களா என்பது தெரியவில்லை.

# மண்ணெண்ணெய் விலை 50 ரூபாவால் குறைப்பு



மண்ணெண்ணெய் விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை நேற்று நள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும்வகையில் 50 ரூபாவால் குறைக்கப்பட்டது .

அதற்கமைய 355 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்பட்ட மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் புதிய விலை 305 ரூபாவாகும்.

இதேவேளை, தொழிற்துறைகளுக்கு பயன்படுத்தும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 134 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது.

» 02 பக்கம்



படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே

# போராட்டத்தால் மக்கள் பாதிப்பு

## சுகாதாரம், போக்குவரத்து உட்பட்ட இதர அத்தியாவசிய சேவைகள் முறையாக இடம்பெறாமையால் அவதி

நா.தினுஷா

அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ள வருமான வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாடுதழுவிய ரீதியில் அரச மற்றும்...

» 02 பக்கம்

# நலன்புரி நன்மைகளைப் பெற பதிவு செய்யுமாறு அறிவிப்பு

நிதி அமைச்சின் கீழ் இயங்கும் நலன்புரி சபையால் வழங்கப்படும் சமுர்த்தி உட்பட 52 நலன்புரி பலன்களைப் பெறுவதற்கு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யாதவர்கள் அந்தப் பலன்களைப் பெறுவதற்கு உரிமையற்றவர்கள் என நிதியமைச்சு வலியுறுத்தியுள்ளது.

மார்ச் 31ஆம் திகதிக்குள் பதிவு செய்து முடிக்கவில்லை என்றால், உலக வங்கியின் இந்தத் திட்டத்துக்கான உதவி கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளது.

அப்படியானால், நலத்திட்ட உதவிகளைப் பெறுபவர்கள் நன்மைகளைப் பெற முடியாது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. நலன்புரி சபை வெளியிட்டுள்ள அறிவிப் பின்படி, ஒன்லைன் மூலம் 3.7 மில்லியன் மக்கள் இதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

சமுர்த்தி மற்றும் ஏனைய நலன்புரி நன்மைகளுக்காக விண்ணப்பித்தவர்களின் தகுதியை சரிபார்க்கும் பொருட்டு, மாவட்ட செயலகத்திலுள்ள...

» 02 பக்கம்

# 10 பேர் அமைச்சர்களாக விரைவில் பதவியேற்போம்

## சொல்கிறார் எஸ்.பி.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாம் உட்பட மேலும் 10 அமைச்சரவை அமைச்சர்களை விரைவில் நியமிக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர்...

» 02 பக்கம்



# நாடகத்தை நிறுத்திவிட்டு தேர்தலை நடத்துங்கள்

## ரணிலிடம் கேட்கிறார் விமல் வீரவங்ச



பொருளாதார நெருக்கடியால் இன்று மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைவிட, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வந்து அரங்கேற்றும்...

» 02 பக்கம்

# ஈஸ்ரர் தினத் தாக்குதலில் ஈடுபட்டோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்


## சஜித் பிரேமதாச பகிரங்க அறிவிப்பு



கொடூரமான பயங்கரவாதத்தால் தனது தந்தையை இழந்ததுபோல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால்...

» 02 பக்கம்

# தாமதமின்றி தேர்தலை நடத்துமாறு அமெ. செனட் சபை வலியுறுத்தல்




அரசாங்கத்தை அமெரிக்க செனட் சபையின் வெளியுறவுக் குழு வலியுறுத்தியுள்ளது. இலங்கை மக்களின் குரலை நசுக்குவதற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் ஜனநாயக விரோத செயற்பாடு என ட்விட்டர் செய்தியூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக இலங்கை மக்களின் உரிமை மீறப்படுவதாக அமெரிக்க செனட் சபையின் வெளியுறவுக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ந்தும் காலந்தாழ்த்தாமல் சுதந்திரமானதும் நீதியானதுமான உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை

## படுகொலைக் குற்றச்சாட்டில் நால்வருக்கு

# மரணதண்டனை!

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு



கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவரை படுகொலை செய்த குற்றச்சாட்டின்பேரில் நான்கு பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (01) மரணதண்டனை விதித்துள்ளது.

» 02 பக்கம்

# 8 வயது சிறுமி துஷ்பிரயோகம்!

## தாக்கப்பட்டதால் பிக்கு உயிரிழப்பு

எட்டு வயது சிறுமி ஒருவரைப் பாலியல் பலாத்காரம் புரிந்ததாகக் கூறப்படும் சம்பவத்தில் சந்தேக நபரான 70 வயதுடைய பௌத்த மதகுரு ஒருவர் சிறுமியின் உறவினர்களால் தாக்கப்பட்டதில் மரணமடைந்துள்ளார். குருநாகல் வைத்தியசாலையில் மரணமடைந்த...

» 02 பக்கம்



# ‘சர்வஜன வாக்குரிமை’ தொடர்பான விவாதம் 9ஆம் 10ஆம் திகதிகளில்

## பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்தில் தீர்மானம்



பாராளுமன்றத்தை மார்ச் 07ஆம் திகதிமுதல் 10ஆம் திகதிவரை கூட்டுவதற்கு நேற்று (01) பிற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம்...

» 02 பக்கம்

## அரசாங்கம் நூறு மீற்றர் ஓடத் தயாரானால்

# நாங்கள் மரதன் ஓட தயாராகியே வந்தோம்!

## தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார பேச்சு



நா.தினுஷா

'தேர்தலை காலந்தாழ்த்தினால் மக்கள் விடுதலை முன்னணியின் வீழ்ச்சியை நிறுத்திவிடலாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எண்ணிக்கொண்டிருக்கிறார். இந்த அரசாங்கம் நூறு மீற்றர்...

» 02 பக்கம்

# வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் விசேட கவனம்

## நிதி அமைச்சின் அதிரடி உத்தரவு

வருமான வரி செலுத்தத் தவறிய பல்வேறு தொழில்கள் மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நபர்களை அடையாளம் காண துரித நடவடிக்கை எடுக்குமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று நிதியமைச்சு வளாகத்தில் இடம்பெற்ற உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே இராஜாங்க அமைச்சர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அரசாங்க வருமானம்....

» 02 பக்கம்

# எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு

## சுதந்திர சேவை சங்கம் சுட்டிக்காட்டு

நா.தினுஷா

எரிபொருள் கூட்டுத்தாபன ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட தொழிற் சங்க நடவடிக்கையின் காரணமாக எதிர்வரும் இரு தினங்களில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக எரிபொருள் சுதந்திர சேவை சங்கம் தெரிவித் திருக்கிறது. இதற்கான முழுப்பொறுப்பையும் இந்த அரசாங்கமே ஏற்கவேண்டும் என்று தெரிவித்துள்ள அந்தச் சங்கத்தின்...

02 பக்கம்

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்:

# மைத்ரியின் மனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சஞ்சீவ மொரேஸ் மற்றும் பிரசாங் குணவர்தன ஆகிய இருவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் நேற்று புதன்கிழமை (1) பரிசீலனைக்கு..

» 02 பக்கம்

## போராட்டத்தால்...

தனியார் துறையினரால் முன்னெடுக்கப்பட்ட ஒருநாள் தொழிற்சங்க நடவடிக்கையினால் மருத்துவம், வங்கி, எரிபொருள், துறைமுகம், புகையிரத போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகள் நேற்று (01) ஸ்தம்பித்தன.

இதன் காரணமாக, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த பொது மக்கள் நேற்று அசௌகரியங்களுக்குள்ளாகியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. புகையிரத திணைக்கள சேவையாளர்களின் அடையாள வேலைநிறுத்தத்தால் பயணிகள் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகியிருந்தார்கள். மேலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் இதற்கு ஆதரவளித்திருந்தனர்.

தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம், இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம், மின்சாரதுறைசார்ந்த தொழிற்சங்கங்கள், துறைமுக சேவையுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள், அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள், ஸ்ரீலங்கா டெலிகொம், தபால் சேவைப்பிரிவு, புகையிரத போக்குவரத்து தொழிற்சங்கங்கள், மருத்துவ துறைசார் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட 40இற்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வைத்தியர்களினால் முன்னெடுக்கப்பட்ட 24 மணிநேர தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையினால், கொழும்பு தேசிய மருத்துவமனை உள்ளிட்ட சகல அரச மருத்துவமனைகளினதும் செயற்பாடுகள் பாதிப்படைந்திருந்தன.

நோயாளர்கள் சிகிச்சைக்காக வந்திருந்தபோதும், வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட சிகிச்சைப் பிரிவுகள் இயங்காமையினால் அவர்கள் நீண்ட நேரம் மருத்துவமனைகளில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இருந்தபோதும், அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று சிகிச்சைப் பிரிவு மற்றும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகளின் செயற்பாடுகள் வழமைபோல் இடம்பெற்றிருந்தன. மருத்துவர்கள் இந்த தீர்மானத்தினால் தங்களின் நேரம் வீணாக்கப்படுவதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.

ஒருசில தொழிற்சங்கங்கள் முழுமையான தொழிற்சங்க நடவடிக்கையிலும், மேலும் சில தொழிற்சங்கங்கள் சுகயீன விடுமுறையிலும், ஒருசில தொழிற்சங்கங்கள் சட்டப்படி வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டும் பல்வேறு விதங்களில் தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை, நாட்டில் முக்கியமான 12 பிரதேசங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த தொழிற்சங்கங்கள் ஆதரவை வழங்கியிருந்தன.

அம்பாறை, அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, காலி, கம்பஹா, யாழ்ப்பாணம் , கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, இரத்தினபுரி உள்ளிட்ட மேலும் சில பிரதேசங்களில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பெற்றோலிய கூட்டுத்தாபன சேவையாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கையினால் எரிபொருள் விநியோகம் நேற்று பெருமளவில் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில், துறைமுக சேவையாளர்களின் பணிப்புறக்கணிப்பினால் துறைமுக செயற்பாடுகளும் நேற்று தடைப்பட்டிருந்தன. நேற்றுக்காலை 7 மணிமுதல் துறைமுக சேவையாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

துறைமுக பணியாளர்களினால் இன்று காலை 7 மணிவரை சட்டப்படி வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்துக்கு நேற்று 7 கப்பல்கள் வருகைதரவிருந்தன. மேலும் சில கப்பல்கள் துறைமுகத்திலிருந்து வெளியேற இருந்தன. ஆனால், தொழிற்சங்க நடவடிக்கையினால் இந்த சகல செயற்பாடுகளும் பாதிப்புக்குள்ளாகும். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு கவலை தெரிவிப்பதாகவும் 40 துறைமுக தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட 9,000 வரையிலான ஊழியர்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட இந்த 24 மணிநேர தொழிற்சங்க நடவடிக்கையினால் துறைமுகத்துக்கு வருகைதந்துள்ள கப்பல்களுக்கு பெருந்தொகை காலதாமத கட்டணம் செலுத்தவேண்டி ஏற்படும். அதிகாரசபைக்கு பலகோடி ரூபா நட்டம் ஏற்படும் என்றும் அகில இலங்கை துறைமுக பொது சேவை சங்கத்தின் பிரதான செயலாளரும் துறைமுக தொழிற்சங்க ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளருமான நிரோஷன் கொரகானகே தெரிவித்தார். மேலும், வங்கி ஊழியர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச மற்றும் தனியார் வங்கிகளின் கொடுக்கல் வாங்கல்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. சில அரச வங்கிகள் நேற்று மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மத்திய வங்கியின் தொழிற்சங்க ஒன்றியமும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். வங்கி ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை 99.9 சதவீதம் வெற்றியை தந்துள்ளதாக வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஆசிரியர் சேவை மற்றும் தபால் சேவை என்பனவும் இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கியிருந்தன. ஆசிரியர்கள் நேற்று கறுப்புநிற ஆடை அணிந்து இதற்கு ஆதரவளித்திருந்ததுடன் தபால் சேவையாளர்களும் கறுப்புநிற ஆடை மற்றும் கறுப்பு துண்டுகளை கட்டி தமது எதிர்ப்புகளை வெளியிட்டிருந்தனர். கொட்டாவ உள்ளிட்ட சில பிரதேசங்களில் ஆசிரியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, புகையிரத ஊழியர்களும் நேற்று சட்டப்படி வேலைநிறுத்தத்தை முன்னெடுத்திருந்தனர். கொழும்பு பிரதான புகையிரதத்திலிருந்து புறப்படும் புகையிரதங்கள் நேற்று பிற்பகலில் இருந்து தடைப்பட்டிருந்தன. இதனால் பயணிகள் புகையிரத நிலையங்களில் காத்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. புகையிரத தொழிற்சங்க கூட்டமைப்பினால் புகையிரத திணைக்களத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

துறைமுக அதிகார சபைக்கு முன்னாள் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் இதனால் அந்தப் பிரதேசத்தில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வருமான வரி உள்ளிட்ட பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக எதிர்வரும் 08ஆம் திகதி வரை அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்குவதாகவும், அதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முன் அறிவித்தலின்றி தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் நேற்று எச்சரிக்கை விடுத்தன. வரிக்கொள்கையை திருத்தியமைப்பதற்கான மாற்றுத் தீர்வுகளை முன்வைத்துள்ளதாகவும் அதன் பிரகாரம் செயற்படாவிட்டால் ஒரு வாரத்தின் பின்னர் நாடு முழுவதையும் முடக்குவதற்கு தயாராகிவிட்டதாகவும் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

## ஈஸ்ரர் தினத்...

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ராஜபக்ஷர்களால் அநாதரவாக்கப்பட்டதாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று கூறப்பட்டாலும், ராஜபக்ஷர்கள் ஆட்சிக்கு வந்த நாள் முதல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சகலதையும் மூடி மறைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டதாகவும், தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி சில விசாரணை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தும் வேலைத்திட்டத்தை வலுப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மிகவும் திறமையான பாதுகாப்பு முகவராண்மை அமைப்புகள் ஈடுபடுத்தப்படும் எனவும், எந்தவொரு பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவோருக்கும் மரண தண்டனை வழங்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுமுன்தினம் (28) வத்தளையில் தெரிவித்தார்.

மரண தண்டனை வழங்குவது லிபரல்வாத கொள்கைக்கு எதிரானது என்று கூறுபவர்களுக்கு, பாடசாலை மாணவர்கள் கூட போதைப்பொருளுக்கு பலியாகி விட்டதாகவே கூற வேண்டியுள்ளதாகவும் எனவே சிங்கப்பூரில் தற்போதுள்ள சட்டங்கள் கொண்டு வரப்பட்டு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் இல்லாதொழிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்பிருந்த தலைவர்களைப்போல் இலத்திரனியல் திரைகளைப் பார்த்து பேசுவது, ஒருவரின் மேற்பார்வையில் பேசுவது, பேச்சுக்குப் பிறகு பேச்சைத் திருத்தி, மறுவடிவமைத்தல் போன்ற செயற்பாடுகள் தன்னிடம் இல்லை எனவும், தான் சொல்வதெல்லாம் இதயபூர்வமானது எனவும், கூறப்படும் அனைத்தும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வத்தளை, ஜா-எல, கட்டான, நீர்கொழும்பு போன்ற பிரதேச எல்லைகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வலுக்கட்டாயமாக தனதாக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை விரும்பிய வேளையில், கர்தினால் ஆண்டகையும் ஐக்கிய மக்கள் சக்தியுமே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும், இதன் விளைவாகவே குறித்த இடங்களை மக்களுக்காக பெற்றுக்கொடுக்க முடிந்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## எரிபொருள்...

தலைவர் ஜகத் விஜேகுணரத்ன, 600 வரையிலான எரிபொருள் நிரப்பு நிலையங்களை 4 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தொழிற்சங்க நடவடிக்கை குறித்து நேற்று (01) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எரிபொருள் கூட்டுத்தாபன சேவையாளர்கள் கட்சி, தொழிற்சங்க பேதமின்றி இன்று (நேற்று) தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது. எரிபொருள் கூட்டுத்தாபனம் மற்றும் கிளை ஸ்தாபனங்களில் இந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எரிபொருள் கூட்டுத்தாபனம் மாதாந்தம் 500 கோடி ரூபா வருமானத்தை ஈட்டுகிறது. எரிபொருளை கொண்டுவருவதற்கான நிதி எரிபொருள் கூட்டுத்தாபனத்திடம் இருக்கின்றபோதும், 600 வரையிலான எரிபொருள் நிரப்பு நிலையங்களை 4 வரையிலான வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அவ்வாறானவொரு நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால், எரிபொருள் கூட்டுத்தாபன சேவையாளர்களின் தொழில் நிலைமை அச்சுறுத்தலுக்குள்ளாகும். அதுமாத்திரமின்றி, நாட்டின் எரிபொருள் நிறுவனங்கள் வெளிநாட்டு பல்நோக்கு நிறுவனங்களுக்கு உரித்தாகிவிடும் என்ற பயமும் எங்களுக்கு இருக்கிறது.

அதுமாத்திரமின்றி, அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள வரிக்கொள்கையினால் பாரிய அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளோம். இவ்விரு பிரதான விடயங்களை மையமாக கொண்டே இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவை வழங்குகிறோம்.

இதனால், ஒருவேளை நாளாந்த எரிபொருள் விநியோகம் ஸ்தம்பிதமடையலாம். அதனூடாக, எதிர்வரும் இரு தினங்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடும் நாட்டில் ஏற்படும். அவ்வாறு எரிபொருள் தட்டுப்பாடு நாட்டில் இடம்பெற்றால், தொழிற்சங்கங்களுடனான கலந்துரையாடல்களுக்கு இடமளிக்காமல் இருக்கும் இந்த அரசாங்கமே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றார்.

## 'சர்வஜன...

தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, பாராளுமன்றம் எதிர்வரும் 07ஆம் திகதி மு.ப.9.30 மணிக்கு கூடவிருப்பதுடன், மு.ப 9.30 மணிமுதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணிமுதல் பி.ப 4.00 மணிவரை மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் 2287/28, 2301/17 மற்றும் 2306/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அன்றையதினம் பி.ப 4.00 மணிமுதல் பி.ப 5.30 மணிவரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை குறித்த விவாதம் நடைபெறும்.

மார்ச் 08ஆம் திகதி மு.ப 9.30 மணிமுதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அத்தியாவசிய சேவைகள் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியினால் பிரசுரிக்கப்பட்ட 2321/07ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழான ஒழுங்குவிதி விவாதம் இன்றி நிறைவேற்றப்படும்.

இதனைத் தொடர்ந்து, மு.ப 10.30 மணிமுதல் பி.ப 5.00 மணிவரை மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2290/24ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல், இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2315/46, 2309/40, 2311/08, 2311/18, 2312/77 மற்றும் 2312/78ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 2306/54 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பவற்றை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், அரசின் பல்வேறு சட்ட நிறுவனங்களின் ஆண்டு அறிக்கைகள் தொடர்பான 24 பிரேரணைகளை முன்வைப்பதற்கும், தனிநபர் சட்டமூலமாக இந்திரா புற்றுநோய் அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டமூலத்தை இரண்டாவது வாசிப்புக்கு முன்வைக்கவும் இங்கு இணங்கப்பட்டது.

இதன் பின்னர் பி.ப 5.00 மணிமுதல் 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மார்ச் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் சர்வஜன வாக்குரிமை தொடர்பாக எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் சபை ஒத்திவைப்பு விவாதத்தை பி.ப 5.30 மணிவரை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார். இந்த இரண்டு தினங்களிலும் மு.ப 9.30 மணி முதல் 10.30 மணிவரையான காலப் பகுதி வாய்மூல விடைகளுக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## 8 வயது சிறுமி...

மேற்படி மதகுரு ஹெட்டிப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த விகாரை ஒன்றில் வசித்து வந்துள்ளார்.

குறித்த பௌத்த மதகுரு சம்பவதினம் "போதி பூஜா" ஒன்றுக்காக வந்திருந்த சிறுமி ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டியே சிறுமியின் உறவினர்களால் குறித்த மதகுரு தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான மதகுரு சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

ஹெட்டிப்பொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அரசாங்கம் நூறு மீற்றர்...

தூரம் ஓட தயாரானால், நாங்கள் மரதன் ஓட தயாராகியே இந்தப் போட்டியில் களமிறங்கினோம். எதிர்வரும் மே மாதத்தில் நிச்சயமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறும். ஒரு வருடமே ரணிலும் இந்த அரசாங்கமும் ஆட்சியில் நீடிக்கும்' என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் தலைவருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பொலன்னறுவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

எதிரிகள் என்றுமில்லாதவாறு குழப்பமடைந்திருக்கிறார்கள். இலங்கை வலாற்றில் தேர்தல் குறிப்பிட்ட திகதியில் இடம்பெறாமல் இருந்தது இல்லை. தேர்தலுக்கான பணத்தை கொடுக்க வேண்டாம் என்று திறைசேரியின் செயலாளருக்கு அறிவித்திருக்கிறார்கள். அதேபோன்று, வரலாற்றில் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு நெருக்கடி ஏற்படுத்தப்பட்டதும் இல்லை. தேர்தலை தடுப்பதற்காக எதிரி அவரினால் மேற்கொள்ளக்கூடிய சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறார்.

ரணில்- ராஜபக்ஷக்களினால் சஜித் பிரேமதாசவுக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை. 75 ஆவது ஆண்டுகளின் பின்னர் நாட்டு மக்கள் தமக்கான முகாமொன்றை அமைத்து, அவர்களுக்கான அரசியல் கட்சியொன்றை தெரிவு செய்திருக்கிறார்கள். அதனைக் கண்டே அவர்கள் குழப்பமடைந்துள்ளார்கள். தேர்தலை காலந்தாழ்த்துவதற்கான பிரதான காரணமும் இதுவாகும்.

பொது மக்களின் யுகத்தில் அபிவிருத்தியின் ஆரம்பமே இடம்பெறப்போகிறது. எச்சரிக்கை விடுக்கிறார்கள், அச்சுறுத்தல் விடுக்கிறார்கள், சூழ்ச்சி செய்கிறார்கள். ஆனால் அவற்றைக் கண்டு நாங்கள் அஞ்சப்போவதில்லை. இவர்களிடமிருந்து நாட்டை மீட்டு, வெற்றியை நோக்கி நகர்த்திவிட்டே ஓய்வோம்.

தேர்தலை காலந்தாழ்த்தினால் மக்கள் விடுதலை முன்னணியின் மீள் எழுச்சியை நிறுத்திவிடலாம் என்று ரணில் விக்கிரமசிங்க கருதுகிறார். ரணில் பாவம். தேர்தலை காலந்தாழ்த்தும் ஒவ்வொரு நாளும் திசைக்காட்டி எழுச்சி பெறுமே தவிர, வீழாது என்பதை ரணில் விக்கிரமசிங்க நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நூறு மீற்றர் தூரம் ஓடுவதற்கு நீங்கள் தயாராகும்போது, மரதன் ஓட்டப்போட்டிக்கான தயாரிலேயே இந்தப் போட்டியில் கலந்துகொண்டோம் என்பதை ரணில் கவனத்தில் கொள்ளவேண்டும். தேர்தலை காலந்தாழ்த்தியதும், வீடுகளுக்கு சென்று நாங்கள் உறங்கிவிடுவோம் என்றே அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார். முட்டாள்தனத்துக்கும், பொய்களுக்காகவும் பின்வாங்கப்போவதுமில்லை.

மக்கள் குழப்பமடைய வேண்டியதில்லை. மே மாதத்தின் பின்னரான தினமொன்றை தேர்தலை நடத்துவதற்கு அறிவிப்பார்கள். மார்ச்சில் தேர்தலை நடத்தமாட்டார்கள் என்பதை அவர்களின் செயற்பாடுகளில் இருந்து புரிந்தே வைத்துள்ளேன். ஏப்ரலிலும் தேர்தல் இடம்பெறாது.

3ஆம் திகதி (நாளை) தேர்தல் ஆணைக்குழு ஒரு தீர்வை வழங்கும். இந்த அனைத்து விளையாட்டுகளுக்கும் ஒருவருடமே கால அவகாசம். ரணிலுக்கும் இந்த அரசாங்கத்துக்கும் ஒரு வருடமே கால அவகாசம். ஒரு வருடத்தில் இந்த அரசாங்கம் மாற்றியமைக்கப்படும் என்றார்.

## நாடகத்தை...

நாடகத்தை தாங்கிக்கொள்ள முடியாமல் இருக்கிறது. ஜனாதிபதியின் செயற்பாடுகளை, அவரின் செயலகத்தோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் வந்து நாடகம் நடிக்க முயற்சிக்கக்கூடாது. பாராளுமன்றம் அவரின் நாடகத்தை அரங்கேற்றம் செய்யும் இடமும் இல்லை என்று சுதந்திர மக்கள் கூட்டணியின் தலைவரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

நாடகங்களை நிறுத்திவிட்டு தேர்தல் ஆணைக்குழு கோரும் 1.1 பில்லியன் ரூபாவை விடுவித்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கடந்த காலங்களில் இடம்பெற்ற எதிர்ப்புகளை, பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணியின் கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றிருந்தது. அந்த கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயமே. இந்த நெருக்கடி நிலைமையினால் ஒட்டுமொத்த மக்களும் பாதிப்படைந்துள்ளார்கள். இவ்வாறான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் ஜனாதிபதியின் நாடகத்துக்கு முடிவில்லாமல் இருக்கிறது. ஜனாதிபதி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதற்கு பதிலாக பாராளுமன்றத்துக்கு வந்து, காற்சட்டையின் பைக்குள் கைகளை வைத்துக்கொண்டு, தன்னைத்தானே சுற்றிச்சுற்றி தேர்தலை நடத்த முடியாது, அதற்கு பணமும் இல்லை என்று கூறி நாடகம் நடிப்பதை பார்க்கும்போது, ஏனைய சகல பிரச்சினைகளையும் விட கஷ்டத்தை ஏற்படுத்துகிறது.

தாங்கிக்கொள்ள முடியா வரிச் சுமை, மின் கட்டண அதிகரிப்பு என பல்வேறு பிரச்சினைகளின் மத்தியில், கைவிடப்பட்டுள்ள நிலையில் இருக்கும் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை விட, பாராளுமன்றத்தில் ஜனாதிபதி நடத்தும் நாடகத்தை பார்த்து கவலைக் கொள்கிறார்கள். ஜனாதிபதியின் நாடகங்களை பார்க்க மக்கள் தயாராகவும் இல்லை.

பாராளுமன்றம் என்பது மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் நிறுவனம். அது ஜனாதிபதி நகைச்சுவை செய்யும் இடமல்ல.

ஆகவே, மக்களின் கஷ்டங்கள் அறிந்து வைத்திருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரின் செயற்பாடுகளை ஜனாதிபதி செயலகத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். பாராளுமன்றத்துக்கு வந்து நாடகம் நடிக்க தயாராகக்கூடாது. பாராளுமன்றம் நாடகத்துக்கான அரங்கம் இல்லை.

குறைந்தது 1.1 பில்லியன் ரூபாவை கொடுத்தல் தேர்தலை நடத்த தாங்கள் தயாராக இருப்பதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது. எனவே, 1.1 பில்லியன் ரூபா திறைசேரியில் இல்லை என்று குறிப்பிடுகிறார்கள் என்றால் அதனை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. திறைசேரியில் இந்த நிதிக் கூட இல்லை என்றால், ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நிதியும் இல்லாமல் இருக்க வேண்டும்.

தொடர்ந்தும் நிதி இல்லை என்று குறிப்பிட்டுக்கொண்டு, ஊழல் செய்வதை நிறுத்திவிட்டு மக்களின் உண்மையான நிலைப்பாட்டை வெளியிடுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ஒரு காலப்பகுதியில் இடம்பெற்றது போன்று, வேறு வகையிலான எதிர்ப்புகள் எழலாம். அந்த எதிர்ப்பு குரல்கள் அவ்வளவு தூரம் சிறந்ததாக அமையாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் - என்றார்.

## வரி செலுத்தாதவர்கள்...

தொடர்பில் நாடு கவனம் செலுத்தும் இவ்வேளையில், வரிகளை விதித்து வருமானம் ஈட்டுவது மற்றும் அவ்வாறு வரி செலுத்தத் தவறியவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. வரி வசூல், வெற்றிடங்கள் போன்ற பல விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

## படுகொலைக்...

இது தொடர்பான வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேஷ் வீரமன் இந்த தீர்ப்பை வழங்கினார்.

2003ஆம் ஆண்டு ஜூன் 7ஆம் திகதி கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவரைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் சட்டமா அதிபர் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

எனினும், வழக்கின் 4ஆவது பிரதிவாதி நீதிமன்றத்தை தவிர்த்துள்ளதால், அவரை கண்டதும் கைது செய்யுமாறு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## மண்ணெண்ணெய்...

அதற்கமைய 464 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட தொழிற்துறைகளுக்கு பயன்படுத்தும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் புதிய விலை 330 ரூபாவாகும்.

எவ்வாறாயினும், பெட்ரோல் மற்றும் டீசல் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை என இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## 10 பேர் அமைச்சர்களாக...

எஸ்.பி. திசாநாயக்க கூறியுள்ளார். தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

காமினி லொக்குகே, ஜனக பண்டார தென்னக்கோன், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எஸ்.எம்.சந்திரசேன, சி.பி. ரத்நாயக்க, ரோஹித அபேகுணவர்தன மற்றும் சரத் வீரசேகர ஆகியோர் அமைச்சர்களாக விரைவில் பதவி வகிப்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## நலன்புரி...

கள உத்தியோகத்தர்களைக்கொண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 3.7 மில்லியன் பேர் பயன்பெற விண்ணப்பித்திருந்தாலும், இதுவரை 65,000 பேர் மாத்திரமே மக்கள்தொகை கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு கள உத்தியோகத்தர் ஒருவருக்கு 300 ரூபா சம்பளம் வழங்கப்படுகின்ற போதிலும், சில தொழிற்சங்கங்களைச் சேர்ந்த கள உத்தியோகத்தர்கள் பல்வேறு காரணங்களை முன்வைத்து இந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்தாமல் செயற்படுவதாக நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பயனாளிகளின் பெயர்களை பயனாளிகள் பட்டியலில் இருந்து நீக்குவதற்காக பயனாளிகளிடம் இருந்து உரிய தகவல்கள் சேகரிக்கப்படுவதாக சில கள அதிகாரிகள் தவறான தகவல்களை பரப்புவதால், சில விண்ணப்பதாரர்கள் இதற்கான தகவல்களை வழங்க தயங்குவதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, இவ்வாறான பொய்ப் பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாற வேண்டாம் எனவும், தகுதியுடையவர்களாக இருந்தால், மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறும் நிதியமைச்சு மக்களைக் கேட்டுக் கொள்கிறது.

மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்பவர்கள் மாத்திரமே சமுர்த்தி உட்பட 52 நலத்திட்ட உதவிகளை பெற்றுக்கொள்ள தகுதியுடையவர்கள் என வலியுறுத்தப்படுகிறது.

சமுர்த்தி மற்றும் ஏனைய நலன்புரி உதவிகளை பெற்றுக்கொள்பவர்கள் தாம் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கோ அல்லது கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திற்கோ சென்று மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அமைச்சு கேட்டுக்கொள்கிறது.

## உயிர்த்த ஞாயிறு...

எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈட்டினை வழங்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் நிராகரித்து, அவற்றிலிருந்து தன்னை விடுவித்து உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் இந்த மேன்முறையீடு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

போதியளவு புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெற்றும் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அதற்கமைய, போதுமான புலனாய்வுத் தகவல்கள் இருந்தும் உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்களை தடுக்க தவறியதன் ஊடாக, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சிசிர மெண்டிஸ் ஆகியோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் கடந்த ஜனவரி 12ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாவை நஷ்டஈடாக செலுத்த வேண்டுமெனவும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தலா 75 மில்லியன் ரூபாவையும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாவையும் , சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாவையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடாகச் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.02.28
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5045 | ரூ. 41,314,514.00 | B | 9 4 5 8 5 8 |
| கொவிசெத | 3287 | ரூ. 82,753,408.00 | S | 15 21 54 55 |
| ஜாதிக சம்பத | 1500 | ரூ. 10,073,484.80 | (வெற்றி இலக்கினம்) | 7 9 0 8 1 8 |
| தன நிதானய | 1075 | ரூ. 85,606,875.20 | L | 10 26 61 72 |
| ராசி சுப பலன் (Handahana) | 354 | ரூ. 2,665,311.00 | மேஷம் (விசேட இலக்கினம்: மேஷம்) | 13 31 52 53 |
| மெகா பவர் | 1393 | ரூ. 303,871,962.00 (அடுத்த மெகா சுப்பர் பரிசு) | N (சுப்பர் இலக்கம் 11) | 02 31 53 79 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# அராலியில் மோட்டார்குண்டு மீட்பு



வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி வள்ளியம்மை பாடசாலைக்கு அருகாமையிலுள்ள வீட்டுக் காணி ஒன்றில் துருப்பிடித்த நிலையிலான மோட்டார் குண்டு ஒன்று நேற்று (01) கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த வீடானது சில வருடங்களுக்கு முன்னர் அராலி மேற்கு, வட்டுக்கோட்டை ஜே/160 கிராம சேவகர் அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில், குறித்த காணியின் உரிமையாளரால் குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், நீதிமன்றத்தின் அனுமதியின் பின்னர் குறித்த குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் மீதான பதிவு, மீள் புதுப்பித்தல் கட்டணங்கள் அதிகரிப்பு

தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் மீதான உரிமங்களைப் பதிவுசெய்தல் மற்றும் மீள் புதுப்பித்தல் கட்டணத்தை அதிகரித்து வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்ப பதிவுக் கட்டணமான 15 ஆயிரம் ரூபா 35 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, குறித்த வர்த்தமானி அறிவித்தலின்படி புதிய கட்டணமாக 50 ஆயிரம் ரூபா அறவிடப்படவுள்ளது.

மேலும், காலாவதியான உரிமத்தை மீள் புதுப்பித்தல் கட்டணமான 15 ஆயிரம் ரூபா 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உரிமம் காலாவதியான முதல் மாதத்தில் தாமதக் கட்டணம் 10 ஆயிரம் ரூபாவாகவும், உரிமம் முடிந்த 31 மற்றும் 90 நாட்களில் 25 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 90 நாட்களுக்கு மேலான தாமதக் கட்டணமாக 35 ஆயிரம் ரூபா அறவிடப்படவுள்ளது. இந்தத் திருத்தங்கள் கடந்த மாதம் 20ஆம் திகதிமுதல் அமுலுக்கு வரும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பெருந்தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பம்

மலையக பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்களுக்கு இலவசமாக சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (01) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரனின் பங்குபற்றலோடு, பூண்டுலோயா பேர்லன்ஸ் தோட்டத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் காணொளி மூலமாக நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில்,

மலையக பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள ஆயிரத்து 300 சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள சுமார் 23 ஆயிரம் சிறார்களை இலக்குவைத்து எமது அமைச்சின் கீழ் சத்துணவு வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இதற்கமைய ஒரு வயதுமுதல் 5 வயதுவரையான சிறார்களுக்கு இலவசமாக காலையில் சத்துணவு வழங்கப்படும்.

மலையக சிறார்கள் மத்தியில் போஷாக்கின்மை பிரச்சினை காணப்படுகின்றது. அதற்கானதொரு தீர்வாகவே இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

2022 டிசம்பர் மாதமளவில் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு 64.4 வீதமாக காணப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிறப்பான தலைமைத்துவத்தால் தற்போது அது 60.1 வீதமாக குறைவடைந்துள்ளது. அத்துடன், 57.4 வீதமாக காணப்பட்ட பணவீக்கமும் 54.4. வீதமாக குறைவடைந்துள்ளது. இதனால் எதிர்காலத்தில் பொருட்களின் விலைகள் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உணவு பணவீக்கம் அதிகரிப்பு மலையக மக்களுக்கு பெரும் பாதிப்பாக அமைந்தது. எனவே, இத்திட்டம் அவர்களுக்கு சிறு ஆறுதலை வழங்கும் என நம்புகின்றோம். சத்துணவு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு உதவியளித்த உலக வங்கி மற்றும் மகளிர் விவகார மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கு மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

6 மாதங்களுக்கே இத்திட்டம் எனக் கூறப்பட்டாலும், அதனை நிரந்தரமாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அனுமதி அளித்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிர்வாக ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து அதிகாரிகளுக்கும் மலையக மக்களின் சார்பில் நன்றிகள் - என்றார்.

# மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட பேராதனைப் பல்கலை மாணவி உயிரிழப்பு



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட இறுதியாண்டில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டதன் காரணமாக உயிரிழந்துள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (28) இரவு குறித்த மாணவி சுகயீனமுற்றிருந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மலலசேகர விடுதியில் குறித்த மாணவி இருந்த நிலையில், அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் நேற்று (01) காலை உயிரிழந்துள்ளார்.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த வினோதி டி சில்வா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் அவர் சில காலமாக மன அழுத்தத்தினால் சிகிச்சைபெற்று வந்தவர் எனவும் பல்கலைக்கழக நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது.

## தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் மாசி மாதம் 18ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** — இன்ப அனுபவங்களால் மன நிம்மதி அடைவீர்கள், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**ரிஷபம்** — எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளிக்குமளவு பணம் இருக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

**மிதுனம்** — குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும் நாள், சில முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

**கடகம்** — தேவையற்ற அலைச்சல்களால் விரக்தியடைவீர்கள், உங்கள் பணம், பொருள் நஷ்டமேற்படலாம்.

**சிம்மம்** — போட்டி பந்தயங்களில் திடீர் பண வரவு ஏற்படும் நாள், தொழில் வகையில் சகாக்களின் உதவிகள் கிட்டும்.

**கன்னி** — தொழில் வகையில் திட்டமிட்ட காரியத்தை இன்று நிறைவேற்றுவீர்கள், குடும்ப உறவுகளால் மகிழ்ச்சி.

**துலாம்** — உடலுழைப்பு அதிகமாக தேவைப்படும் நாள், எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ளாதீர்கள்.

**விருச்சகம்** — திட்டமிட்ட காரியத்தினை நடைமுறைப்படுத்துவதில் பல தடைகளை சந்திப்பீர்கள். எதற்கும் நிதானம் வேண்டும்.

**தனுசு** — உங்கள் பங்குதாரர்களால் அதிக இலாபங்களை அடைவீர்கள், காதலில் வெற்றிவாகை சூடுவீர்கள்.

**மகரம்** — நண்பர்களோடு சந்தோஷமாக விருதுண்ணுவீர்கள், நீண்டநாள் கடன் இன்று தீரப்போகிறது.

**கும்பம்** — உங்கள் மனக்குறையை மற்றவர்களிடம் கொட்டிவிடுவீர்கள், பிள்ளைகளால் மனக்கவலை அடைவீர்கள்.

**மீனம்** — வீடு வாகனங்களால் சற்று செலவுகள் அல்லது தொல்லைகள் உண்டு, ஆனாலும் குடும்ப சுகம் உண்டு.

| | |
|---|---|
| **திதி** | : தசமி மு.ப.6.40 வரை பின் ஏகாதசி |
| **நட்சத்திரம்** | : திருவாதிரை பி.ப.12.43 வரை பின் புனர்பூசம் |
| **யோகம் :** | மரண யோகம் (சுப காரியம் நன்மை இல்லை) |
| **வார சூலை** | : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : மு.ப.11.25 - 12.25 மணி வரை |
| **ராகு காலம்** | : 1.55-3.25 மணி வரை |
| **எமகண்டம்** | : 6.25 - 7.55 மணி வரை |
| **குளிகை** | : 9.25 - 10.55 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிர்ஷ்டம்** | :மிருகசீரிடம், சித்திரை,அவிட்டம், திருவாதிரை,சுவாதி, சதயம் (பிறந்தவர்களுக்கு) |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# சிறுத்தை தாக்கிய தொழிலாளி காயங்களுடன் வைத்தியசாலையில்



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

பொகவந்தலாவை டியன்சின் தோட்டப் பகுதியில் முதலாம் இலக்க தேயிலை மலையில் தொழில் புரிந்துகொண்டிருந்த ஆண் தொழிலாளி ஒருவர் மீது சிறுத்தை பாய்ந்து தாக்கியதில் தாக்குதலுக்குள்ளானவர் பொகவந்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று (01) முற்பகல் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான பொகவந்தலாவை டியன்சின் தோட்ட முதலாம் இலக்க தேயிலை மலையில் கிருமிநாசினி தெளிக்கும் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த டியன்சின் தோட்டத்தைச் சேர்ந்த 30 வயதுடைய சிறில் என்ற தொழிலாளியே காயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் தேயிலை மலையில் மறைந்திருந்து சிறுத்தை தாக்கியுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, காயங்களுக்குள்ளான ஆண் தொழிலாளியை பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையிலிருந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஏ.எஸ்.கே.ஜெயசூரிய தெரிவித்தார்.

# மரதகஹமுல களஞ்சியசாலையின் 115 அரிசி விற்பனை நிலையங்களின் நிர்மாணப்பணிகளை விரைவுபடுத்த பணிப்பு

மரதகஹமுல அரிசி களஞ்சியசாலையுடன் இணைக்கப்பட்டுள்ள 115 அரிசி விற்பனை நிலையங்களின் நிர்மாணப்பணிகளின் எஞ்சிய பணிகளை நிறைவுசெய்யுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவிக்கையில், மரதகஹமுல அரிசி களஞ்சியசாலையின் நிர்மாணப் பணிகளை துரிதமாக முடித்து, பிரதேசத்தின் வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக சங்கங்களை இணைத்து மக்களுக்கு பயனுள்ள சேவையை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

மரதகஹமுல அரிசி களஞ்சியசாலையுடன் இணைக்கப்பட்டுள்ள 115 அரிசி விற்பனை நிலையங்களின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்வதற்குத் தேவையான 115 மில்லியன் ரூபா நிதியை அங்கீகரிக்கும் அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் வலியுறுத்தினார்.

35 வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட மரதகஹமுல அரிசி வியாபாரிகள் அரிசி விற்பனை செய்வதற்கான வசதிகளுடன் கூடிய நியமிக்கப்பட்ட இடமின்மை மற்றும் அரிசியை களஞ்சியப்படுத்த இடமில்லாமல் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, 2014ஆம் ஆண்டு இந்த அரிசி களஞ்சியசாலை அமைப் பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த பெசில் ராஜபக்ஷவால் இது செய்யப்பட்டது.

ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் செயற் பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2015ஆம் ஆண்டு இல்லாதொழிக்கப்பட்டது. அதேநேரத்தில், இந்தத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் தற்காலிகமாக நிறுத்தியது.

இத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டதன் காரணமாக, திட்டமிடல் கட்டணத்துடன் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக 7 கோடியே 23 இலட்சத்து 13 ஆயிரத்து 377 ரூபா 57 சதம் சம்பளம், மேலதிக நேரம் மற்றும் அது தொடர்பான செலவினங்களுக்காக 8 கோடியே 58 இலட்சத்து 87 ஆயிரத்து 155 ரூபா 29 சதம் தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் செலவினங்களுக்காக ஒரு கோடியே 35 இலட்சத்து 73 ஆயிரத்து 777 ரூபா 72 சதம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார்.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்துள்ள இவ்வேளையில் வீண் செலவுகளை மேற்கொள்வது நியாயமற்றதாகும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

எனவே, உரிய தொகைக்கு அமைச்சரவை அனுமதி அளித்தவுடன், இந்த அரிசி களஞ்சிய சாலையின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

சுமார் இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பளவில் புதிய அரிசி களஞ்சியசாலை கட்டும் பணி தொடங்கியுள்ளது. 115 கடைகளுடன், வியாபாரிகளுக்கு வாகன நிறுத்துமிடம், ஓய்வு அறை, உணவகம் ஆகியவையும் நிர்மாணிக்கப்படும்.

# மைத்ரி – தயாசிறிக்கு இடைக்காலத் தடையுத்தரவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகர ஆகியோருக்கு எதிராக மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் நேற்று (01) இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளிலிருந்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை தடுக்கும் வகையில் இந்த இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிபதி பிராங்க் குணவர்தன மற்றும் நீதிபதி எம்.பி.சமத் மொரேஸ் என்ற நீதிபதிகள் கொண்ட குழு இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.

# காணாமல்போன துப்பாக்கியுடன் விமானப்படைச் சிப்பாய் கைது

விமானப்படைக்குச் சொந்தமான துப்பாக்கியொன்று கடந்த வருடம் காணாமல் போயிருந்த நிலையில் குறித்த துப்பாக்கியுடன் விமானப்படைச் சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சீகிரிய விமானப்படைத் தளத்தில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கடந்த வருடம் நவம்பர் மாதம் 4ஆம் திகதி முகாமில் இருந்து ரி-56 ரக துப்பாக்கி காணாமல்போனதாக முறைப்பாடு கிடைத்தது.

இதன்படி, பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின்பேரில், இது தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற விசாரணைப் பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீண்ட விசாரணையில், குறித்த துப்பாக்கியை அதே முகாமில் கடமையாற்றும் தம்புள்ளையில் வசிக்கும் சிப்பாய் ஒருவரே திருடியுள்ளதாக தெரியவந்துள்ளது.

பின்னர், தம்புள்ளை ரிதியகம பிரதேசத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த குறித்த துப்பாக்கி, இரண்டு மகசீன்கள் மற்றும் துப்பாக்கி தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

# கச்சதீவு அந்தோனியார் ஆலய பெருவிழா ஏற்பாடுகள் நிறைவு

கச்சதீவு அந்தோனியார் ஆலய பெருவிழா தொடர்பான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவுபெற்றுள்ளன - என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் நேற்று முன்தினம் (28) ஊடகங்களுக்கு விடுத்த விசேட அறிவிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவானது யாழ்ப்பாண மாவட்ட செயலாளரது ஒருங்கிணைப்பில் யாழ்ப்பாண ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் முழுமையான ஒத்துழைப்புடன் மார்ச் 03 மற்றும் 04ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேலும், கச்சதீவு உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கான மார்ச் 03 ஆம் திகதிய இரவு உணவு, மார்ச் 04ஆம் திகதி காலை உணவு மற்றும் மீள் பயணத்திற்கான சிற்றுண்டி என்பன வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன – என்றார்.

# அரசின் வரிவிதிப்புக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்





படப்பிடிப்பு : கிறிஷான் காரியவசம்





படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே





படப்பிடிப்பு : ஏஷான் தஸநாயக்க





படப்பிடிப்பு : ஏஷான் தஸநாயக்க

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மார்ச் 02ஆம் திகதி, வியாழக்கிழமை**

# கயிற்றை விழுங்கும் அமெரிக்கா!

2021ஆம் ஆண்டில் இலங்கையில் பயங்கரவாதச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்ற போதிலும், அமெரிக்காவினால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மறுசீரமைக்கப்படுகின்றமை, இன்னும் அச்சுறுத்தல் என்று இலங்கை அரசாங்கம் கருதுவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான பயங்கரவாதம் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பயங்கரவாத எதிர்ப்புத் திறன்களை மேம்படுத்துவதற்கும், அமெரிக்கா மற்றும் பிற சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் எல்லைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் இலங்கை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமெரிக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்தின் எழுச்சி இலங்கையில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தாலும், விடுதலைப் புலிகளின் நீண்டகால செயற்பாடுகள் இலங்கையிலும் சர்வதேச அளவில் புலம்பெயர்ந்த நாடுகளிலும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் என்று இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் இலங்கைக்கு எவ்வாறு ஆதரவளிப்பது என்பது குறித்து குவாட் நாடுகளான இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா என்பவற்றுடனும் ஒரே எண்ணத்தை கொண்ட பங்காளிகளுடனும் கலந்துரையாடியுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் இந்த அறிக்கையானது இலங்கையின் புலிப்பூச்சாண்டிக்கு அமெரிக்கா ஒத்தூதுவதை பகிரங்கமாகவே காட்டுகிறது. கடந்த மாதம் தமிழகத்தில் வெளியான பிரபாகரன் உயிர்த்தெழுந்த கதைகளுக்குப் பின்னால் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பதால் அதனையும் இப்போது கவனத்திற்கொள்ள வேண்டியிருக்கிறது.

இலங்கையில் சிங்கள அரசியல் கட்சிகளுக்கு அரசியல் செய்யவேண்டுமானால் புலிகள் இயக்கம் என்ற பெயர் இருத்தல் வேண்டும். புலிகளின் கோரிக்கை என்ன, அவர்கள் எதற்காகப் போராடினார்கள் என்ற எந்த ஆராய்வையும் செய்யாமல் எழுந்தமானமாக அவர்களை பயங்கரவாதிகளாக பட்டியலிட்டு அவர்களை வைத்து அரசியல் செய்யும் வேலைகளை தொடர்ந்து இலங்கை செய்துவருகிறது. அமெரிக்கா மட்டுமல்ல, இந்தியா உட்பட்ட நாடுகளும் இதில் இலங்கை கூறுவதையே கேட்கின்றன.

இலங்கைப் படைகளுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குமான சண்டை கடந்த 2009ஆம் ஆண்டு நிறைவுற்ற பின்னர் இதுவரை விடுதலைப்புலிகளின் மீளெழுச்சி நடந்துள்ளதா? உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ புலிகள் இயக்க முன்னாள் தளபதிகள் சரணாகதி அடைந்ததைத் தவிர இயக்கத்தை மற்றுமொரு போராட்டத்திற்கு கட்டியெழுப்பினரா? அல்லது மக்கள் மத்தியில் இன்னுமொரு ஆயுதப் போராட்டத்திற்கான கருத்துருவாக்கம் ஏற்படுத்தப்பட்டதா? இவற்றையெல்லாம் தேடி ஆராய்ந்து உண்மை நிலைமையை கண்டறிய அமெரிக்காவால் முடியாததா ?

இப்படியான உண்மை நிலைமையை கண்டறியாமல், வெறுமனே இலங்கை அரசாங்கத்தின் அறிக்கைகளை வைத்துக்கொண்டு அமெரிக்கா தீர்மானங்களை எடுக்குமாயின், கோட்டாபயவை பதவியிலிருந்து விரட்டியதும் புலிகள் இயக்க ஆதரவாளர்கள்தான் என்று இலங்கை ஒரு காலத்தில் கூறி அதையும் அமெரிக்காவை நம்பவைக்கும். அதையும் நம்பிக்கொண்டு தனது இராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் சேர்க்கலாம் வொஷிங்ரன்.

அமெரிக்காவானது இலங்கை அரசாங்கம் கொடுக்கும் இற்றுப்போன கயிறுகளை விழுங்காமல், பொறுப்பான வகையில், வல்லரசு நாடு என்ற அடிப்படையில் தீர்மானங்களை எடுத்தல் வேண்டும்.

தமிழர் போராட்டம் நீர்த்து, அழிந்துபோவதற்கு உதவிய முதன்மையான நாடு என்ற வகையில் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்க இலங்கைக்கு அழுத்தங்களையும் கொடுக்க வேண்டும் அமெரிக்கா. ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் இன்னும் பல நாடுகளிலும் அமைதியை நிலைநாட்டல் என்ற பெயரில் அமெரிக்கா செய்த வேலைகளையும் பயங்கரவாதம் என்றே ஜனநாயக விரும்பிகள் சொல்கின்றனர். அந்தளவு பயங்கர வேலைகளை புலிகள் செய்யவில்லை என்பதையும் வொஷிங்ரன் நினைவிற்கொள்தல் நன்று.



# சொந்த நிலத்தில் மக்களை அச்சமின்றி வாழவைத்தவர்கள்



**மு.தமிழ்ச்செல்வன்**

மழை விட்டும் துவானம் விடவில்லை என்பது போல் மிக மோசமான யுத்தம் 2009 இல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 13 வருடங்களை கடந்த நிலையிலும், யுத்தத்தின் எச்சங்களும் அதன் பாதிப்புகளும் இன்னும் முழுமயாக நீங்கியதாக இல்லை. இதில் முக்கியமானது யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளும் வெடிக்காத வெடிப்பொருட்களுமாகும்.

இதன் தாக்கம் காரணமாக இன்று தங்களது சொந்த நிலங்களில் குடியமர முடியாமலும் விவசாயம் செய்ய முடியாமலும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உள்ளனர். இதிலிருந்து மக்களை முழுமையாக மீட்கும் மிக முக்கியமாக மனிதாபிமான பணியை ஜப்பான் அரசின் நிதியுதவித் திட்டத்தின் (GGP) டாஷ் (Dash) நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. ஒரு அரச சார்பற்ற கண்ணிவெடியகற்றும், மனிதாபிமான உதவி வழங்கும் நிறுவனமாக டாஷ் தனது பணிகளை வடக்கில் மேற்கொள்கிறது.

2010ஆம் ஆண்டிலிருந்து கண்ணிவெடிகளை அகற்றி வடமாகாணத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளான புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்திற்கு பெரிதும் உதவி வருகிறது. தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி இதுவரை சுமார் 15.5 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதில் முக்கியமாக கிளிநொச்சி பல்கலைக்கழக வளாகம், நெல்வயல் நிலங்கள், ஆற்றங்கரைகள், பள்ளிக்கூட வளாகம், கோயில், ஆனையிறவு உப்புவயல்கள், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மற்றும் கால்நடை மேய்ச்சல் நிலங்கள் போன்றன பாதுகாப்பான கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகளாக அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மற்றும் கிளிநொச்சியில் முகமாலை, முல்லைத்தீவில் மணலாறு மற்றும் கொக்குத்தொடுவாய் பிரதேசங்களில் இதுவரை 357 இடங்களில் முழுமையாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 13 இடங்களில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அத்தோடு, 26 இடங்களில் வெடிக்காத வெடிப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.



அவுஸ்ரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன் தன்னுடைய கண்ணிவெடி அகற்றும் வேலையை ஆரம்பத்தில் தொடங்கிய டாஷ் தற்போது ஜப்பான், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஜேர்மனிய குடியரசு மற்றும் சுவிட்ஸர்லாந்தின் கண்ணிவெடி அகற்றும் உலகத்திற்கான அறக்கட்டளை என்பனவற்றின் நிதியுதவியுடன் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

டாஷ் நிறுவனத்தில் ஏறத்தாழ 433 பேர்களுடன், நன்கு பயிற்சியளிக்கப்பட்ட 13 கண்ணிவெடி அகற்றும் குழுக்கள், 4 தர உத்தரவாத மற்றும் ஆய்வுக்குழுக்கள், ஒரு வெடிபொருள் சம்பந்தமான விழிப்புணர்வுக் குழு மற்றும் ஒரு பணியாளர் மேம்படுத்தல் பயிற்சிக்குழு என்பன இயங்கின்றன.

இதன் பிரதான செயற்பாடுகளுடன், மேலும், வெடிபொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் சம்பந்தமான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அவர்களை



பாதுகாப்புடன் இருக்கவும் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

இந்நிறுவனம் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரதான பணியை மேற்கொள்வதோடு, இந்தப் பணியில் ஈடுபடுகின்றவர்களின் வாழ்வாதாரத்திற்கான தொழிலாகவும் இந்த காணப்படுகிறது. இந்தப் பணியாளர்களில் 22 வீதமானவர்கள் பெண்களாவர். குறிப்பாக புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்பவற்றுக்கு கண்ணிவெடி அகற்றும் பணி என்பது அவர்களது வாழ்வாதாரத்திற்கான தொழிலாகவும் அமைகிறது.

இதுவரை கண்ணிவெடி அகற்றப்பட்ட மொத்த நிலப்பரப்பு ஏறத்தாழ 6.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு நிலமாகும் மற்றும் நேரடியாக ப்பயன் அடைந்தவர்களாக 24,301 பேர்களும் மறைமுகப் பயனாளிகளாக 71,083 பேரும் அடங்குவர்.

இந்தக் கண்ணிவெடி அகற்றலில் மொத்தமாக மீட்கப்பட்ட வெடிப்பொருட்களாக 53,325 தனிநபர் கண்ணிவெடிகள், 102 கனரக வாகன கண்ணிவெடிகள், 13,591 வெடிக்காத பொருட்கள் மற்றும் 55,684 சிறிய ஆயுத வெடிபொருட்கள் என்பன கண்டெடுக்கப்பட்டு பாதுகாப்பாக அழிக்கப்பட்டுள்ளன.

யுத்தத்திற்குப் பின்னரான காலத்தில் மிக முக்கியமான மனிதாபிமான பணியாக கண்ணிவெடி அகற்றும் பணியை டாஷ் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதுவொரு வரலாற்றுப் பணியாகவும் அமைந்துள்ளது. மக்கள் நம்பிக்கையோடு தங்களது சொந்த நிலங்களில் குடியேறவும் விவசாயம் செய்யவும் ஜப்பான் உள்ளிட்ட கொடை வழங்கும் நாடுகளில் வாழ்கின்ற மக்களின் உதவியானது, கண்ணிவெடி உள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்கள் தங்களது சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழ வழி சமைத்துள்ளது.

## தவக்கால சிந்தனை



### சீடராகி சீடனாக்க..

ஒலிபெருக்கி ஒலித்தது. மரங்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டன. "இந்த மனிதர்கள் நம்மை வெட்டி எத்தனையோ சிலுவைகளை உருவாக்கிவிட்டார்கள். ஆனால், இந்த மனிதர்களால் ஓர் இயேசுவைக் கூட இன்னும் உருவாக்க முடியவில்லையே..."

ஓர் இளைஞன் கொலைசெய்துவிட்டு இரத்தக்கறையோடு தப்பி, தன் அண்ணனிடம் ஓடி வந்தான். பொலிஸார் அவனைப் பின்தொடர்ந்து துரத்தினர். அவர்கள் அவனை நெருங்கும் முன்னர் அண்ணன் தன் ஆடையை தம்பிக்குக் கொடுத்துவிட்டு தம்பியின் இரத்தக்கறை படிந்த ஆடையை உடுத்திக் கொண்டான். அண்ணனின் உடையைப் பார்த்து சந்தேகப்பட்ட பொலிஸ் அதிகாரி அவனைக் கைதுசெய்து முடிவில் தூக்குத்தண்டனைக்கு அழைத்துச் சென்றார். தூக்கில் தொங்கும் முன்னர் தூர நின்ற தன் தம்பியைப் பார்த்து அண்ணன் சொன்னான், "இனி நீ நீதிமான். இனிமேலாவது எனது பரிசுத்த வாழ்வைக் கற்றுக் கொள்" என்றான். தம்பியின் குற்றத்தை அண்ணன் ஏற்றுக்கொண்டதுபோல் இயேசு நமது குற்றங்களுக்காக - பாவங்களுக்காக தன்னை இழந்தார். இயேசுவின் சிலுவைப் பயணம் வீழ்ச்சியின் அடையாளம் அல்ல. வாழ்வுதரும் எழுச்சியின் முன்னுதாரணம். இயேசுவின் சிலுவைப் பயணம் கோழை மனதின் வெளிப்பாடல்ல. மாறாக வீரத்தின் அடையாளம்.

பகைவரை மன்னியுங்கள் என்று போதித்த ஆண்டவர் இயேசு, மரண வேளையில் கூட "தந்தையே இவர்களை மன்னியும்" என்று கூறித் தமது பகைவர்களை மன்னிக்கின்றார். "செபியுங்கள்" என்று போதித்த இயேசு. விடியற்காலையிலும் பகலிலும் இரவு முழுவதும் செபித்தார். "பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரிய வந்தேன்" என்று கூறிய இயேசு தமது சீடர்களின் காலடிகளைக் கழுவி, தான் ஒரு செயல்வீரர் என மெய்ப்பித்துக் காட்டியுள்ளார்.

## நக்கல் நமசிவாயம்

நிதி இல்லை எண்டு சொல்லவேண்டாம். தேர்தலை நடத்துங்கோ எண்டு பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்குது..! பாகிஸ்தானில் நிதி இல்லாவிட்டாலும் நீதி இருக்குது போல தெரியுது..!




## இன்றைய நாளில்...

- 1815 – 'கண்டி ஒப்பந்தம்' என வழங்கப்படும் ஒப்பந்தத்தின் மூலம் கண்டி இராச்சியம் பிரித்தானியருக்குக் கொடுக்கப்பட்டதை அடுத்து இலங்கை முழுவதும் பிரித்தானியரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. சிறை பிடிக்கப்பட்ட விக்கிரமராஜசிங்கன் என்ற கண்ணுச்சாமி தென்னிந்தியாவில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப்பப்பட்டார்.
- 1930 – மகாத்மா காந்தி உப்புச் சத்தியாகிரகம் ஆரம்பிப்பதற்காக அஹமதாபாத்திலிருந்து குஜராத் கடலோரத்தில் இருந்த தண்டி நோக்கி 240 மைல் நடைப் பயணத்தை ஆரம்பித்தார்.
- 1958 – தி.மு.க. இந்திய மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது.
- 1972 – நாசாவின் பயனியர்-10 விண்கலம் வெளிக் கிரகங்களை ஆராய்வதற்காக புளோரிடாவிலிருந்து ஏவப்பட்டது.
- 1990 – ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவராக நெல்சன் மண்டேலா தெரிவுசெய்யப்பட்டார்.
- 1991 – இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தொலைவில் இருந்து இயக்கப்பட்ட தானியங்கி குண்டு ஒன்றின் மூலம் கொலைசெய்யப்பட்டார்.
- 1995 – யாஹூ நிறுவனமயப்படுத்தப்பட்டது.

# மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களை எதிர்வரும் 4 ஆண்டுகளுக்குள் நடைமுறைப்படுத்த ஆலோசனை



இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபை இணைந்து 2023ஆம் ஆண்டுமுதல் 2026ஆம் ஆண்டுவரையான (2023 – 2026) காலப்பகுதிக்குள் மீள் புதுப்பிக்கத்தக்க 330 வலுசக்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

அரசு நிறுவனங்களால் அனுமதி வழங்கப்பட்ட திட்டங்களை விரைவுபடுத்தவும், அனுமதி கிடைத்தும் நடைமுறைப்படுத்த முடியாதுள்ள திட்டங்களுக்கான தற்காலிக உரிமங்களை இரத்து செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களை செயல்படுத்துவதற்குத் தேவையான உரிமங்கள் மற்றும் அனுமதிகளை ஏனைய அரசு நிறுவனங்களிடமிருந்து பெறுவதற்கான செயல்முறையை விரைவுபடுத்தவும், பெறப்பட்ட உரிமங்களை நீடிக்கவும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர், அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் காஞ்சன இதனைத் தெரிவித்துள்ளார்.

மின்சார அமைச்சு, மின்சார சபை, சூரிய சக்தி அதிகாரசபை, சுற்றாடல் அதிகாரசபை, வன பாதுகாப்புத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, விவசாயத் திணைக்களம், காணி அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு, பிரதேச செயலக அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பெருந்தோட்ட நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இணையம் மூலம் கலந்துகொண்டனர்.

# வவுனியா நகரில் 100 இடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயநிலை

## 20இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள்

வவுனியா நகரில் 20இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 100 இடங்களில் டெங்கு நுளம்பு பெருகும் அபாய நிலைமையும் காணப்படுவதாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் அதிகரித்துள்ள டெங்கு நுளம்பின் தாக்கம் தொடர்பில் வினவியபோதே அவர்கள் இவ்விடயத்தை தெரிவித்தனர்.

வவுனியா நகரப்பகுதியிலுள்ள கடைகள், கடைகளைச் சூழவுள்ள பகுதிகள், கடைகளுக்கு முன்புள்ள வடிகான்கள், கடைகள் அமைந்துள்ள காணி, கடையின் மேல்தளம், மேல் மாடிக் குடியிருப்பு, குளிர்சாதனப் பெட்டியைச் சூழவுள்ள பகுதிகள் போன்ற இடங்களை நீர்தேங்கி டெங்கு நுளம்பு பெருக்கமடையக்கூடிய சூழல் காணப்படாதவாறு தொடர்ச்சியாக சுத்தமாக பேணிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், வவுனியா நகரப்பகுதியில் 20இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர். பெரும்பாலானவர்கள் வெளி மாவட்டங்களில் தொற்றுக்கு உட்பட்டவர் களாக இனங்காணப்பட்டபோதிலும் 3-5 வரையான நோயாளர்கள் வவுனியா நகரப் பகுதியில் தொற்றுக்குள்ளானவர்களாக இனங் காணப்பட்டுள்ளனர்.

மேலும் பார்வீதி, மில் வீதி, இறம்பைக்குளம் பகுதி, ஹொரவப்பொத்தான வீதி போன்ற பகுதிகளில் ஏறத்தாழ 4- 6 வரையான வர்த்தக நிலையங்களில் டெங்குநோய்க்கான பிரதான காணிக்குடம்பி அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒரு வர்த்தக நிலையத்தில் நோயாளி ஒருவரும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நோய் பரம்பலைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமானது. பொதுமக்களின் அக்கறையின்மைதான் இந்த நுளம்பு பெருக்கத்திற்கு காரணமாக இருக்கிறது.

பல தடவைகள் அறிவுறுத்தல் வழங்கியிருந்தும் அவர்களது கவலையீனம் இந்த நுளம்பு உற்பத்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் நோயாளர்கள் உருவாகியுள்ளார்கள். எனவே, தினமும் ஒவ்வொரு குடும்பமும் தமது வீடு, கடை என்பவற்றை சுத்தம் செய்து டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தனர்.

# உலக நீர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே சுவரொட்டிப் போட்டி




2023 Accelerating Change

உலக நீர் தினம் 2023ஐ முன்னிறுத்தி பாடசாலை மாணவர்களிடையேயான சுவரொட்டிப் போட்டியொன்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நடத்தப்படவுள்ளது.

இவ்வருட உலக நீர் தின கருப்பொருளான நீர் மற்றும் சுகாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான மாற்றத்தை துரிதப்படுத்துவதாகும் (Accelerating change to solve the water and sanitation crisis). எனவே, இக்கருப்பொருளுக்கு அமைவாக ஆக்கங்களை மாணவர்கள் தயாரிக்க வேண்டும்.

குறித்த போட்டியில் வெற்றிபெறுகின்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களை ஒன்றிணைத்து கிளிநொச்சியில் இடம்பெறும் உலக நீர் தின நிகழ்வில் வழங்கப்படும்.

போட்டிகள் நான்கு பிரிவாக நடத்தப்படவுள்ளன. அந்தவகையில் பிரிவு 01 தரம் 03 தொடக்கம் 05 வரையும், பிரிவு 02 தரம் 06 தொடக்கம் 09 வரையும், பிரிவு 03 தரம் 10 தொடக்கம்11 வகுப்புகளுக்கும், பிரிவு 04 உயர் தரத்திற்கும் என பிரிக்கப்பட்டுள்ளன.

சுவரொட்டிகள் A 4 அளவுத்திட்டத்தில் தயாரிக்கப்படவேண்டும். கைகளால் தயாரிக்கப்படவேண்டும் (கணினிசார் தொழில்நுட்பங்கள் பாவிக்கப்பட்ட முடியாது) மாணவர்களின் ஆக்கமானது அதிபரினால் அல்லது பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்படுவதோடு, மாணவர் பெயர், தரம், பாடசாலை என்பன தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசில் வழங்கப்படுவதோடு தெரிவுசெய்யப்படும் அனைத்து சுவரொட்டிகளும் நிகழ்வில் காட்சிப்படுத்தப்படும்

ஆக்கங்கள் அனைத்தும் 15.03.2023இற்கு முன்னராக பிரதி பொது முகாமையாளர் அலுவலகம், பிராந்திய சேவைகள் நிலையம், வடக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வவுனியா அல்லது உங்களது பிரதேசத்தில் உள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் நேரடியாகவோ அல்லது dgm.section@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பிவைக்க முடியும்.

# மன்னாரில் பாரம்பரிய நெல் அறுவடை





(மன்னார் நகர் நிருபர்)

அழிந்துவரும் பாரம்பரிய நெல் இனங்களைப் பாதுகாக்கும் முகமாக மன்னார் மெசிடோ நிறுவனத்தினால் கடந்த வருட இறுதியில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஒருதொகை பாரம்பரிய நெல் விதைகள் வழங்கப்பட்டன.

குறித்த நெற்செய்கையின் அறுவடை நேற்று (01) காத்தான்குளம் பகுதியில் மெசிடோ நிறுவன ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

நஞ்சற்ற உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக முற்றிலும் இயற்கைப் பசளைகளை பயன்படுத்திய இயற்கையான முறை பயிர்செய்யப்பட்ட சுவடை என அழைக்கப்படும் பாரம்பரிய மூன்று மாத கால நெல் காத்தான்குள விவசாயிகளால் விதைப்பு செய்யப்பட்டிருந்த நிலையில் மேற்படி அறுவடை பாரம்பரிய முறையில் இடம்பெற்றது.

எந்தவொரு இயந்திர சாதனங்களையும் பயன்படுத்தாது பரம்பரிய முறையில் விதைப்பு மேற்கொண்டு, அருவி வெட்டி சூடு மிதித்து அனைத்தும் இயற்கையான பாரம்பரிய முறைப்படி இடம்பெற்றது.

ஏனைய செய்கைகளை விட சுவடை இன நெல் மூன்று மாத காலப்பகுதிக்குள் அறுவடைக்கு தயாராகும் என்பதுடன், தற்போது மூடை 10,000 ரூபாவுக்கு அதிகமான விலைக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது.

மெசிடோ நிறுவனமானது கடந்த மூன்று வருடங்களாக இவ்வாறு பாரம்பரிய நெல் இனங்களைப் பாதுகாக்கும் முகமாகவும் நஞ்சற்ற விவசாய செய்கையை ஊக்குவிக்கும் முகமாக தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு சீணட்டி, மொட்டைகறுப்பன், சுவடை, பச்சைபாளை போன்ற நெல் இனங்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# முன்னாள் விரிவுரையாளர் சுவர்ணா நவரட்ணம் கௌரவிப்பு



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் சமூக சேவகியுமாகிய சாதனைப் பெண் சுவர்ணா நவரத்தினம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகத்தினரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

கலாசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதான உரைஞராகக் கலந்துகொண்ட அவர், ஆசிரியர்கள் தமது தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொள்வது எப்படி என்பது தொடர்பாக உரையாற்றினார்.

உரை நிறைவில் அவர் கலாசாலைக்கு வழங்கிய சேவைகளுக்காகவும் கோப்பாயில் பெண்களுக்காக 'நவமங்கை நிவாசம்' என்ற பெயரில் மனநல காப்பகம் ஒன்றை அமைத்து செயற்படுத்துவதற்காகவும் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

# யாழ். நகர வாகன நெரிசலை கட்டுப்படுத்த நடவடிக்கை

## பொலிஸ் மா அதிபருடன் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு





யாழ். நகரப் பகுதிகளில் வாகன நெரிசலை தடுப்பதற்கும் வாகனங்களை நிறுத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் எம்.ஆர்.மஞ் சுளா செனரத்துடன் யாழ். வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் யாழ். பொலிஸ் தலைமையகத்தில் நேற்று (01) சந்தித்துக் கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடலில் யாழ். நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன் னால் முறையற்ற விதத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் வர்த்தகர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகளால் பொலிஸ் மா அதிபருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் நகர அபிவிருத்தி அமைச் சால் பெருந்தொகை செலவில் அமைக்கப்பட்ட வாகன தரிப்பிடம் இருக்கும் நிலையில், அதனை செயல்படுத்துவதற்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

நகர வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் நிறுத்தப்படும் வாகனங் களை ஒழுங்குபடுத்துவதற்கு வர்த்தக நிலையங்களிலிருந்து மூன்று அடிக்கு அப்பால் வர்ணக் கோடுகள் அமைப்பதோடு வாகனங்களை அமைக்கப்பட்ட கோடுகளுக்குள் நிறுத்திவைக்க வேண்டும்.

மேலும் பண்டிகை காலங்களில் அதிகளவிலான பொதுமக்கள் நகரத்திற்குள் வரும்பட்சத்தில் வாகனங்களை பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடங்களில் நிறுத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வணிகர் கழக தலைவர் ஜெயசேகரம் யாழ். நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாகன தரிப்பிடத்தில் மேலதிக வாகனங்களை நிறுத்துவதற்கு பொலிஸாரின் உதவியை நாடியுள்ளோம்.

குறித்த வாகன தரிப்பிடத்தில் நீர் வசதிகள், மலசலகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் தூர இடங்களிலிருந்து வருகை தரும் வாகனங்கள் தரித்துச் செல்வதற்கு வசதியாக இருக்கும்.

ஒரு மணித்தியாலத்திற்கு உட்பட்டு நிறுத்தப்படும் மோட்டார்சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களுக்கு எவ்விதமான கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது.

அதற்கு மேலதிகமாக நிறுத்தப் படும் மணித்தியாலங்களுக்கு குறைந்த கட்டணத்தை அறவிட எண்ணியுள்ள நிலையில், அதன் விவரங்கள் தொடர்பில் ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும்.

ஆகவே, யாழ் நகரப் பகுதியில் வாகன நெரிசல்களை குறைப்பதற்கு பாதுகாப்பான வாகனத் தரிப்பிடத்தைப் பயன்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் தமது ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# திருடப்பட்ட நகைகள் – கைபேசியுடன் பருத்தித்துறையில் நபரொருவர் கைது

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்திகை பகுதியில் களவாடப்பட்ட நகை மற்றும் தொலைபேசி என்பன மீட்கப்பட்டது டன், 32 வயதுடைய சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த களவுச் சம்பவம் இடம்பெற்றது. இதன்போது 12 இலட்ச ரூபா பெறுமதியான நகைகளும் கையடக்கத் தொலைபேசி ஒன்றும் களவாடப்பட்டன.

இது குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. குறித்த முறைப்பாடானது காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன்போது சந்தேக நபர் காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, அவர் திருடிய நகைகளை வவுனியாவில் உள்ள இரண்டு நகைக்கடைகளில் விற்பனை செய்தமை தெரியவந்தது. அத்துடன், தொலை பேசியும் வவுனியாவில் விற்பனை செய்யப்பட்டு இருந்த நிலையில் தொலைபேசி மூலமாக களவு வெளிப்பட்டது.

இந்நிலையில், கடையில் விற்கப்பட்டு உருக்கிய நிலையில் காணப்பட்ட நகை மீட்கப்பட்டது. சந்தேகநபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்ட நிலையில், அவரை பருத்தித் துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலாப் பயணியின் ஏழு இலட்ச ரூபா பெறுமதியான உடைமைகள் திருட்டு

(கண்டி நிருபர்)

கண்டியிலிருந்து பண்டாரவளை நோக்கிப் பயணித்த நோர்வே நாட்டுப் சுற்றுலாப் பயணி ஒருவரின் ஏழு இலட்ச ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளதாக நேற்று (1) புகார் செய்யப்பட்டுள்ளது.

விலையுயர்ந்த ட்ரோன் கெமரா உட்பட பல பொருட்கள் கொண்ட பயணப் பொதியே இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தில் புகையிரதம் தரித்து நின்ற சமயம் இது திருடப்பட்டிருக்கலாம் என சுற்றுலாப் பயணி சந்தேகிக்கின்றார்.

மேற்படி பயணப்பொதியில் 25ஆயிரம் ரூபா பணம், ட்ரோன் கெமரா, விலையுயர்ந்த கைபேசி உட்பட பல பெறுமதியான பொருட்கள் காணப்பட்டதாக அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சுற்றுலாப் பொலிஸார் மற்றும் நாவலப்பிட்ய பொலிஸார் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.




கனடாவில் வாழும் இலங்கை முஸ்லிம்கள் இலங்கையிலுள்ள லேடி ரிஜ்வே வைத்தியசாலை சிறுவர்களுக்கான அவசர தேவையான மருந்துப்பொருட்களை கொள்முதல் செய்வதற்காக 26 மில்லியன் ரூபாவை சேகரித்து வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் கையளித்தனர்.

(படப்பிடிப்பு - அஷ்ரப் ஏ.சமத்)


## செலான் வங்கி பீ.எல்.சி.

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி.) - டாம் வீதிக் கிளை**

**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

இலக்கம் W-201943இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழின் கீழ் MYD Auto Trading என்ற பெயரில் கீர்த்தி நாமம் மிகுந்த நிறுவனத்தின் உரிமையாளரொருவராக வர்த்தகத்தில் ஈடுபட்டுக்கொண்டு போகும் கல்கிஸையைச் சேர்ந்த திலேஷ் சுரங்க பல்லவாரச்சி கடன்பாடுடையவராகவும் / ஈடுவைத்தவராகவும் செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு K.K.G.G.சமிந்தவினால் 2017.05.15ஆம் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி 793ஆம் இலக்க மற்றும் பிரசித்த நொத்தாரிசு S.S.S.De சில்வா பாரதிரத்னவினால் 2016.05.05 திகதியிடப்பட்ட 1687ஆம் இலக்க முறி, பிரசித்த நொத்தாரிசு K.K.G.G.சமிந்தவினால் 2015,03.09ஆம் திகதியிடப்பட்ட 564ஆம் இலக்க ஈட்டு முறி ஆகிய சகல முறிகளின் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால்.

**2023ஆம் மார்ச் மாதம் 29ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி.யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி, இல. 90, காலி வீதி, கொழும்பு 03இல் உள்ள வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்** மேற்படி ஏல விற்பனையானது, சுகாதார அமைச்சின் கொவிட் 19 சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் வழிகாட்டலுக்கும் அமையவே நடத்தப்படும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோறளையின் பல்லேபற்றுவில் தெஹிவளை-கல்கிஸை மாநகர சபை எல்லைக்குள் தெஹிவளை-கல்கிஸை செயலாளர் பிரிவிற்குள் வட்டராப்பல கிராம சேவகர் பிரிவு 19 இல் வட்டராப்பல வாட் இலக்கம்19இல் கல்சிஸையில் அமைந்துள்ள பொன்சேக்கா வீதி வரி மதிப்பீட்டிலக்கம் 7 மற்றும் 7 1/1 ஐ தாங்கி நிற்கும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் J.M.W. சமரநாயக்கவினால் தயாரிக்கப்பட்ட 2003.09.20ஆம் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1965இல் காட்டப்பட்டுள்ளவாறு காணித்துண்டு 1B என மீளளவை செய்யப்பட்டுள்ளது) கோன்கஹாவத்த என அழைக்கப்படும் உரிமம்பெற்ற நில அளவையாளர் P.A.S.S.பொன்னம்பெருமவினால் தயாரிக்கப்பட்ட 2016.04.19ஆம் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 670இல் காணித்துண்டு 1B1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் எட்டு பேர்ச்சஸ் (ஏ0.ரூ0.பே8) அல்லது 0.0202 ஹெக்டயர்கள்.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** கொழும்பிலிருந்து காலி வீதி வழியாக தெஹிவளை சந்தியைக் கடந்து கல்கிஸை வரைக்கும்.சென்று இடது பக்கத்துக்குத் திரும்பி பீரிஸ் மாவத்தையிலுள்ள பேர்கர் கிங்ஸ் உணவகத்தைக் கடந்து சுமார் 200 மீற்றர் தூரம் சென்றதும் அங்கிருந்து இடது பக்கத்துக்குத் திரும்பி பொன்சேக்கா வீதி வழியாக சுமார் 100 மீற்றர் தூரத்திலுள்ள வீதி வளைவு வரைக்கும் சென்றதும் இக்காணி வீதியின் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:-** 2021.02.12 ஆம் திகதிய இலங்கைச் ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2020.12.25 ஆம் திகதிய டெய்லி மிரர், தமிழ் மிரர் மற்றும் 2021.02.11 ஆம் திகதிய அத பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கட்டணங்கள் செலுத்தும் விதம்,- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 3000/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின், அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி., இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03.

தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485, 011-2456479, 011-2456473 மேலேயுள்ள ஏல விற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்துவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ உரிய சகல அதிகாரங்களும் வங்கிக்கு உண்டு.

**சந்திமா பிரியதர்ஷனி கமகே,**
**நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும்**
**உரிமம் பெற்ற ஏலதாரர்.**

**இல. 9-i. ஹைலெவல் வீதி,**
**சர்வோதய மாவத்த,**
**பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 071 4318252.**

# சம்பத் வங்கி பீ.எல்.சீ.

## 2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்கள்

(கொழும்பு பங்குச் சந்தையின் சட்டம் 7.4 பிரகாரம்)

கம்பனி பதிவு இலக்கம்: PQ144

### இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்று

| | வங்கி | | | | | | குழுமம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | | டிசம்பர் 31இல் முடிவடைந்த காலாண்டிற்கானது | | | டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | | டிசம்பர் 31இல் முடிவடைந்த காலாண்டிற்கானது | | |
| | 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | 2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % | 2022 ரூ 000 | 2021 ரூ 000 | மாற்றம் % | 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | 2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % | 2022 ரூ 000 | 2021 ரூ 000 | மாற்றம் % |
| மொத்த வருமானம் | 197,570,518 | 104,570,303 | 88.9 | 60,972,550 | 27,994,042 | 117.8 | 206,002,254 | 113,075,143 | 82.2 | 63,257,212 | 30,350,976 | 108.4 |
| வட்டி வருமானம் | 157,619,458 | 85,986,952 | 83.3 | 51,568,086 | 22,742,253 | 126.8 | 164,775,651 | 92,427,928 | 78.3 | 53,572,309 | 24,442,284 | 119.2 |
| கழி: வட்டிச் செலவினம் | 84,117,088 | 44,317,761 | 89.8 | 31,324,948 | 10,765,678 | 191.0 | 88,733,558 | 46,909,728 | 89.2 | 32,830,912 | 11,414,818 | 187.6 |
| **தேறிய வட்டி வருமானம்** | **73,502,370** | **41,669,191** | **76.4** | **20,243,138** | **11,976,575** | **69.0** | **76,042,093** | **45,518,200** | **67.1** | **20,741,397** | **13,027,466** | **59.2** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 21,940,763 | 13,239,648 | 65.7 | 6,836,460 | 4,215,696 | 62.2 | 22,685,656 | 14,236,984 | 59.3 | 6,980,769 | 4,507,244 | 54.9 |
| கழி: கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | 2,499,396 | 1,764,995 | 41.6 | 689,184 | 581,980 | 18.4 | 2,500,860 | 1,765,975 | 41.6 | 689,122 | 582,363 | 18.3 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **19,441,367** | **11,474,653** | **69.4** | **6,147,276** | **3,633,716** | **69.2** | **20,184,796** | **12,471,009** | **61.9** | **6,291,647** | **3,924,881** | **60.3** |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள் மூலமான தேறிய (நட்டம்)/இலாபம் | (2,248,355) | 399,243 | (663.2) | 767,880 | 497,637 | 54.3 | (2,266,306) | 399,243 | (667.7) | 749,929 | 497,637 | 50.7 |
| நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற தேறிய இலாபம்/(நட்டம்) | | | | | | | | | | | | |
| - இலாப(நட்ட) கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் | 555,306 | 114,418 | 385.3 | 106,627 | 34,184 | 211.9 | 572,697 | 114,418 | 400.5 | 124,018 | 34,184 | 262.8 |
| - ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானகூற்றினூடாக சாதாரண பெறுமதியில் | (13,481) | 30,313 | (144.5) | 2,788 | - | 100.0 | (13,481) | 30,313 | (144.5) | 2,788 | - | 100.0 |
| - கடன் தீர்ப்பனவு செலவில் | - | 5,682 | (100.0) | - | - | - | - | 5,682 | (100.0) | - | - | - |
| தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 19,716,827 | 4,794,047 | 311.3 | 1,690,709 | 504,272 | 235.3 | 20,248,037 | 5,860,575 | 245.5 | 1,827,399 | 869,627 | 110.1 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **110,954,034** | **58,487,547** | **89.7** | **28,958,418** | **16,646,384** | **74.0** | **114,767,836** | **64,399,440** | **78.2** | **29,737,178** | **18,353,795** | **62.0** |
| கழி: பெறுமதி குறைப்பு | 62,706,010 | 17,084,814 | 267.0 | 13,898,430 | 7,243,565 | 91.9 | 62,908,121 | 18,559,200 | 239.0 | 13,717,725 | 7,387,705 | 85.7 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **48,248,024** | **41,402,733** | **16.5** | **15,059,988** | **9,402,819** | **60.2** | **51,859,715** | **45,840,240** | **13.1** | **16,019,453** | **10,966,090** | **46.1** |
| **கழி: தொழிற்பாட்டு செலவினங்கள்** | | | | | | | | | | | | |
| ஊழியர் தொடர்பான செலவினங்கள் | 12,496,048 | 9,542,996 | 30.9 | 2,962,806 | 891,048 | 232.5 | 13,878,531 | 10,916,278 | 27.1 | 3,315,758 | 1,269,286 | 161.2 |
| பெறுமானதேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு செலவுகள் | 2,544,968 | 2,454,371 | 3.7 | 746,285 | 370,727 | 101.3 | 2,396,761 | 2,491,340 | (3.8) | 644,375 | 524,110 | 22.9 |
| ஏனைய செலவினங்கள் | 13,006,891 | 8,670,697 | 50.0 | 3,861,134 | 2,834,401 | 36.2 | 13,613,025 | 9,311,739 | 46.2 | 3,996,116 | 2,908,867 | 37.4 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்** | **28,047,907** | **20,668,064** | **35.7** | **7,570,225** | **4,096,176** | **84.8** | **29,888,317** | **22,719,357** | **31.6** | **7,956,249** | **4,702,263** | **69.2** |
| **நிதியியல் சேவைகள் மீதான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **20,200,117** | **20,734,669** | **(2.6)** | **7,489,763** | **5,306,643** | **41.1** | **21,971,398** | **23,120,883** | **(5.0)** | **8,063,204** | **6,263,827** | **28.7** |
| கழி: நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 4,953,917 | 3,900,725 | 27.0 | 1,558,342 | 794,775 | 96.1 | 5,340,457 | 4,295,777 | 24.3 | 1,639,077 | 925,203 | 77.2 |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி | 222,054 | - | 100.0 | 222,054 | - | 100.0 | 236,322 | - | 100.0 | 236,322 | - | 100.0 |
| **நிதியியல் சேவைகள் மீதான மொத்த வரிகள்** | **5,175,971** | **3,900,725** | **32.7** | **1,780,396** | **794,775** | **124.0** | **5,576,779** | **4,295,777** | **29.8** | **1,875,399** | **925,203** | **102.7** |
| **வருமான வரிக்கு முன்னரான இலாபம்** | **15,024,146** | **16,833,944** | **(10.8)** | **5,709,367** | **4,511,868** | **26.5** | **16,394,619** | **18,825,106** | **(12.9)** | **6,187,805** | **5,338,624** | **15.9** |
| கழி: வருமான வரிச் செலவினம் | 1,889,994 | 4,376,447 | (56.8) | (224,392) | 1,035,620 | (121.7) | 2,334,109 | 4,968,645 | (53.0) | (187,135) | 1,280,400 | (114.6) |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **13,134,152** | **12,457,497** | **5.4** | **5,933,759** | **3,476,248** | **70.7** | **14,060,510** | **13,856,461** | **1.5** | **6,374,940** | **4,058,224** | **57.1** |
| பகிர்ந்தளிக்கப்படுவதற்கு: | | | | | | | | | | | | |
| தலைமை கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 13,134,152 | 12,457,497 | 5.4 | 5,933,759 | 3,476,248 | 70.7 | 14,060,510 | 13,856,461 | 1.5 | 6,374,940 | 4,058,224 | 57.1 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | **13,134,152** | **12,457,497** | **5.4** | **5,933,759** | **3,476,248** | **70.7** | **14,060,510** | **13,856,461** | **1.5** | **6,374,940** | **4,058,224** | **57.1** |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை/ குன்றிய இலாபம் (ரூ.) | **11.48** | **10.89** | **5.4** | **5.19** | **3.04** | **70.7** | **12.29** | **12.11** | **1.5** | **5.57** | **3.55** | **57.1** |

### அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

| | வங்கி | | | | | | குழுமம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | | டிசம்பர் 31இல் முடிவடைந்த காலாண்டிற்கானது | | | டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | | டிசம்பர் 31இல் முடிவடைந்த காலாண்டிற்கானது | | |
| | 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | 2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % | 2022 ரூ 000 | 2021 ரூ 000 | மாற்றம் % | 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | 2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % | 2022 ரூ 000 | 2021 ரூ 000 | மாற்றம் % |
| காலப்பகுதிக்கான இலாபம் | **13,134,152** | **12,457,497** | **5.4** | **5,933,759** | **3,476,248** | **70.7** | **14,060,510** | **13,856,461** | **1.5** | **6,374,940** | **4,058,224** | **57.1** |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் இலாபம் அல்லது நட்டமாக மீள்வகைப்படுத்தப்படவுள்ளவை: ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட கடன் சாதனங்கள்: | | | | | | | | | | | | |
| நட்டமாக மீள்மதிப்பிடப்பட்டவை | (4,477,620) | (1,381,203) | (224.2) | (227,738) | (444,256) | 48.7 | (4,477,620) | (1,381,203) | (224.2) | (227,738) | (444,256) | 48.7 |
| புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டவை சார்பான இலாபம் அல்லது நட்டமாக மீள்வகைப்படுத்தப்பட்டவை | 13,481 | (30,313) | 144.5 | (2,788) | - | (100.0) | 13,481 | (30,313) | 144.5 | (2,788) | - | (100.0) |
| பெறுமான குறைப்பு சம்பந்தமான ஏற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் | 538,230 | 34,373 | 1,465.9 | 113,069 | 25,764 | 338.9 | 538,230 | 34,373 | 1,465.9 | 113,069 | 25,764 | 338.9 |
| திறைச்சேரி முறிகளை FVOCIஇலிருந்து கடன்தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்படும் நிதிச்சொத்துகளாக மீளவகைப்படுத்தல் | 4,787,611 | - | 100.0 | - | - | - | 4,787,611 | - | 100.0 | - | - | - |
| ஆரம்ப நிலுவை மீதான விகித மாற்றத்தின் விளைவு அடங்கலாக பிற் போடப்பட்ட வரி விளைவு | (167,626) | 325,010 | (151.6) | 67,373 | 100,438 | (32.9) | (167,626) | 325,010 | (151.6) | 67,373 | 100,438 | (32.9) |
| **இலாபம்/நட்டமாக மீள் வகைப்படுத்த வேண்டியுள்ள தேறிய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **694,076** | **(1,052,133)** | **166.0** | **(50,084)** | **(318,054)** | **84.3** | **694,076** | **(1,052,133)** | **166.0** | **(50,084)** | **(318,054)** | **84.3** |
| இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்த தேவையற்றவை: ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட மூலதன சாதனங்கள்: | | | | | | | | | | | | |
| மீள் மதிப்பீட்டு (நட்டம்)/இலாபம் | (3,213,837) | 670,639 | (579.2) | (82,728) | (1,010,395) | 91.8 | (3,213,837) | 670,639 | (579.2) | (82,728) | (1,010,395) | 91.8 |
| செலாவணியில் ஏற்பட்ட மாற்றம் | 3,433,832 | 290,118 | 1,083.6 | 201 | - | 100.0 | 3,433,832 | 290,118 | 1,083.6 | 201 | - | 100.0 |
| ஆரம்ப நிலுவை மீதான விகித மாற்றத்தின் விளைவு அடங்கலாக பிற் போடப்பட்ட வரி விளைவு | (284,058) | (121,092) | (134.6) | (211,453) | 240,634 | (187.9) | (284,058) | (121,092) | (134.6) | (211,453) | 240,634 | (187.9) |
| | (64,063) | 839,665 | (107.6) | (293,980) | (769,761) | 61.8 | (64,063) | 839,665 | (107.6) | (293,980) | (769,761) | 61.8 |
| வரையறுக்கப்பட்ட காப்புத்திட்டங்கள் மீதான இலாபம் | 1,146,179 | 2,804,233 | (59.1) | 1,146,179 | 2,804,233 | (59.1) | 1,157,109 | 2,810,748 | (58.8) | 1,157,109 | 2,810,748 | (58.8) |
| ஆரம்ப நிலுவை மீதான விகித மாற்றத்தின் விளைவு அடங்கலாக பிற் போடப்பட்ட வரி விளைவு | (203,418) | (878,809) | 76.9 | (203,418) | (673,015) | 69.8 | (205,712) | (881,212) | 76.7 | (205,712) | (671,964) | 69.4 |
| | 942,761 | 1,925,424 | (51.0) | 942,761 | 2,131,218 | (55.8) | 951,397 | 1,929,536 | (50.7) | 951,397 | 2,138,784 | (55.5) |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு உபரி | 977,915 | - | 100.0 | 977,915 | - | 100.0 | 1,854,607 | - | 100.0 | 1,854,607 | - | 100.0 |
| ஆரம்ப நிலுவை மீதான விகித மாற்றத்தின் விளைவு அடங்கலாக பிற் போடப்பட்ட வரி விளைவு | (542,841) | 166,311 | (426.4) | (542,841) | - | (100.0) | (1,055,321) | 331,244 | (418.6) | (1,055,321) | - | (100.0) |
| | 435,074 | 166,311 | 161.6 | 435,074 | - | 100.0 | 799,286 | 331,244 | 141.3 | 799,286 | - | 100.0 |
| **இலாபம்/நட்டமாக மீள் வகைப்படுத்த தேவையில்லாத தேறிய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **1,313,772** | **2,931,400** | **(55.2)** | **1,083,855** | **1,361,457** | **(20.4)** | **1,686,620** | **3,100,445** | **(45.6)** | **1,456,703** | **1,369,023** | **6.4** |
| **வரி நீங்கலான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **2,007,848** | **1,879,267** | **6.8** | **1,033,771** | **1,043,403** | **(0.9)** | **2,380,696** | **2,048,312** | **16.2** | **1,406,619** | **1,050,969** | **33.8** |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **15,142,000** | **14,336,764** | **5.6** | **6,967,530** | **4,519,651** | **54.2** | **16,441,206** | **15,904,773** | **3.4** | **7,781,559** | **5,109,193** | **52.3** |
| பகிர்ந்தளிக்கப்படுவதற்கு: | | | | | | | | | | | | |
| வங்கியின் பங்குதாரர்களுக்கு | 15,142,000 | 14,336,764 | 5.6 | 6,967,530 | 4,519,651 | 54.2 | 16,441,206 | 15,904,773 | 3.4 | 7,781,559 | 5,109,193 | 52.3 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | | | | | | | - | - | - | - | - | - |
| | **15,142,000** | **14,336,764** | **5.6** | **6,967,530** | **4,519,651** | **54.2** | **16,441,206** | **15,904,773** | **3.4** | **7,781,559** | **5,109,193** | **52.3** |

### நிதியியல் நிலைமைக் கூற்று

| திகதியன்று | வங்கி 31-டிசம்பர் 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | வங்கி 31-டிசம்பர் 2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % | குழுமம் 31-டிசம்பர் 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | குழுமம் 31-டிசம்பர் 2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 79,162,545 | 22,882,999 | 245.9 | 79,344,587 | 23,027,588 | 244.6 |
| இலங்கை மத்திய வங்கியுடனான மீதிகள் | 31,579,185 | 30,874,556 | 2.3 | 31,579,185 | 30,874,556 | 2.3 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | 10,927,216 | 2,739,514 | 298.9 | 10,927,216 | 2,739,514 | 298.9 |
| எதிர் மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | 10,072,569 | 2,752,011 | 266.0 | 10,299,569 | 4,861,922 | 111.8 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 44,598 | 1,399,119 | (96.8) | 44,598 | 1,399,119 | (96.8) |
| இலாபம் அல்லது நட்ட கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 4,641,277 | 3,907,704 | 18.8 | 4,822,395 | 3,907,704 | 23.4 |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் | | | | | | |
| - கடன் மற்றும் முற்பணம் | 811,157,649 | 762,588,294 | 6.4 | 839,976,738 | 795,804,353 | 5.6 |
| - கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 278,775,796 | 293,766,967 | (5.1) | 284,237,662 | 294,667,208 | (3.5) |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 32,772,930 | 43,004,145 | (23.8) | 32,772,986 | 43,004,201 | (23.8) |
| துணைக் கம்பனிகளிலான முதலீடு | 3,898,512 | 3,503,350 | 11.3 | - | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 8,910,525 | 7,817,923 | 14.0 | 19,067,412 | 16,337,516 | 16.7 |
| அருவச் சொத்துக்கள் | 578,031 | 544,916 | 6.1 | 600,341 | 567,681 | 5.8 |
| பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் | 3,540,286 | 3,265,318 | 8.4 | 3,265,770 | 3,031,790 | 7.7 |
| நடப்பு வரி கிடைக்கத்தக்கதாக உள்ளவை | - | - | - | - | 4,177 | (100.0) |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 21,734,244 | 6,157,958 | 252.9 | 21,992,147 | 6,242,982 | 252.3 |
| ஏனைய சொத்துக்கள் | 26,630,974 | 14,708,621 | 81.1 | 28,388,956 | 16,162,339 | 75.6 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,324,426,337** | **1,199,913,395** | **10.4** | **1,367,319,562** | **1,242,632,650** | **10.0** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 11,297,181 | 23,653,247 | (52.2) | 15,255,184 | 31,532,293 | (51.6) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,449,393 | 607,923 | 138.4 | 1,449,393 | 607,923 | 138.4 |
| மீள் கொள்வனவு அடிப்படையில் விற்ற பிணைப் பத்திரங்கள் | 2,283,291 | 4,157,662 | (45.1) | 2,283,291 | 4,157,662 | (45.1) |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் | | | | | | |
| - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 1,096,099,874 | 977,945,952 | 12.1 | 1,115,155,879 | 994,317,574 | 12.2 |
| - ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | 9,173,923 | 14,434,115 | (36.4) | 9,173,923 | 14,434,115 | (36.4) |
| - கடன்பத்திர உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 25,259,536 | 31,006,592 | (18.5) | 32,872,261 | 37,274,207 | (11.8) |
| ஓய்வு நலக்காப்பு திட்டங்கள் | 1,845,228 | 2,573,127 | (28.3) | 1,998,238 | 2,706,462 | (26.2) |
| செலுத்த வேண்டிய பங்குலாபம் | 187,141 | 148,032 | 26.4 | 187,141 | 148,032 | 26.4 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 18,754,155 | 7,524,844 | 149.2 | 19,186,239 | 8,375,511 | 129.1 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | - | - | - | 1,465,662 | 979,815 | 49.6 |
| ஏனைய பொறுப்புக்கள் | 31,696,670 | 19,110,242 | 65.9 | 32,741,284 | 20,913,538 | 56.6 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **1,198,046,392** | **1,081,161,736** | **10.8** | **1,231,768,495** | **1,115,447,132** | **10.4** |
| **பங்கு மூலதனம்** | | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 47,622,493 | 47,622,493 | - | 47,622,493 | 47,622,493 | - |
| ஒதுக்கங்கள் | | | | | | |
| நியதிச்சட்ட ஒதுக்கங்கள் | 5,755,000 | 5,075,000 | 13.4 | 6,033,000 | 5,315,000 | 13.5 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 64,832,981 | 57,247,452 | 13.3 | 68,330,919 | 60,381,178 | 13.2 |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | 8,169,471 | 8,806,714 | (7.2) | 13,564,655 | 13,866,847 | (2.2) |
| வங்கியின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | 126,379,945 | 118,751,659 | 6.4 | 135,551,067 | 127,185,518 | 6.6 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்குரியது | | | | - | - | - |
| **மொத்த பங்கு மூலதனம்** | **126,379,945** | **118,751,659** | **6.4** | **135,551,067** | **127,185,518** | **6.6** |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **1,324,426,337** | **1,199,913,395** | **10.4** | **1,367,319,562** | **1,242,632,650** | **10.0** |
| எதிர்பார பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் | **315,363,167** | **392,079,682** | (19.6) | **314,491,810** | **389,844,633** | (19.3) |
| பங்கொன்றிற்கான தேறிய சொத்து (ரூ) | **110.44** | **103.77** | 6.4 | **118.45** | **111.14** | 6.6 |

| விஞ்ஞாபன தகவல்கள் | | |
|---|---|---|
| ஊழியர்களின் எண்ணிக்கை | 3,948 | 4,013 |
| கிளைகளின் எண்ணிக்கை | 229 | 229 |

**அத்தாட்சிப்படுத்துகை**

மேற்படி நிதிக் கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் கம்பனிச் சட்டம் இல 7 இன் தேவைக்கு இணங்கவுள்ளது என நான் உறுதிப்படுத்துகின்றேன்.

(கையொப்பமிட்டது)
**அஜந்த டி வாஸ் குணசேகர**
நிர்வாக இயக்குநர் / பிரதம நிதியியல் அதிகாரி

கீழே கையொப்பமிட்ட நாங்கள் சம்பத் வங்கி பிஎல்சியின் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளராக இருப்பதுடன் நாங்கள் இணைவாக பின்வரும் விடயங்ளை உறுதிப்படுத்துகின்றோம்:

(அ) இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கு இணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
மற்றும்
ஆ) இக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள், வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(கையொப்பமிட்டது)
**ஹர்ஷ அமரசேகர**
தலைவர்
2023 பெப்ரவரி 17

(கையொப்பமிட்டது)
**நந்த பெர்னான்டோ**
முகாமைத்துவ பணிப்பாளர்

### விளக்கக் குறிப்புகள்

1. 2021 ஆம் ஆண்டில் வருடாந்தக் கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், கணக்கியல் கொள்கைகளிலோ கணக்கீட்டு முறைகளிலோ எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லை.

2. குழும நிதிக்கூற்று அறிக்கைகள், வங்கியினதும் அதன் முற்றிலும் உரித்துடைய துணை நிறுவனங்களான சம்பத் சென்டர் லிமிடெட், எஸ்.சி. செக்யூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிடெட், சியபத்த பினான்ஸ் பிஎல்சி, சம்பத் இன்போர்மேஷன் டெக்னோலொஜி சொலுஷன்ஸ் லிமிடெட் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவுள்ளது.

3. இக்காலப்பகுதியில் சொத்துக்களின், பொறுப்புக்களின், எதிர்பாராத பொறுப்புக்களின் உள்ளடக்கங்களில் எந்தவிதமான பொருண்மை வாய்ந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. அறியப்பட்ட எல்லா செலவினங்களும் கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

4. இந்த இடைக்கால நிதிக்கூற்று அறிக்கைகள் இலங்கை கணக்கியல் நியமம் - LKAS 34 (இடைக்கால நிதிக்கூற்றறிக்கையிடல்) க்கு அமைய மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் 7.4 ஆம் விதிக்கமைய தகவல்களை உள்ளடக்கியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

5. குழுமத்தின் வெளியக கணக்காய்வாளர்களான M/S Ernst & Young டிசம்பர் 31 2022 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வினை பூர்த்தி செய்துள்ளனர். அவர்கள் வங்கியினதும் குழுமத்தினதும் டிசம்பர் 31 2022 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதி கூற்றுக்கள் சரியாகவும் நியாயமானதுமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சான்றளித்துள்ளனர்

6.

| பங்கொன்றின் சந்தைப் பெறுமதி | 2022 (ரூ) | 2021 (ரூ) |
|---|---|---|
| டிசம்பர் 31 ஆம் திகதியன்று சந்தைப் பெறுமதி | **34.20** | 52.10 |
| டிசம்பர் 31 உடன் முடிவடைந்த காலாண்டுப்பகுதியில், அதிகூடிய சந்தைப் பெறுமதி | **42.00** | 59.30 |
| டிசம்பர் 31 உடன் முடிவடைந்த காலாண்டுப்பகுதியில், ஆகக் குறைந்த சந்தைப் பெறுமதி | **30.00** | 51.20 |
| டிசம்பர் 31 உடன் முடிவடைந்த காலாண்டுப்பகுதியில், நிறைபேற்றப்பட்ட சராசரியான சந்தைப் பெறுமதி | **35.05** | 54.24 |

7. **கடன் இலாக்காவை மறுவகைப்படுத்தல்**
பேரினவாத பொருளாதார நிலைமைகளில் முன்னெப்போதும் இல்லாத மாற்றங்களை கருத்திற்கொண்டு, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் கடன் இலாகாவை மறுவகைப்படுத்தவதற்கான மாற்று முறைமைகள் சார்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதனூடாக நிறுவனங்களுக்கு ஒரு முறை மட்டும் பயன்படுத்தக் கூடிய சாதாரண பெறுமதியில் (FVOCI) மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களை கடன் தீர்ப்பனவு செலவுகளில் மதிப்பிடக் கூடிய நிதிச்சொத்துகளாக மறுவகைப்படுத்துவதற்கான விருப்பத்தேர்வினை வழங்கியிருந்தது.

இந்த SoAT இணை பயன்படுத்துவதினூடாக, வங்கி தனது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றின் கீழ் வகைப்படுத்தியிருந்த திறைசேரி முறிகளுக்கான இலாகாவை 2022 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று கடன் தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களாக மறுவகைப்படுத்தியது. இதன்படி, வங்கி ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றினூடாக பதியப்பட்ட ஒட்டு மொத்த சந்தை இழப்பு தொகையான ரூ. 4.8 பில்லியனை மீள்மாற்றியமைத்ததோடு, மறுவகைப்படுத்தப்பட்ட திகதியன்று திரைசேரி முறிகளின் முன் கொண்டுவரப்பட்ட மீதியையும் மாற்றம் செய்தது.
டிசம்பர் 31 ஆம் திகதியன்று, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றில் சாதாரண பெறுமதியில் மதிப்பீடு செய்து வந்து பின்பு கடன் தீர்பனவு செலவுகளின் கீழ் மீள்வகைப்படுத்தப்பட்ட திரைச்சேரி முறிகளின் பெறுமதியானது ரூ 29 பில்லியனாகும். வங்கி தொடர்ந்தும் இந்நிதிச் சொத்துக்களை ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானகூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பீடு செய்து வரும் பட்சத்தில், இந்நிதிச்சொத்துக்களுக்கான சாதாரண பெறுமதி மற்றும் மொத்த சந்தை இழப்பானது முறையே ரூ 25.1 பில்லியன் மற்றும் ரூ 3.9 பில்லியனாக இருந்திருக்கும். 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான மேலதிக சந்தை இழப்பாக ரூ 2.7 பில்லியனையும் வங்கி பதிவுசெய்ய தேவைப்பட்டிருக்கும்.

8. **நிதிச் சொத்துகள் மீதான பெறுமதி குறைப்பு**

**கடன் மற்றும் வருமதிகள்**
கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கான அறிகுறிகளைக் காட்டிய தனித்தனியாக குறிப்பிடத்தக்க அனைத்து வாடிக்கையாளர்களையும் குழு மதிப்பீடு செய்தது மற்றும் அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு வங்கியின் நிதிநிலை அறிக்கைகளில் போதுமான பெறுமான குறைபாடுகள் வழங்கப்பட்டுள்ளன. பெரிய கடன்களுக்கான பெறுமான குறைபாடு ஏற்பாடுகளை மதிப்பிடும் போது, வங்கி கடன் மீளப்பெறுவதற்கான காலப்பகுதியை நீடித்தல், அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் மதிப்பை மிகவும் நியாயமான மதிப்பீட்டைப் பிரதிபலிக்கும் வகையில் அடமானம் வைக்கப்பட்ட சொத்து மதிப்புகளைக் குறைத்தல் போன்ற பல விவேகமான நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

இதற்கிடையில், இந்த சவாலான காலங்களில் வாடிக்கையாளர்களுக்கு உதவ வங்கி கடன் மீளச்செலுத்துவது சார்பான திட்டங்களில் மாற்றங்களை செய்வது போன்ற பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை நீடித்தது. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கடன் மீளச்செலுத்துவதை பிற்போடுவது சார்பான 5வது கட்ட சலுகை வழங்களுக்கு தகுதியான வாடிக்கையாளர்களுக்கு அச்சலுகை வங்கியினால் வழங்கப்பட்டது. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த நிவாரணங்கள் அனைத்தும் வங்கியின் கடன் அபாயத் தன்மையை உயர்த்தியது. மேலும், உயரும் பணவீக்கம், அதிக வட்டி விகிதங்கள் மற்றும் வருமான வரி விகிதங்கள் ஆகியவை தனிநபர்கள் மற்றும் வணிகங்களின் கடன் திருப்பிச் செலுத்தும் திறனை நடுத்தர முதல் குறுகிய காலத்திற்கு பாதிக்கும் மற்ற சில முக்கிய விடயங்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, அதிகரித்த கடன் அபாயான தன்மையை வங்கி தனது கூட்டு கடன்பெறுமதி குறைப்பை கணக்கிடும் பொழுது கருத்திற் கொள்ளும் நோக்கத்துடன் தனது கூட்டுபெறுமதி குறைப்புக்கான மாதிரிகளை மறுபரிசீலனை செய்தது. மேலடுக்குகளுக்கான கொடுப்பனவாக அங்கீகரிக்கப்பட்ட கூடுதல் ஏற்பாடுகளுடன் நிலை 2 கீழ் சில கடன்களை வங்கி விவேகத்துடன் மீள்வகைப்படுத்தியது.

**ஏனைய நிதிச் சொத்துகள்**
நாட்டின் இறையாண்மை மதிப்பீட்டின் தரம் குறைக்கப்பட்டது மற்றும் 2022 ஏப்ரலில் அரசாங்கம் தனது வெளிநாட்டு பொதுக்கடன் சார்பான கொடுப்பனவுகளை மறுசீரமைப்பதற்கான தனது எண்ணத்தை அறிவித்ததின் பின்னனியில், குழுமம் SLDBs மற்றும் SLSBs சார்பாக பெறுமானகுறைப்பு ஏற்பாடாக ரூ 7.8 பில்லியனை நிதியாண்டில் பதிவிட்டிருந்தது. 2022 டிசம்பர் 31ஆம் திகதியன்று, SLDBs, மற்றும் SLSBs களுக்கான மொத்த பெறுமான குறைப்பு ஏற்பாடுகளை ரூ 18.3 பில்லியனாக கணக்கிடப்பட்டிருந்தது. குழுமமானது முதிர்ச்சி அடைந்த SLDB இலாக்காக்களை இலங்கை ரூபாவில் மதிப்பிடப்பட்ட பத்திரங்களாக மாற்றுவதற்காக தரப்பட்டிருந்த சலுகையை பயன்படுத்துவதன் மூலம் SLDB களில் செய்யப்பட்ட முதலீடுகளை கணிசமான அளவில் குறைத்து கொண்டது.

9. **மிகைக் கட்டண வரி**
2022 ஆம் ஆண்டின் மிகைக் கட்டண வரிச் சட்டம் இல. 14 இன் படி, 2020/21 மதிப்பீட்டின் ஆண்டிற்கான வரி விதிக்கக்கூடிய வருமானமான ரூ 10,682 மில்லியனில் ரூ 2,671 மில்லியன் மிகைக் கட்டண வரியை வங்கி செலுத்தியுள்ளது. மேலும், குழுமமானது ரூ. 3,233 மில்லியன் மிகைக்கட்டண வரியை வங்கி செலுத்தியுள்ளது. மேற்கூறிய சட்டத்தின்படி, 2020 ஜனவரி 1 ஆம் திகதி தொடங்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் மிகைக்கட்டண வரி ஒரு செலவாகக் கருதப்படும். இந்தச் சட்டம் இலங்கைக் கணக்கியல் தரநிலைகளின் தேவைகளை மீறுவதால், ஏப்ரல் 2022 இல் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வழங்கப்பட்ட மிகைக்கட்டன வரிக்கான கணக்கியல் மீதான மிகைக்கட்டண வரித் தொடர்பான கணக்கீட்டு முறைமைகளின் மாற்று நடைமுறைகள் சார்பான அறிக்கையில் (SoAT) ஆல் பரிந்துரைக்கப்பட்டபடி மிகைக் கட்டண வரிச் செலவு கணக்கிடப்படும். அதன்படி 2022 ஜனவரி 1ம் திகதியன்று ஆரம்பத்தில் இருந்த பிடித்து வைக்கப்பட்ட வருவாயை சரிசெய்து மிகைக் கட்டண வரிக்கான மொத்தப் பொறுப்பை வங்கி அங்கீகரித்துள்ளது.

10. **வருமான வரி விகிதம் சார்பான மாற்றங்கள்**
குழுமமானது, 2022/23 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி பொறுப்புகளை முதல் ஆறுமாதங்களுக்கு வருமான வரி விகிதம் 24% படி மதிப்பிட்டது. மாற்றம் செய்யட்ட வருமான வரி விகிதம் 30% மற்றும் 2022 இல.45 வருமான வரி (திருத்தம்) சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்த இதர திருத்தங்களையும் கவனத்திற்கு எடுத்து கொண்டு வரி மதிப்பீட்டாண்டின் இறுதி 6 மாதங்களுக்கான வரி பொறுப்பினை வங்கி கணக்கிட்டிருந்தது. 2022 டிசம்பர் 31ம் திகதியன்று, குழுமத்தின் பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் / பொறுப்புகள் மாற்றம் செய்யப்பட்ட 30% வருமானவரி விகிதத்திற்கமைய கணக்கிடப்பட்டது.

11. **அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு நிகழ்வுகள்**
கீழே உள்ள குறிப்பு 11.1, 11.2 மற்றும் 11.3 வரை வெளிப்படுத்தப்பட்ட உருப்படிகளைத் தவிர, நிதிநிலை அறிக்கைகளில் சரிசெய்தல் அல்லது விசேட குறிப்பொன்றைத் தருவிப்பதைத் தூண்டும் முக்கிய நிகழ்வுகள் எதுவும் அறிக்கையிடல் திகதிக்குப் பிறகு நடைபெறவில்லை.

11.1. **பரிந்துரைக்கப்பட்ட பங்கிலாம்**
வங்கியின் பணிப்பாளர் சபை இவ்வருடத்துக்கான இறுதி பங்கு இலாபமாக ரூ 4.60 இனை பரிந்துரை செய்துள்ளது (இதனுள் ரூ 3.15 காசிலான பங்கு இலாபமும் மற்றும் 1.15 பங்கிலான பங்கு இலாபமும் அடங்கும்) மேலும் இவ்வாறு பரிந்துரைப்பட்ட பங்கிலாமானது வங்கியின் 2023 மார்ச் 30 ஆம் திகதியின்று நடைபெறவுள்ள ஆண்டு பொது கூட்டத்தில் அனுமதி பெற்றுக் கொண்ட பின்பே வழங்கப்படும். 2022 ஆம் ஆண்டிற்காக காசினால் செலுத்தப்படவுள்ள பங்கு இலாபம் சார்பாக வங்கியின் பணிப்பாளர் சபையினால் அனுமதியளிக்கப்பட்ட விரிவான மதிப்பீட்டினை வங்கி இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவிக்கவுள்ளது.
இலங்கையின் கணக்கியல் நியமம் -LKAS 10 (அறிக்கையிடல் காலத்திற்கு பிந்திய நிகழ்வுகள்) ற்கு இணங்க, இங்கு பரிந்துரைக்கப்பட்ட பங்கிலாபமானது 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியாண்டுகான நிதி அறிக்கையில் ஒரு பொறுப்பாக காட்டப்படவில்லை. கம்பனிசட்டம் இல.07 2022 இன் பிரிவு 56 (2) இன் தேவைப்பாட்டிற்கு அமைய, கம்பனிச் சட்டம் இல.07 2007 இன் பிரிவு 57 இற்கு ஏற்புடையதான விதத்தில் "கடன் தீர்பனவு திறன்" (Solvency Test) இனை திருப்த்திபடுத்தியதாக வங்கியின் இயக்குநர் சபை உறுதிப்படுதியுள்ளது.

11.2. **தொகுதிக்கடன் வழங்கல் (2023/2028)**
வங்கியானது 50 மில்லியன் பாசல் 3 இணக்கமான அடுக்கு 2 பட்டியலிடப்பட்ட, பாதுகாப்பற்ற, துணையான, மீட்டெடுக்ககூடிய 5 ஆண்டு தொகுதிக்கடன் பத்திரங்களை (2023/2028) சரியான காரணங்கள் இருக்கும் பட்சத்தில இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தலின் தொகுதிக்கடன்களை சாதாரண பங்குகளாக மாற்ற கூடிய விருப்பத் தேர்வு கொண்ட ஒவ்வொன்றும் ரூ 100/- என்ற அளவில் வழங்குவதன் மூலம் ரூ 5 பில்லியனை பின்வருமாறு திரட்டமுடிவு செய்துள்ளது. ஆரம்ப வெளியீட்டின் சந்தா கோரல் அதிகமாக இருக்கும் பட்சத்தில், வங்கியின் இணக்கப்பாட்டின் பேரில் மேலும் 20 மில்லியன் தொகுதிக்கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் ரூ 2 பில்லியன் அதிகரிக்கவும், அதனை தொடர்ந்து ஆரம்ப மற்றும் 2ம் தவணைக்கான சந்தாக்கோரல் அதிகமாக இருப்பின் வங்கியின் விருப்பத்தின் பேரில் மேலும் 30 மில்லியன் தொகுதிக்கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் தொகுதிக்கடன் தொகையை மேலும் ரூ 3 பில்லியனாக அதிகரிக்கவும் வங்கி முடிவு செய்துள்ளது. மேற்கூறப்பட்ட கடன்பத்திரங்களின் வெளியீடானது முதல் நாளன்றே வெற்றிகரமாக முழுவதுமாக கோரப்பட்டது. வங்கியானது 2023 பெப்ரவரி 9ம் திகதியன்று மேற்கூறிய தொகுதிக்கடன் ரூ 10 பில்லியன் மதிப்புள்ள பாசல் 3க்கு இணக்கமான, அடுக்கு 2 கடன்தொகையை திரட்டி கொண்டது.

11.2.1 **கடன் பத்திரங்கள் வழியாக திரட்டப்பட்ட நிதிகளின் பயன்பாடு**

| நோக்கம் இல. | நிதி திரட்டப்பட்டதற்கான நோக்கம் | நிதி திரட்டப்பட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை | திரட்டப்பட்ட நோக்கத்திற்கு நிதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி | திரட்டப்பட்ட நிதியில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை (A) | திரட்டப்பட்ட நிதியின் % ஆக | திரட்டப்பட்டுள்ள நிதியில் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ள தொகை (B) | ஒதுக்கப்பட்ட தொகைக்கு எதிராக பயன்படுத்தப்பட்ட தொகை (B/A) | முழுமையாக பயன்படுத்தப்படாவிடில் எங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்த விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வங்கியின் அடுக்கு II மூலதனத்தை அதிகரிப்பதற்கு | ரூ. 10.0 பில் | 09.02.2023 | ரூ.10.0 பில் | 100% | ரூ.10.0 பில் | 100% | முழுமையாக பயன்படுத்தப்பட்டது |
| 2 | வங்கியின் திரவ சொத்து நிலையை அதிகரிப்பதற்கு | ரூ. 10.0 பில் | 09.02.2023 | ரூ. 10.0 பில் | 100% | ரூ.10.0 பில் | 100% | முழுமையாக பயன்படுத்தப்பட்டது |

11.2.2 **முந்தைய ஆண்டுகளில் மூலதனச் சந்தை வழியாக திரட்டப்பட்ட நிதிகள்**
முந்தைய ஆண்டுகளில் மூலதனச் சந்தைகள் வழியாக திரட்டப்பட்ட நிதி கூறப்பட்ட நோக்கங்களுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

11.3. **பிட்ச் ரேடிங்கின் தேசிய நீண்ட கால தரநிர்ணய அளகுகளின் மீளாய்வு**
பிட்ச் ரேடிங்ஸின் இலங்கைக்கான தேசிய மதிப்பீட்டு அலகை பிட்ச் நிறுவனமானது மறுபரிசீலனை செய்ததன் காரணமாக மற்றும் சமீபத்தைய காலப்பகுதியில் இலங்கையின் இறையாண்மை தன்மை சார்பான தரமிறக்கம் காரணமாகவும் பிட்ச் ரேடிங்ஸ் நிறுவனம் சம்பத் வங்கி உட்பட இலங்கையின் 10 வங்கிகளுக்கான தர நிர்ணய அலகை மீள திருத்தியமைத்தது.
அதன்படி சம்பத் வங்கியின் தேசிய நீண்ட கால தரநிர்ணய மதிப்பீட்டு அலகை "AA-(lka)RWN" இருந்து A (lka)/RWN க்கு தரமிறக்கியது. மேலும் வங்கியின் பாசல் 3 இணக்கமான அடுக்கு 2 கடன் பத்திரங்களுக்கான மதிப்பீடாக 'BBB+(lka) ஐ பிட்ச் வழங்கியிருந்தது.

**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்

பிட்ச் தரப்படுத்தல் : நடைமுறை: 'A (lka)/RWN'
31 டிசம்பர் 2022: 'AA- (lka)/RWN'

www.sampath.lk

# சம்பத் வங்கி பீ.எல்.சீ.

## 2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்கள்

(கொழும்பு பங்குச் சந்தையின் சட்டம் 7.4 பிரகாரம்)

கம்பனி பதிவு இலக்கம்: PQ144

## பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

### வங்கி (கணக்காய்வு செய்யப்பட்டது)

| 2021 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | |
| | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 |
| 2021 ஜனவரி 1ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,450,000 | 2,993,599 | 1,838,203 | 46,455,786 | 4,188,723 | 107,548,804 |
| 2021 ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | 12,457,497 | 12,457,497 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 166,311 | (212,468) | - | 1,925,424 | 1,879,267 |
| 2021 ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 166,311 | (212,468) | - | 14,382,921 | 14,336,764 |
| நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள் | | | | | | | |
| 2020 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (3,147,028) | (3,147,028) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 13,119 | - | 13,119 |
| பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள் | - | - | - | - | 13,119 | (3,147,028) | (3,133,909) |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானகூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட மூலதன சாதனங்களின் விற்பனை மூலமான தேறிய வருமானம் | - | - | - | (7,098) | - | 7,098 | - |
| ஆண்டில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | - | 625,000 | - | - | 6,000,000 | (6,625,000) | - |
| 2021 டிசம்பர் 31ம் திகதியன்று மீதி | 47,622,493 | 5,075,000 | 3,159,910 | 1,618,637 | 52,468,905 | 8,806,714 | 118,751,659 |

| 2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | |
| | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 |
| 2022 ஜனவரி 1ம் திகதியன்று மீதி | 47,622,493 | 5,075,000 | 3,159,910 | 1,618,637 | 52,468,905 | 8,806,714 | 118,751,659 |
| 2022 ஆம் ஆண்டின் 14ம் இல. மிகைக்கட்டண வரிச் சட்டம் (குறிப்பு 9) இன் கீழ் விதிக்கப்பட்ட மிகைக்கட்டண வரியை சீர்செய்தல் | - | - | - | - | - | (2,670,567) | (2,670,567) |
| 2022 ஜனவரி 1ம் திகதியன்று சீர்செய்யப்பட்ட மீதி | 47,622,493 | 5,075,000 | 3,159,910 | 1,618,637 | 52,468,905 | 6,136,147 | 116,081,092 |
| 2022 ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | 13,134,152 | 13,134,152 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 435,074 | 630,013 | - | 942,761 | 2,007,848 |
| 2022 ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 435,074 | 630,013 | - | 14,076,913 | 15,142,000 |
| நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள் | | | | | | | |
| 2021 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (4,863,589) | (4,863,589) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 20,442 | - | 20,442 |
| பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள் | - | - | - | - | 20,442 | (4,863,589) | (4,843,147) |
| ஆண்டில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | - | 680,000 | - | - | 6,500,000 | (7,180,000) | - |
| 2022 டிசம்பர் 31ம் திகதியன்று மீதி | 47,622,493 | 5,755,000 | 3,594,984 | 2,248,650 | 58,989,347 | 8,169,471 | 126,379,945 |

### குழுமம் (கணக்காய்வு செய்யப்பட்டது)

| 2021 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | வங்கியின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுடைய பங்கு | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | | | |
| | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 |
| 2021 ஜனவரி 1ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,635,000 | 5,962,392 | 1,838,203 | 46,455,786 | 7,900,780 | 114,414,654 | - | 114,414,654 |
| 2021 ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | 13,856,461 | 13,856,461 | - | 13,856,461 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 331,244 | (212,468) | - | 1,929,536 | 2,048,312 | - | 2,048,312 |
| 2021 ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 331,244 | (212,468) | - | 15,785,997 | 15,904,773 | - | 15,904,773 |
| நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள் | | | | | | | | | |
| 2020 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (3,147,028) | (3,147,028) | - | (3,147,028) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 13,119 | - | 13,119 | - | 13,119 |
| பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள் | - | - | - | - | 13,119 | (3,147,028) | (3,133,909) | - | (3,133,909) |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானகூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட மூலதன சாதனங்களின் விற்பனை மூலமான தேறிய வருமானம் | - | - | - | (7,098) | - | 7,098 | - | - | - |
| ஆண்டில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | - | 680,000 | - | - | 6,000,000 | (6,680,000) | - | - | - |
| 2021 டிசம்பர் 31ம் திகதியன்று மீதி | 47,622,493 | 5,315,000 | 6,293,636 | 1,618,637 | 52,468,905 | 13,866,847 | 127,185,518 | - | 127,185,518 |

| 2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | வங்கியின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுடைய பங்கு | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | | | |
| | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 |
| 2022 ஜனவரி 1ம் திகதியன்று மீதி | 47,622,493 | 5,315,000 | 6,293,636 | 1,618,637 | 52,468,905 | 13,866,847 | 127,185,518 | - | 127,185,518 |
| 2022 ஆம் ஆண்டின் 14ம் இல. மிகைக்கட்டண வரிச் சட்டம் (குறிப்பு 9) இன் கீழ் விதிக்கப்பட்ட மிகைக்கட்டண வரியை சீர்செய்தல் | - | - | - | - | - | (3,232,510) | (3,232,510) | - | (3,232,510) |
| 2022 ஜனவரி 1ம் திகதியன்று சீர்செய்யப்பட்ட மீதி | 47,622,493 | 5,315,000 | 6,293,636 | 1,618,637 | 52,468,905 | 10,634,337 | 123,953,008 | - | 123,953,008 |
| 2022 ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | 14,060,510 | 14,060,510 | - | 14,060,510 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 799,286 | 630,013 | - | 951,397 | 2,380,696 | - | 2,380,696 |
| 2022 ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 799,286 | 630,013 | - | 15,011,907 | 16,441,206 | - | 16,441,206 |
| நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள் | | | | | | | | | |
| 2021 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (4,863,589) | (4,863,589) | - | (4,863,589) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 20,442 | - | 20,442 | - | 20,442 |
| பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள் | - | - | - | - | 20,442 | (4,863,589) | (4,843,147) | - | (4,843,147) |
| ஆண்டில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | - | 718,000 | - | - | 6,500,000 | (7,218,000) | - | - | - |
| 2022 டிசம்பர் 31ம் திகதியன்று மீதி | 47,622,493 | 6,033,000 | 7,092,922 | 2,248,650 | 58,989,347 | 13,564,655 | 135,551,067 | - | 135,551,067 |

## சம்பத் வங்கி பீஎல்சீ (சாதாரண பங்குகள்) 2022 டிசம்பர் 31இல் உள்ளவாறு முதல் நிலை 20 பங்குதாரர்கள்

| இல. | பங்குதாரர்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | % உரிமை |
|---|---|---|---|
| 1 | வெலிபல் வன் பிஎல்சி | 171,117,084 | 14.95 |
| 2 | அயன்கா ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம் | 114,123,916 | 9.97 |
| 3 | ஊழியர் சேமலாப நிதி | 114,123,780 | 9.97 |
| 4 | திரு. வை.எஸ்.எச்.ஐ. சில்வா* | 93,799,287 | 8.20 |
| 5 | வரையறுக்கப்பட்ட ரோஸ்ஹூட் (தனியார்) நிறுவனம் - (கணக்கு இல 1) | 51,555,893 | 4.51 |
| 6 | செந்தில்வேர்ல் ஹோல்டிங்ஸ் (தனியார்) நிறுவனம் | 51,380,173 | 4.49 |
| 7 | பேண்டம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (தனியார்) நிறுவனம் | 32,481,106 | 2.84 |
| 8 | வரையறுக்கப்பட்ட அக்பார் ப்ரதர்ஸ் (தனியார்) நிறுவனம் (கணக்கு இல 1) | 27,455,171 | 2.40 |
| 9 | வரையறுக்கப்பட்ட போனிக்ஸ் வென்சர்ஸ் (தனியார்) நிறுவனம் | 24,909,975 | 2.18 |
| 10 | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் சபை | 22,425,477 | 1.96 |
| 11 | டாக்டர் டி செந்தில்வேர்ல் | 13,327,533 | 1.16 |
| 12 | சிட்டி வங்கி நியூயோர்க் எஸ்/ஏ நோர்ஜஸ் வங்கி கணக்கு இல 2 | 11,916,592 | 1.04 |
| 13 | சம்பத் வங்கி பிஎல்சி (கணக்கு இல 4) (சம்பத் வங்கி ஓய்வூதிய நிதியம்) | 11,546,646 | 1.01 |
| 14 | திருமதி. பி டி ஏ எஸ் பெருவலகே | 10,837,215 | 0.95 |
| 15 | பெம்பர்டொன் ஏசியன் ஒப்பச்சூனிடீஸ் நிதி | 10,250,000 | 0.90 |
| 16 | பிஎச் டென்ரா சஸ்டெய்னபல் ப்ரண்டியர் பண்ட் | 9,600,000 | 0.84 |
| 17 | எஸ்.எஸ்.பீ.டி - ஏ.எல் மெவார் கொமர்ஷல் இன்வெஸ்ட்மெட்ஸ் எல்.எல்.சீ | 6,710,925 | 0.59 |
| 18 | மேக்னா வெல்த் (தனியார்) நிறுவனம் | 6,511,463 | 0.57 |
| 19 | தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ/சங்கர் வரதானந்த சோசுந்தரம் | 5,500,000 | 0.48 |
| 20 | செலன் வங்கி என் ஏ - பிரீஸ் குரூப் டிரஸ்ட் | 4,655,274 | 0.41 |
| | | 794,227,510 | 69.42 |
| | பணிப்பாளர்கள் வைத்துள்ள பங்குகள் | 2,000,117 | 0.17 |
| | ஏனைய பங்குதாரர்களிடமுள்ள மீதி பங்குகள் | 348,146,328 | 30.41 |
| | மொத்தம் | 1,144,373,955 | 100.00 |

* வரையறுக்கப்பட்ட இந்திரா டிரேடர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளரான திரு. ருஷங்க சில்வா வங்கியின் நிர்வாகி அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளராக செப்டெம்பர் 1ம் திகதி 2017 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி இந்திரா டிரேடர்ஸ் நிறுவனத்தின் பிரதான பங்குதாரரான திரு. வை.எஸ்.எச்.ஐ. சில்வா வங்கியில் வைத்துள்ள பங்கு உரிமையானது பொது மக்களிடம் உள்ள பங்குகளின் விகிதத்தை கணக்கிடும் பொழுது விலக்கப்பட்டுள்ளது.

| திகதியன்று | 31 டிசம்பர் 2022 |
|---|---|
| பொது பங்குதாரர்களின் எண்ணிக்கை | 31,131 |
| % பொது மக்களிடம் உள்ள பங்குகள் | 90.62% |
| தளம்பல் சீராக்கப்பட்ட சந்தை மூலதனம் | ரூ. 35 பில்லியன் |

பங்கு பட்டியலிடல் விதிகள் பிரிவு 7.13.1 (அ) இன் தெரிவு 1 இற்கு இசைவாக குறைந்தபட்ச பொது பங்குரிமை விகித தேவைக்கு வங்கி இணங்குகிறது

## சம்பத் வங்கி பிஎல்சியில் பணிப்பாளர்கள் வைத்துள்ள பங்குகள்

| இல. | இயக்குநர்களின் பெயர் | வைத்திருக்கும் பங்குகளின் தொகை | |
|---|---|---|---|
| | | 31.12.2022 திகதியன்று | 31.12.2021 திகதியன்று |
| 1 | திரு. ஹர்ஷ அமரசேக்கர | - | - |
| 2 | திரு. ருஷங்க சில்வா | - | - |
| 3 | திரு. டி. கே. டீ. சில்வா விஜயரட்ண | - | - |
| 4 | திருமதி. ஏ. நாணயக்கார | - | - |
| 5 | கலாநிதி ஜே. டீ. வீ. எஸ். வீரவரண | - | - |
| 6 | திரு. வஜிர குலதிலக்க | - | - |
| 7 | செல்வி ஆர் கே ஜயவர்தன | - | - |
| 8 | திரு. வினோத் ஹைத்ராமணி | 281,129 | 281,129 |
| 9 | திரு. ஹிரான் கப்ரால் (2022 ஜூன் 30ம் திகதி முதல் அமுலாகுமாறு நியமிக்கப்பட்டார்) | - | ஏற்புடையதன்று |
| 10 | திரு. எம். என். ஆர். பெர்னாண்டோ (முகாமைப் பணிப்பாளர்) | 1,718,988 | 1,718,988 |
| 11 | திரு. டி ஏ டி வாஸ் குணசேகர (பிரதம நிதியியல் அதிகாரி) | - | - |

## தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாற்றுகை குறிகாட்டிகள் (நியதிச்சட்ட அறிக்கையிடலுக்கு அமைவாக)

| விபரம் | 31.12.2022 திகதியன்று | 31.12.2021 திகதியன்று | 31.12.2022 திகதியன்று | 31.12.2021 திகதியன்று |
|---|---|---|---|---|
| | வங்கி | | குழுமம் | |
| ஒழுங்குபடுத்துதல் மூலதன போதுமை (ரூ. 000) | | | | |
| பொது மூலதனம் அடுக்கு I | 95,533,144 | 104,104,589 | 102,822,613 | 111,221,788 |
| மொத்த அடுக்கு I மூலதனம் | 95,533,144 | 104,104,589 | 102,822,613 | 111,221,788 |
| மொத்த மூலதனம் | 114,351,589 | 126,986,732 | 122,096,525 | 134,586,456 |
| ஒழுங்குப்படுத்தல் மூலதனப்போதுமை விகிதம் (%) | | | | |
| பொது மூலதனம் அடுக்கு I விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 7.0%) | 11.92 | 13.95 | 12.18 | 14.05 |
| மொத்த அடுக்கு I மூலதனம் விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 8.5%) | 11.92 | 13.95 | 12.18 | 14.05 |
| மொத்த மூலதன விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 12.5%) | 14.27 | 17.02 | 14.46 | 17.00 |
| பரிவர்த்தனை விகிதம் % (குறைந்தபட்ச தேவைப்பாடு - 3%) | 7.00 | 7.80 | 7.29 | 8.08 |

| | 31.12.2022 திகதியன்று | 31.12.2021 திகதியன்று |
|---|---|---|
| | வங்கி | |
| சொத்துக்களின் தரம் (கடன் பட்டியலின் தரம்) | | |
| நிலை 3இல் வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களுக்கான விகிதம் % | 4.35 | 3.20 |
| நிலை 3இற்கான பெறுமானக் குறைப்புடன் தொடர்புடைய கடன்களின் விகிதம் (%) | 53.84 | 45.45 |
| இலாபத் தன்மை | | |
| வட்டி மிகை, % | 5.66 | 3.61 |
| சொத்துக்களில் இருந்தான வருவாய் (வரிக்கு முன்), % | 1.16 | 1.44 |
| பங்கு மூலதனத்தில் இருந்தான வருவாய் (வரிக்கு பின்), % | 10.95 | 11.05 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை | | |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் (ரூ. 000) | 326,607,580 | 347,721,178 |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்களின் விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு- 20%) | 27.85 | 32.62 |
| உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்த இருப்பு (ரூ. 000) | 226,064,957 | 271,499,215 |
| திரவத்தன்மை போதுமை விகிதம் (%) - இலங்கை ரூபா (குறைந்தபட்ச தேவைப்பாடு: 2022 - 90%, 2021 - 100%) | 200.78 | 254.89 |
| திரவத்தன்மை போதுமை விகிதம் (%) - அனைத்து நாணய அலகிலும் (குறைந்தபட்ச தேவைப்பாடு: 2022 - 90%, 2021 - 100%) | 146.53 | 213.43 |
| நிகர நிலையான நிதி விகிதம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு: 2022 - 90%, 2021 - 100%) | 157.10 | 149.92 |

## காசுப்பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | வங்கி 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | வங்கி 2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | குழுமம் 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | குழுமம் 2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| வட்டிப் பெறுகைகள் | 142,302,283 | 76,866,422 | 149,076,097 | 83,392,263 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (71,003,192) | (43,695,551) | (74,978,503) | (46,500,115) |
| தேறிய தரகுப் பெறுகைகள் | 19,436,145 | 11,414,982 | 20,179,574 | 12,411,338 |
| ஊழியர்களுக்கு செலுத்திய கொடுப்பனவு | (11,540,242) | (9,612,570) | (12,881,663) | (10,953,167) |
| நிதிச் சேவைகள் மீதான வரிகள் | (3,905,145) | (4,840,804) | (4,311,899) | (5,259,880) |
| ஏனைய தொழிற்பாடுகளிலிருந்தான பெறுகைகள் | 1,549,881 | 429,878 | 2,475,703 | 1,652,413 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான காசு கொடுப்பனவுகள் | (12,472,909) | (8,050,975) | (13,637,995) | (8,258,051) |
| **தொழிற்பாட்டு சொத்துக்கள், பொறுப்புக்களின் மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **64,366,821** | **22,511,382** | **65,921,314** | **26,484,801** |
| **தொழிற்பாட்டு சொத்துக்களின் (அதிகரிப்பு)/குறைவு** | | | | |
| இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | (704,629) | (17,539,378) | (704,629) | (17,539,378) |
| கடன் தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் -கடன் மற்றும் முற்பணங்கள் | (19,883,211) | (38,982,849) | (15,197,151) | (41,558,757) |
| ஏனைய சொத்துக்கள் | (11,082,349) | (8,726,819) | (11,437,568) | (9,125,486) |
| | **(31,670,189)** | **(65,249,046)** | **(27,339,348)** | **(68,223,621)** |
| **தொழிற்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு/(குறைவு)** | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | (16,630,586) | (13,169,339) | (20,964,596) | (13,120,522) |
| மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் | (2,019,286) | 782,781 | (2,019,286) | 1,875,781 |
| கடன் தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 9,159,796 | 81,985,590 | 11,407,514 | 81,810,841 |
| கடன் தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் - ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | (5,253,119) | (918,591) | (5,253,119) | (918,591) |
| ஏனைய பொறுப்புக்கள் | 9,275,832 | (412,389) | 9,163,991 | (364,703) |
| | **(5,467,363)** | **68,268,052** | **(7,665,496)** | **69,282,806** |
| வருமான வரி மற்றும் மிகை கட்டண வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு மூலம் பெற்ற தேறிய காசுப்பாய்ச்சல்கள் | 27,229,269 | 25,530,388 | 30,916,470 | 27,543,986 |
| செலுத்திய வருமான வரி மற்றும் மிகை கட்டண வரி | (10,105,479) | (3,558,857) | (11,727,749) | (3,788,355) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் பெற்ற தேறிய காசுப்பாய்சல்கள்** | **17,123,790** | **21,971,531** | **19,188,721** | **23,755,631** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (887,298) | (466,451) | (2,080,445) | (1,679,810) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற வருவாய் | 1,905 | 9,716 | 3,777 | 46,931 |
| எதிர் மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் மூலம் பெற்ற தேறிய காசுப்பாய்சல்கள் | (7,250,000) | 1,700,000 | (5,367,089) | 1,371,251 |
| நிதிச்சொத்துக்களின் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்- FVPL | (231,345) | 5,282,016 | (413,023) | 5,282,016 |
| கடன் தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள கடன் சாதனங்கள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் | 56,989,231 | (12,244,128) | 52,427,606 | (13,110,225) |
| நிதிச்சொத்துக்களின் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்- FVOCI | 3,028,313 | (18,772,514) | 3,028,313 | (18,772,514) |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | (309,934) | (181,605) | (321,964) | (191,750) |
| நிதிச்சொத்துக்கள் மூலமாக கிடைத்த பங்கு இலாபம் | 162,317 | 174,368 | 162,557 | 174,608 |
| துணைக்கம்பனிகள் மூலமாக கிடைத்த பங்கு இலாபம் | - | 5,123 | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்கு பெற்ற/(செலுத்திய) தேறிய காசுப்பாய்ச்சல்** | **51,503,189** | **(24,493,475)** | **47,439,732** | **(26,879,493)** |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்சல்** | | | | |
| தொகுதி கடன் பத்திர வழங்கலின் மூலம் பெற்ற காசு | - | 6,000,000 | - | 7,500,000 |
| தொகுதி கடன் பத்திரங்களை மீட்பதற்கு செலுத்திய காசு | (6,000,000) | (6,000,000) | (7,000,000) | (7,078,010) |
| குத்தகைகடன் அடமானங்களின் மீள்கொடுப்பனவுகள் | - | - | 2,163,000 | (447,110) |
| செலுத்திய பங்கு இலாபம் | (4,863,589) | (3,147,028) | (4,863,589) | (3,147,028) |
| குத்தகை பொறுப்புக்களின் முதல் சார்பான மீள்கொடுப்பனவுகள் | (1,203,807) | (1,335,139) | (721,391) | (728,618) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலான செலுத்திய தேறிய காசுப்பாய்சல்** | **(12,067,396)** | **(4,482,167)** | **(10,421,980)** | **(3,900,766)** |
| **காலப்பகுதிக்கான தேறிய/(செலுத்திய) காசுப்பாய்ச்சல்** | **56,559,583** | **(7,004,111)** | **56,206,473** | **(7,024,628)** |
| தேறிய அந்நிய செலாவணி வேறுபாடு | 8,357,060 | 214,987 | 8,357,060 | 214,987 |
| **ஆண்டின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **25,155,288** | **31,944,412** | **25,299,191** | **32,108,832** |
| **காலப்பகுதியின் இறுதியிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **90,071,931** | **25,155,288** | **89,862,724** | **25,299,191** |

காசு பாய்ச்சல் கூற்றின் ஒப்பீட்டுத் தகவல் தற்போதைய அறிக்கையிடல் காலத்திற்கு அமைய மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.

## தொகுதிக்கடன் தகவல்கள்

### (அ) சந்தைப் பெறுமதி

| தொகுதிக்கடன்கள் - 2017/2022 | கூடியது (ரூ) | | குறைந்தது (ரூ) | | காலாண்டின் இறுதியில் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 |
| நிலையானது - 12.50% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2018/2023 | கூடியது (ரூ) | | குறைந்தது (ரூ) | | காலாண்டின் இறுதியில் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 |
| நிலையானது - 12.50% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | கூடியது (ரூ) | | குறைந்தது (ரூ) | | காலாண்டின் இறுதியில் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 |
| நிலையானது - 13.90% | 100.00 | வி/வி | 100.00 | வி/வி | 100.00 | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | கூடியது (ரூ) | | குறைந்தது (ரூ) | | காலாண்டின் இறுதியில் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 |
| நிலையானது - 9.00% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

வி/வி - விற்கப்படவில்லை

### (ஆ) வட்டி வீதம்

| தொகுதிக்கடன்கள் - 2017/2022 | 2022 | | 2021 | |
|---|---|---|---|---|
| | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் |
| நிலையானது - 12.50% | 12.50% | 12.89% | 12.50% | 12.89% |

| தொகுதிக்கடன்கள் - 2018/2023 | 2022 | | 2021 | |
|---|---|---|---|---|
| | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் |
| நிலையானது - 12.50% | 12.50% | 12.89% | 12.50% | 12.89% |

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | 2022 | | 2021 | |
|---|---|---|---|---|
| | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் |
| நிலையானது - 13.90% | 13.90% | 13.90% | 13.90% | 13.90% |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | 2022 | | 2021 | |
|---|---|---|---|---|
| | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் |
| நிலையானது - 9.00% | 9.00% | 9.00% | 9.00% | 9.00% |

குறிப்பு 01
**தொகுதிக்கடன்கள் - 2017/2022**
2017 ஆம் ஆண்டு 6 பில்லியன் ரூபாய்க்கு வழங்கப்பட்ட கடன் பத்திரத்தை வங்கி 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 21ம் திகதி மீட்டெடுத்துள்ளது.

### (இ) ஒப்பிடு செய்யத்தக்க அரச பிணைகளின் வட்டிச் சதவீதம்

| | 2022 | 2021 |
|---|---|---|
| 3 மாத திறைசேரி உண்டியல் | 32.64% | 8.26% |
| 6 மாத திறைசேரி உண்டியல் | 32.20% | 8.30% |
| 5 ஆண்டு திறைசேரி பிணை | 26.76% | 10.69% |
| 7 ஆண்டு திறைசேரி பிணை | 26.01% | 11.52% |

### (ஈ) நடைமுறை உழைப்பு மற்றும் முதிர்வின் போது உழைப்பு

| தொகுதிக்கடன்கள் - 2017/2022 | நிலையானது 12.50% | |
|---|---|---|
| | 2022 | 2021 |
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2018/2023 | நிலையானது 12.50% | |
|---|---|---|
| | 2022 | 2021 |
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | நிலையானது 13.90% | |
|---|---|---|
| | 2022 | 2021 |
| நடைமுறை உழைப்பு | 13.90% | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு இறுதி விற்பனையின் போது | 13.75% | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | நிலையானது 9.00% | |
|---|---|---|
| | 2022 | 2021 |
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

வி/வி - விற்கப்படவில்லை

### (உ) விகிதம் - வங்கி

| | 31.12.2022 | 31.12.2021 |
|---|---|---|
| கடன் உரிமை விகிதம் (%) | 18.8% | 24.9% |
| வட்டிக் காப்பு (தடவை) | 6.8 | 6.6 |
| திரவச் சொத்து விகிதம் (%) (இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்த அறிக்கைக்கு அமைவாக) | 75.1% | 81.7% |

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

பிட்ச் தரப்படுத்தல் : நடைமுறை: 'A (lka)/RWN'
31 டிசம்பர் 2022: 'AA- (lka)/RWN'

www.sampath.lk

# வரி சீர்திருத்தத்தை நிறுத்தக் கோரி முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக யாழில் போராட்டம்








நாடு தழுவிய ரீதியில் வரி சீர்திருத்தத்தை உடனடியாக நிறுத்தக் கோரி முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக குறித்த போராட்டம் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

போராட்டத்தில் வங்கி ஊழியர் சங்கம், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், மின்சார சபை பொறியியலாளர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் பங்கேற்று ஆதரவு வழங்கின.

இதேவேளை, தமது கோரிக்கைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிடின், தொழிற்சங்க ரீதியாக கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# வெடிபொருட்கள் அகற்றப்படாத முகமாலையில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுப்பு

**(யாழ். நிருபர்)**



நிலக் கண்ணிவெடிகள் மற்றும் அபாயகரமான வெடிபொருட்கள் காணப்படும் பிரதேசங்களுக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்த காலத்தில் சூனிய பிரதேசமாக இருந்த முகாமாலை பகுதியில் நிலக் கண்ணிவெடிகள் மற்றும் அபாயகரமான வெடிபொருட்கள் காணப்படுகின்றன.

யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் ஆகின்றபோதிலும், அப்பகுதியில் தற்போதும் வெடிபொருட்களை அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அப்பகுதிகளுக்குள் பொதுமக்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி அபாயகரமான பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதிக்குள் சட்டவிரோதமான முறையில் உள்நுழையும் மணல் கொள்ளையர்கள் தனியார் காணிகளுக்குள் நுழைந்து மணல் அகழ்வுகளில் ஈடுபடுகின்றனர். அதனால், வெடிபொருள் அபாயத்தினால் விடுவிக்கப்படாத தனியார் காணிகளுக்குள் மணல் அகழ்வதினால் பாரியளவில் பள்ளங்கள் காணப்படுகின்றன.

அதேவேளை, சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களால், வெடிபொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும்போது வெடிபொருட்கள் ஏதேனும் வெடித்தால் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் அவயவங்களையும் சிலவேளைகளில் உயிரையும் இழக்கவேண்டி ஏற்படும்.

எனவே, அபாயகரமான பகுதிகளுக்குள் ஊடுருவி மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்





**(சாவகச்சேரி நிருபர்)**

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியாக தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வருகின்ற எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து நேற்று (01) புதன்கிழமை காலை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் வைத்தியசாலை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது பணியாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்து, "நியாயமற்ற வட்டி வீத அதிகரிப்பை குறைக்க வேண்டும், மருந்து மற்றும் மருத்துவ உபகரண தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய வேண்டும் மின் கட்டண அதிகரிப்பை குறைக்க வேண்டும்" உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மடத்தடியில் தனிமையில் இருந்த முதியவர் சடலமாக மீட்பு

**(சாவகச்சேரி நிருபர்)**

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடத்தடிப் பகுதியில் தனிமையில் வசித்துவந்த முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் (28) பிற்பகல் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மடத்தடியைச் சேர்ந்த 67 வயதான சி.தங்கராசா என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முதியவரது மனைவி மற்றும் பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்துவரும் நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி









**(வட்டுக்கோட்டை செய்தியாளர்)**

அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் எஸ்.ஜே.அனுராவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் சபாரத்தினசிங்கி பிரதம அதிதியாகவும், கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் திரவியராசாவும் கலந்துகொண்டனர்.

மங்கள விளக்கேற்றி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அணிநடை, மைதான நிகழ்ச்சிகள் என்பன நடைபெற்றன.

இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர், விருந்தினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# தொழிற்சங்கப் போராட்டத்திற்கு ஆதரவு:

## மலையக அதிபர் - ஆசிரியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கவனயீர்ப்பு












**(தலவாக்கலை நிருபர், ஆ.ரமேஸ்)**

நாட்டில் வரிக்கொள்கை, மின்சாரக் கட்டணம் அதிகரிப்பு, வங்கி வட்டி அதிகரிப்பு அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பல தொழிற்சங்கங்கள் ஒரு நாள் அடையாள தொழிற்சங்கப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளன.

இந்த தொழிற்சங்கங்கள் ஆரம்பித்துள்ள தொழிற்சங்கப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று (01) மலையகத்திலுள்ள பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததுடன் எதிர்ப்பினையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அந்தவகையில் நானுஓயா கார்லிபேக் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கறுப்பு உடை, கறுப்புப்பட்டியணிந்து பதாதைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட வங்கிக் கடன்களுக்கு வட்டி வீதம் அதிகரித்தமை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்காமை, போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்பட்டமை, உரிய வகையில் போஷாக்கான உணவுகள் கிடைக்காமையால் மாணவர்கள் மந்தபோசணை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளமை போன்றவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து நானுஓயா கார்லிபேக் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இந்த எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

மேலும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அழைப்பின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு மலையகத்தில் கல்வி சமூகத்தினரை உள்வாங்கி இயங்கும் தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட ஏனைய ஆசிரியர், அதிபர்கள் தொழிற்சங்கங்களும் ஆதரவு வழங்கி வலுசேர்த்தனர்.

அத்துடன், பாடசாலை நுழைவாயில்களில் கறுப்புக் கொடிகளையும் ஏற்றி தமது எதிர்ப்பினை வெளிக்காட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் "ஆசிரியர், அதிபர்களின் சம்பள போராட்டத்தின் மிகுதி 3/2இனை பெற்றுத்தா, சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் வரை வாழ்க்கைச் செலவுக்கான கொடுப்பனவை வழங்கு, சம்பளம் மீதான வரி வருமானத்தை நிறுத்து, பெற்றுக்கொண்ட வங்கிக்கடனுக்கான வட்டி வீத அதிகரிப்பை உடனே நிறுத்து, மக்கள் போராட்டத்திற்கு எதிரான அடக்கு முறையை நிறுத்து" என கோரிக்கைகளை முன்வைத்தே கறுப்பு ஆடை, கறுப்புப்பட்டிகளை அணிந்து அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட செயலாளர் வேலு இந்திரசெல்வன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## போராட்டத்தால் ஸ்தம்பித்த வங்கி - வைத்திய சேவைகள்









அறிவித்தல்

ஊழியர்களின் சம்பளத்துண்டின் மீது விதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக் கொள்கைகளுக்கு எதிர்ப்பினை வெளியிடும் முகமாக 2023.03.01ஆம் திகதி ஒருநாள் வேலைநிறுத்தம் ஒன்று முன்னெடுக்கப்படுகின்றமையினால் வங்கியின் பெறுமதிவாய்ந்த வாடிக்கையாளர்களான உங்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் குறித்து சங்கத்தின் வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கம்

**(செ.திவாகரன், கினிகத்தேனை நிருபர்)**

அரசாங்கத்தின் சட்டவிரோதமான தன்னிச்சையான அடக்குமுறை கொண்ட வரிக்கொள்கைக்கு எதிராக பெற்றோலியம், துறைமுகம், மின்சாரம், சுகாதாரம், நீர் வழங்கல், கல்வி, வங்கி, தபால் சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள், நேற்று (01) தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளிக்க நுவரெலியா அரச, தனியார் வங்கி, வைத்தியசாலை, மின்சாரசபை உத்தியோகத்தர்கள் இணைந்துள்ளன. இதனால் இச் சேவைகள் முடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பினால் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போராட்டத்தினால் மாவட்ட பொது வைத்தியசாலையிலும், நகரில் உள்ள சில தனியார் வைத்தியசாலையிலும் வெளி நோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் என்பன முற்றாகத் தடைப்பட்டன. நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, மகப்பேறு என்பன வழமைபோல் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தற்போதுள்ள அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக் கொள்கைகளை திரும்பப் பெற வேண்டும் என கோரிக்கை விடுத்தே தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் கினிகத்தேனை, வட்டவளை மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியன மூடப்பட்டிருந்ததோடு அறிவுறுத்தலும் ஒட்டப்பட்டிருந்தது. இதனால் சேவை பெற வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

மேலும், வட்டவளை வைத்தியசாலையில் வைத்தியர்கள் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டதோடு ஏனைய ஊழியர்கள் கடமைக்கு சமுகமளித்திருந்த இதேவேளை, கினிகத்தேனை வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைப் பெற வந்திருந்த நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாது சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.





**கொழும்பில் இடம்பெற்ற போராட்டக்காரர்கள் மீதான பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல், மின்கட்டண உயர்வு மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பிற்போட்டமை உட்பட அரசாங்கத்தின் அராஜக போக்கினை கண்டித்து நேற்றுமுன்தினம் இரவு (28) கம்பளை புகையிரத நிலையத்திற்கு முன்னால் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**தேசிய மக்கள் சக்தியினரால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி தீப்பந்தப் போராட்டத்தில் சட்டத்தரணிகள், வைத்தியர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (கம்பளை நிருபர்)**

# 2 வருடங்களாக முறையாக பராமரிக்கப்படாத பிலியந்தலை பஸ் நிலையத்தை கெஸ்பேவ நகரசபைக்கு வழங்க தீர்மானம்

## நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அமைச்சர் பிரசன்ன அறிவுறுத்தல்



இரண்டு வருடங்களாக முறையாக பராமரிக்கப்படாத பிலியந்தலை புதிய பஸ் நிலையத்தை கெஸ்பேவ நகரசபைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

பிலியந்தலை நகர அபிவிருத்தித் திட்டம், பொது வர்த்தக நிலையம் மற்றும் புதிய பஸ் நிலையம் தொடர்பாக நேற்று (01) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார். இந்தக் கலந்துரையாடல் நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிலியந்தலையில் புதிய பஸ் நிலையம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அதன் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பணிகளை இலங்கை போக்குவரத்துச் சபை மேற்கொண்டது. எவ்வாறாயினும், சுமார் இரண்டு வருடங்களாக பஸ் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மலசலகூட அமைப்பிலுள்ள பிரச்சினைகள், முறையான பராமரிப்பு, பராமரிப்புப் பணிகள் சரியாக நடைபெறாமை, மின் விளக்குகள் சரியாக வேலை செய்யாமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே மற்றும் கெஸ்பேவ நகர சபையின் தலைவர் லக்ஷ்மன் பெரேரா ஆகியோர் அமைச்சரிடம் தெரிவித்தனர். இது தொடர்பாக, அப்பகுதி மக்களிடமிருந்து, நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று (01) இந்தக் கலந்துரையாடலை நடத்தினார்.

இங்கு, பிலியந்தலை புதிய பஸ் நிலையத்தின் அனைத்து நிர்வாகப் பணிகளையும் கெஸ்பேவ நகரசபையிடம் ஒப்படைக்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே கேட்டுக்கொண்டார். இதன்படி, அனைத்து நிர்வாக மற்றும் பராமரிப்பு மற்றும் துப்புரவு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக கெஸ்பேவ நகரசபையிடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டது.

பஸ் நிலையத்தில் பஸ்களை ஒழுங்குபடுத்துவதற்கு மாகாண சபைக்கு உரிமை உள்ளதாக தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இலங்கை போக்குவரத்துச் சபையுடன் இணைந்து அதனை நடைமுறைப்படுத்தவேண்டுமென குறிப்பிட்டார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் புதிய அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் வரை வாகன தரிப்பிடத்தை கெஸ்பேவ நகரசபையிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அதனை நகரசபை சுத்தப்படுத்தி பராமரிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்டபோது கெஸ்பேவ நகரசபையும் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தது.

பிலியந்தலை நகர அபிவிருத்தித் திட்டம், பொது வர்த்தக நிலையத்தின் நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவுசெய்வது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பிலியந்தலை புதிய பஸ் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 14.09.2018 அன்று ஆரம்பிக்கப்பட்டு 05.02.2020 அன்று நிறைவடைந்தன. இது 2 ஏக்கர், 3 ரூட் மற்றும் 21 பேர்ச்சஸ் பரப்பளவைக் கொண்டுள்ளது. இதன் கட்டுமானத்திற்காக செலவிடப்பட்ட தொகை 235 மில்லியன் ரூபா.

கெஸ்பேவ நகரசபைக்குச் சொந்தமான பழைய பொதுச் சந்தைக்குப் பதிலாக புதிய வசதிகளுடன் கூடிய சந்தை மற்றும் சந்தையின் நிர்மாணப் பணிகள் 20.01.2022 அன்று ஆரம்பிக்கப்பட்டன. புதிய பஸ் நிலையத்தையொட்டி இது கட்டப்படும். நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான 1 ஏக்கர் 3 ரூட் 2 பேர்ச்சஸ் 19.45 காணியில் புதிய பொதுச் சந்தை ஒன்று நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது 414 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கடைகளைக் கொண்டுள்ளது. அதற்கான செலவு 498 மில்லியன் ரூபா.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்த, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, கஸ்பேவ நகர சபையின் தலைவர் லக்ஸ்மன் பெரேரா, கஸ்பேவ பிரதேச செயலாளர் கே.பி.பிரேமதாச மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

# சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக விசேட அதிரடிப்படையினர் நியமிப்பு

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக விசேட அதிரடிப் படையொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் பொதுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்களான டிரான் அலஸ் மற்றும் ஹரின் பெர்னாண்டோ மற்றும் ஏனைய அதிகாரிகளின் பங்கேற்புடன் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது. நாட்டின் சுற்றுலாத்துறையை மேலும் மேம்படுத்தும் முயற்சியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் உள்ளூர் மக்கள் மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகளால் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக பதிவாகியுள்ளன. இந்நிலையிலேயே அவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

# சுழிபுரம் மீனவர்களின் வலைகள் இந்திய இழுவைப் படகுகளால் நாசம்

## மீனவர்கள் கவலை





சுழிபுரம், காட்டுப்புலம் மீனவர்களின் ஏழரை இலட்ச ரூபா வலை இந்திய இழுவைப் படகுகளால் நேற்று முன்தினம் (28) இரவு நாசம் செய்யப்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சதாசிவம் சிறிகாந்தன் என்பவரின் வலையே இவ்வாறு நாசம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பாதிக்கப்பட்ட மீனவர் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் நேற்றிரவு (28) கடலுக்குச் சென்றோம். வலையை கடலில் விட்டுவிட்டு இருந்தவேளை சுமார் 300 இந்தியன் இழுவைப் படகுகள் எங்களது கடல் எல்லைக்குள் வெளிச்சம் பாய்ச்சாது உள்நுழைந்தக.

இதன்போது எனது ஏழரை இலட்ச ரூபா பெறுமதியான வலைகளை இந்தியன் இழுவைப் படகு வெட்டி நாசம் செய்துவிட்டுச் சென்றுள்ளது.

தற்போது மீன்பிடி பருவகாலம். நேற்றைய தினம் வெட்டிய வலைகளை கடன் பெற்றே வாங்கினேன். அந்த வலைகளைக்கொண்டு இரண்டு தடவைகள் மீன் பிடித்த நிலையில் மூன்றாவது தடவை மீன் பிடிப்பதற்காக சென்றபோதே இவ்வாறு நேர்ந்துள்ளது.

ஆகையால் வாங்கிய கடனை எவ்வாறு மீள செலுத்துவது எனத் தெரியாத நிலையில் உள்ளேன். இந்திய இழுவைப் படகுகளால் மீனவர்களாகிய நாங்கள் உயிரை விடவேண்டிய சூழ்நிலைக்குள் செல்லவேண்டியுள்ளது.

அரசாங்கமும் கடற்றொழில் அமைச்சரும் எங்களது நிலையை கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதோடு, எமக்கு இழப்பீடு வழங்க வேண்டும் -என்றார்.

தொடர்ந்து அப்பகுதி கடற்றொழில் சங்கத்தின் தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

இதுவரை எமது சங்க மீனவர்களின் 50 இலட்சத்துக்கும் மேலான தொழில் முதல்கள் இந்திய இழுவைப் படகுகளால் நாசம் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் உள்நுழைந்து மீன்பிடிக்க அனுமதி வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அனுமதி வழங்கும் முன்னரே அவர்கள் இப்படி செய்தால், அனுமதி வழங்கினால் என்ன செய்வார்கள் என சிந்திக்க வேண்டும்.

எனவே, மீனவர்களது நிலையை கருத்திற்கொண்டு கடற்றொழில் அமைச்சரும் அரசாங்கமும் செயற்பட வேண்டும் - என்றார்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரிடம் வெள்ள நிவாரண நிதி கையளிப்பு



(அஷ்ரப் ஏ சமத்)

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களின் பள்ளிவாசல்கள் பெட்ரேசன் இணைந்து பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ள நிவாரணத்திற்காக சேகரித்த நிதியை பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரிடம் கையளித்தனர். இந்நிகழ்வு வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி முன்னிலையில் அமைச்சில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உலமா சபைத் தலைவர் அஷ்ஷேக் றிஸ்வி முப்தி, செயலாளர் அஷ்ஷேக் அர்கம் நூர்ஆமித், உபதலைவர் அஷ்ஷேக் ஓமர்டீன், உதவிச் செயலாளர் எம்.எஸ்.எம். தாசிம், அஷ்ஷேக் எம்.எச்.எம்.பவாஸ் (சமூக சேவை இணைப்பாளர்- கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் அமைப்பின் தலைவர் அஸ்லம் ஒஸ்மான், செயலாளர் எஸ்.ஏ.கரீம், கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சார்பாக தலைவர் கே.ஆர்.ஏ.சித்தீக், எம்.ஜே.எம்.றிஸ்வி மற்றும் பாகிஸ்தான் கவுன்சிலர் அப்சல் மரிக்கார் உட்பட செயற்குழு உறுப்பினர்கள், பள்ளிவாசல் கள் உறுப்பினர்கள் இணைந்து வெள்ள நிவாரணத்திற்கான காசோலையை பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரிடம் கையளித்தனர்.

# பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதியாக கந்தையா கஜன் நியமனம்



இளம் வர்த்தகரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையா கஜன் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்று முன்தினம் (28) வழங்கினார்.

வடக்கு, கிழக்கில் முதலீடுகளை முன்னெடுத்து அபிவிருத்திசெய்யும் நோக்கில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய சபோல்க் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகம் தொடர்பில் முதுகலை பட்டப்படிப்பை நிறைவுசெய்துள்ள இவர், வணிகம் மற்றும் தொழில்நுட்பத்தில் மிகுந்த அர்ப்பணிப்புடன் தனது திறன்களை வெளிப்படுத்தி வருகிறார்.

வணிக அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் நீண்ட அனுபவமுள்ள கஜன், பல்வேறு திட்டங்களின் மூலம் இலங்கை நிலையான வளர்ச்சியை அடையவேண்டும் என்பதில் தீவிர ஆர்வங்காட்டி வருகிறார்.

எரிசக்தி, நகர மேம்பாடு, கனிம வளங்கள் ஆகியவற்றிற்காக முதலீட்டாளர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் இலங்கையில் கல்வித்துறை, விவசாயத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான அபிவிருத்திகளையும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஊடாக இலங்கையில் விவசாய கால்நடை வளர்ப்பு தொடர்பான பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் திட்ட முகாமையாளராகவும் இவர் இலங்கையில் செயற்பட்டு வருகின்றார்.

# கோப்பாயில் சி.ஐ.டி எனக் கூறி 38 பவுண் தங்க நகை கொள்ளை

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு வீட்டிற்குள் புகுந்தவர் 38 பவுண் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்வியங்காட்டு பகுதியிலுள்ள வீடொன்றில் வயோதிப தம்பதியினர் வசித்து வரும் நிலையில், நேற்று முன்தினம் (28) குறித்த நபர் தன்னை புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என அடையாளப்படுத்திக்கொண்டு, வயோதிப தம்பதியினரிடம் விசாரணைகளை முன்னெடுப்பதுபோன்று பாசாங்கு செய்துள்ளார்.

பின்னர் வீட்டைச் சோதனையிட வேண்டும் எனக்கூறி வீட்டினுள் சென்று, அலுமாரிகளை சோதனையிட்டு, அங்கிருந்த 38 பவுண் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தம்பதியினர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பயிற்சி பொலிஸ் உத்தியோகத்தர் போதைப்பொருளுடன் கைது

அநுராதபுரம் நகரிலுள்ள தனியார் வங்கியொன்றுக்கு அருகில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பயிலுநர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் வலயத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் 405 மில்லிகிராம் ஹெரோயினுடன் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் இரத்தினபுரி வலயத்துக்குட்ட பொலிஸ் நிலையமொன்றில் கடமையாற்றி வருபவர் எனவும் நீதிபதி ஒருவரின் வீட்டின் பாதுகாப்புக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்ததாகவும் பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாம் கடமையாற்றும் பொலிஸ் நிலையத்தில் விடுமுறைக்கு அறிவிக்காமல் அநுராதபுரம் பேமடுவ பிரதேசத்திலுள்ள தமது வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் அநுராதபுரம் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.










மட்டக்குளிய சேர் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் திருமதி ஜி.பரிதா கான் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (படங்கள். மொஹமட் நசார்)

# நியாயமற்ற வரிச்சுமையை நீக்கக்கோரி நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்துக்கு கிழக்கில் பல்வேறு தரப்பினரும் ஆதரவு






(மூதூர் செய்தியாளர்)

மார்ச் 01ஐ கறுப்பு தினமாக அனுஷ்டிக்குமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் திருகோணமலை, மூதூர் நகரிலுள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில், மூதூர் தள வைத்தியசாலையின் வைத்தியர்கள், மருந்து கலவையாளர்கள் மற்றும் எக்ஸ்ரே பிரிவினர் என பல்வேறு தரப்பினரும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் வைத்திய சேவை பெற வருகைதந்தோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டிருந்தது. வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் சேவையில் ஈடுபட்டாலும் கையில் கறுப்புநிறப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். மூதூர் தள வைத்தியசாலையில் அவசரப் பிரிவு மாத்திரமே இயங்கியமை குறிப்பிடத்தக்கது.






(கனகராசா சரவணன்)

நாடளாவிய ரீதியில் வங்கிகள் மற்றும் அரச திணைக்கள சங்கங்கள் ஒன்றிணைந்து நியாயமற்ற வரிச்சுமையை உடன் நீக்குமாறு கோரி இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மற்றும் தொழிற்சங்கங்கள் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று புதன்கிழமை (01) மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தலைவர் பிறேம்குமார் தலைமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் இலங்கை வங்கி ஊழியர் சங்கம், கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வைத்தியர் சங்கம் உட்பட தொழிற்சங்கங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் ஒன்றிணைந் திருந்தனர்.

இதன்போது, ''வானுயரும் பணவீக்கம் தொழில் வல்லுநர்கள் நடுவீதியில், நண்பர்களுக்கு வரிச்சலுகை தொழில் வல்லுநர்களுக்கு வரிச்சுமை, தொழில்வல்லுநர்களை சுரண்டிதின்னும் வரி யோசனையை மீளப்பெறு, வங்கி திருடன்கள் பெரும் பதவிகளில், அவர்களை சுற்றி வரி திருடர் கள், உணவில்லை, நீரில்லை குடித்திட இங்கே மருந்துமில்லை அந்த கவலை அவர்களுக்கில்லை, மக்கள் மீது வரிச்சுமை அவர்களுக்கோ சொகுசு வாழ்க்கை, எல்லாப்புறமும் ஊழல் மோசடி இன்னமும் அவர்கள் மாடங்களில்'' போன்ற சுலோகங்களை ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(கிண்ணியா செய்தியாளர்)

நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து பதாகைகளை ஏந்தியவாறும் கறுப்புப்பட்டி அணிந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




அந்தவகையில், திருகோணமலை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பிராந்திய காரியாலய உத்தியோகத்தர்களும் தங்களது கோரிக்கைகளை முன்வைத்து கறுப்புப்பட்டி அணிந்து கண்டி - திருகோணமலை பிரதான வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். மின்சாரக் கட்டண அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, நீர்வழங்கல் சபையை தனியார்மயமாக்குதல், மருத்துவக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டமை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.




(அஷ்ரப்கான்)

அரசாங்கத்தின் வரிக் கொள்கை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிராக நேற்று புதன்கிழமை (01) பிற்பகல் 2.30 மணியளவில் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் அம்பாறை மாவட்டம் ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு கோரிக்கைகளைக்கொண்ட சுலோகங்களை ஏந்தியவண்ணம் ஆசிரியர்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். "எல்லா வருவாயிலும் அநியாயமாக வரி விதிப்பதை நிறுத்து, ஜனநாயகத்தில் கை வைக்காதே, நடத்தப்படவேண்டிய தேர்தலை உடனே நடத்து, மருந்து தட்டுப்பாட்டுக்கு உடனடி தீர்வு கொடு, அதிபர் ஆசிரியர் வாழ்க்கைச் செலவுப்படி கொடுப்பனவை உடனே வழங்கு, மின்சாரம், எரிபொருள், எரிவாயு உள்ளிட்டவற்றின் விலையை குறை" போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்திய ஆசிரியர்கள் இவ்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.




(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள் அரசின் வரி அறவீட்டுத் திட்டத்திற்கு எதிராக நேற்று புதன்கிழமை (01) வங்கி நடவடிக்கையிலிருந்து விடுபட்டு வங்கிகளை மூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள அரச வங்கிகள் நேற்று புதன்கிழமை(01) காலைமுதல் மூடப்பட்டிருந்ததுடன், சில தனியார் வங்கிகள் நண்பகல் ஒரு மணிக்குப் பின்னராக மூடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இதனால் வாடிக்கையாளர்கள் அசௌகரியங்களுக்குள்ளானதுடன், பாதிக்கப்பட்டதையும் காணமுடிந்தது.

அரசால் கொண்டுவரப்பட்டுள்ள வரி அறவீட்டு முறையினால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தே வங்கி ஊழியர்கள் கடமையில் இருந்து விலகியிருந்தனர். அதேநேரம், அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள் அரசின் வரி அறவீட்டுத் திட்டத்திற்கு எதிராக தமது எதிர்ப்பினை தெரிவிக்கும் வகையிலான அமைதியான பேரணி ஒன்றினை அண்மையில் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

நாடு தழுவிய ரீதியில் நேற்று புதன்கிழமை(01) இடம்பெற்ற தொழிற்சங்கப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் அம்பாறை நகரில் அதன் தலைவர் கலாநிதி எம்.ஐ.எம்.ஜெஸீல் தலைமையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

---

**கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில்**

## குற்றமிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும்

**ஆணையாளர் அஸ்மி தெரிவிப்பு**



(மாளிகைக்காடு செய்தியாளர், அஷ்ரப் கான், பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் குற்றமிழைத்தவர்களை முறையாக விசாரணை செய்து குற்றம் நிரூபிக்கப்படின் அவர்களுக்குரிய தண்டனைகளை பெற்றுக்கொடுக்க கல்முனை மாநகர சபை தயாராக இருக்கின்றது. மேலும் அவற்றை கையாள உதவி ஆணையாளர், கணக்காளர், பொறியியலாளர், பிரதம இலிகிதர் அடங்கிய குழுவொன்றை அமைத்துள்ளதாகவும், சட்ட நடவடிக்கைகளுக்கான விடயங்கள் முனைப்புடன் இடம்பெறுவதாகவும் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

கல்முனையான்ஸ் போரம் அமைப்பின் பிரதான ஒருங்கமைப்பாளர் முபாரிஸ் எம்.ஹனிபா தலைமையிலான கல்முனையான்ஸ் போரம் அமைப்பினரும், கல்முனை பிரதேச சமூக செயற்பாட்டாளர்களும் நேற்று புதன்கிழமை (01) காலை கல்முனை மாநகர ஆணையாளரை சந்தித்து கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் கேட்டறிந்து, மகஜரொன்றை கையளித்தனர்.

அதன்பின்னர் கருத்து தெரிவித்த ஆணையாளர்,

கல்முனை மாநகர சபையில் 78 இலட்சம் அளவில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அந்தப் பெறுமதி 1.9 கோடி அளவில் உள்ளது போன்ற அறிக்கைகள் கிடைத்துள்ளன. அந்தப் பெறுமதி கணினி தரவு உட்புகுத்துகையின்போது ஏற்பட்ட வலுத்தொகையா அல்லது ஊழலா என்பது பற்றி விசாரணைகளை மேற்கொள்ள உயர்மட்ட அதிகாரிகளின் உதவியை நாடியுள்ளோம்.

இந்த விடயம் தொடர்பில் கணினி தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய குழுவொன்றை விசாரணைக்கு நியமிக்குமாறு உள்ளூராட்சித் திணைக்களத்தைக் கோரியுள்ளோம். கல்முனை பொலிஸில் கடந்த 20ஆம் திகதியும், அம்பாறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவில் 25ஆம் திகதியும் முறைப்பாடு செய்துள்ளோம். இதுவரை சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டமை குறித்து மக்கள் பொலிஸாரிடம் தான் கேட்கவேண்டும்.

மேலும், சட்டநடவடிக்கைக்குத் தேவையான சகல ஆவணங்களையும் பொலிஸார் கோரினால் வழங்க நாம் எப்போதும் தயாராக உள்ளோம். முகவர்கள் மற்றும் போலியான நபர்களிடம் பொதுமக்கள் பணத்தை செலுத்த வேண்டாம் என்றும் நேரடியாக சபைக்கு வந்து காசாளரிடம் தமது கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்ளுமாறும் வரி சேகரிக்க வரும் கல்முனை மாநகர சபை ஊழியர்களிடம் தமது நிலுவைகளை கேட்டறிந்துகொள்ளுமாறும் அவர் மக்களை கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் மேலதிக விடயங்களை கேட்டறிந்துகொள்ள கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.றம்ஸின் பக்கீரை சந்தித்த கல்முனையன்ஸ் போரம் அமைப்பினர், இதுவரை எடுத்துள்ள சட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர். அரச நிதி மோசடி இடம்பெற்றுள்ளதால் இது தொடர்பில் விசாரிக்க விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். சந்தேகநபர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்ல முடியாதவகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.

மேலும், கல்முனையன்ஸ் போரம் பிரதான ஒருங்கமைப்பாளர் முபாரிஸ் எம்.ஹனிபா, இந்த ஊழல் தொடர்பில் தாமும் கல்முனை மக்களும் விழிப்பாக இருப்பதாகவும் ஊழல்களை இல்லாதொழிக்க கல்முனை மக்கள் முன்வர வேண்டும் என்றார்.

வரியிருப்பாளர்கள் தமது வரி தொடர்பிலான விடயங்களை கல்முனை மாநகர சபைக்கு நேரடியாக சென்று அறிந்துகொள்ள வேண்டும். இது குறித்த மேலதிக உதவிகளை கல்முனையான்ஸ் போரம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## சிங்கள மொழியில் முதுமாணிப் பட்டம் பெற்ற ஆசிரியர்



(நிந்தவூர் செய்தியாளர்)

கிழக்கு மாகாண சாய்ந்தமருதைச் சேர்ந்த அப்துல் ஹமீது நாஸிக் அஹ்மத் ஆசிரியர் சிங்கள மொழியியல் துறையில் சிங்கள மொழி மூலத்தினூடான முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற களனி பல்கலைக்கழகத்தின் 132ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின்போதே இவர் சிங்கள மொழியியல் துறைக்கான முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

2017ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் சேவையின் இரண்டாம் மொழி சிங்கள பாடத்திற்கான ஆசிரியராக கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினூடாக தெரிவுசெய்யப்பட்டு, அக்கரைப்பற்று வலயத்தின் பொத்துவில், அல்-கலாம் மகா வித்தியாலயத்தில் ஐந்து வருட காலமாக சிங்களப் பாடத்திற்கான ஆசிரியராக சேவையாற்றி, பின்னர் இடமாற்றம் பெற்று தற்போது சம்மாந்துறை அல்-அர்சத் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) சிங்களப் பாட ஆசிரியராக சேவையாற்றுகின்றார்.




"தென்கிழக்கு அலகின் ஜனாஸா வாகன சேவையின் முதன்மை 2012" பாலமுனை ஜனாஸா வாகனத்தை இம்மண்ணில் பெற்றுக்கொள்ள வேண்டும் என தன் பாதங்களால் வரப்பேறி, கதவு தட்டி, உதவி பெற்று ஓடச் செய்த செயற்பாட்டாளர்களுக்கு "பாதங்கள் சுவர்க்கத்தின் பக்கம்" நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (26) அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. (திராய்க்கேணி செய்தியாளர்)



சிறைச்சாலைகள் திணைக்களத்தில் 37 வருடங்கள் சிறந்த சேவையாற்றி திணைக்களத்திலிருந்து ஓய்வுபெற்ற சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜி.எம்.பி.மலின் லியனகேவுக்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துசார உபுல்தெனிய நினைவுச்சின்னம் வழங்குவதை காணலாம்.(கந்தளாய் செய்தியாளர்)

## கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பழனி ஆண்டவர் ஆலய நிர்வாகத்தினால் வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டுவரும் கல்வி மேம்பாட்டு நடவடிக்கையின் கீழ் 2023ஆம் ஆண்டு சிவராத்திரி தினத்தை சிறப்பிக்கும் வகையில் நலிவுற்ற குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களின் கற்றல் செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஆலய செயலாளர் டி.ரஜினிகாந்த் ஏற்பாட்டில் வைத்தியசாலை தாதிய முகாமையாளரும் ஆலய தலைவருமான நாகலிங்கம் சசிகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நித்தியானந்த பகிரத சிவம், வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி கலாரஞ்சனி கணேசலிங்கம், புதூர் விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆலய நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## சவளக்கடை விவசாயிகளுக்கு யானைவெடி தந்துதவ கோரிக்கை

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

சவளக்கடை கமநலச்சேவை பிரிவிலுள்ள அறுவடை செய்யப்படவுள்ள நெற்காணிகளில் யானைகள் புகுந்து சேதப்படுத்துவது குறித்து விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேல்கண்டம், காளியான்வட்டை, தென்நடுக் கண்டம், பால்குடிக்கண்டம், கிழக்கண்டத்தில் இதுவரை அறுவடை செய்யப்படாத வயல் காணிகளே இதில் அடங்குவதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் பல ஏக்கர் நெற்காணிகளில் அறுவடை செய்யப்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், அச்சத்துடன் அறுவடை செய்யப்பட்டாலும் விளைவு குறைவாக இருக்கும் அறுவடை நிலங்களை பாதுகாக்க யானைகளை விரட்டும் யானைவெடிகளை தந்துதவுமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மாணவத் தலைவர்கள் தினமும் சின்னம் சூட்டும் நிகழ்வும் பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் பாடசாலை முன்றலில் நடைபெற்றது.

பாடசாலை ஒழுக்காற்றுக்குழு பொறுப்பாசிரியர் ஏ.எல்.எம்.றிபாஸின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக் கல்வி அதிகாரியுமான என்.எம்.ஏ.மலீக், கௌரவ அதிதியாக ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளரும், பாடசாலை முன்னாள் அதிபருமான எம்.ஐ.அப்துல் ஜப்பார் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இலங்கை பாடசாலை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டிகளில் 17 வயதிற்குட்பட்ட அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற்று ஒலுவில் அல்-ஹம்றா தேசிய பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (திராய்க்கேணி செய்தியாளர்)

## கல்விச் செயலமர்வு

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்முனை கல்வி மாவட்ட ஆரம்பப் பிரிவு பாடசாலைகளின் அதிபர்களை வலுவூட்டும் செயலமர்வு நேற்று புதன்கிழமை (01) கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை கல்வி மாவட்டத்தின் அக்கரைப்பற்று, திருக்கோவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய கல்வி வலயப் பிரிவுகளிலுள்ள ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளின் அதிபர்கள் இச்செயலமர்வில் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.ஜவாத், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப் பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பார்த்தீபன் உட்பட கல்வி அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# பொதுக்கூட்டம்

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி பழைய மாணவர்களுக்கான பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 04ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஒத்துழைப்புகளை வழங்குமாறு அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மோட்டார்சைக்கிளில் சென்ற இளைஞன் நீரோடையில் தவறி விழுந்து உயிரிழப்பு

(மண்டூர், மண்முனை செய்தியாளர்கள்)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பிளாந்துறை வில்லுக்குள நீரோடையில் விழுந்ததில் உயிரிழந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆர்.கே.எம்.பாடசாலை வீதி, கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த ரீ.கவிசாந் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவ தினத்தன்று கல்முனை பிரதேசத்திலிருந்து தனது சொந்த வேலையின்பொருட்டு, தனது நண்பருடன் மோட்டார்சைக்கிளில் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தை நோக்கிச் சென்று பின்னர் தனது வேலைகளை முடித்துவிட்டு அம்பிளாந்துறை வில்லுக்குள வீதியூடாக மோட்டார்சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது குறித்த நீர் நிரம்பிய குழியில் விழுந்து காப்பாற்றப்பட்டு மகிழடித்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் வருடாவருடம் பெய்துவரும் பருவமழை காலத்தில் நீர் நிரம்புவதனால் இவ்வீதியை பொது மக்கள் பாவனைக்கு உட்படுத்துவதில்லை எனவும் பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரியின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் பீற்றர் போலின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வை யிட்டதுடன், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட் டுள்ளார். கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்னல் தாக்கத்தில் வீடுகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கு பலத்த சேதம்



(அட்டாளைச்சேனை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் இடி மின்னலுடன் கூடிய பலத்த மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் நிலவிய மின்னல் தாக்கத்தினால் அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள சில வீடுகளில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

செவ்வாய்க்கிழமை (28) நள்ளிரவு 2.30 மணியளவில் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினால் அக்கரைப்பற்று ஆறாம் பிரிவு மத்திய கல்லூரி வீதியிலுள்ள சில வீடுகளில் பாரிய சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

குடியிருப்புகளுக்கருகில் இருந்த தென்னை மரத்தில் மின்னல் தாக்கம் ஏற்பட்டு தென்னை மரம் தீப்பிடித்தது. அதனைத் தொடர்ந்து அருகிலிருந்த இரு வீடுகளிலும் மின்னல் தாக்கம் ஏற்பட்ட வேளையில், வீட்டை மின்னல் பலமாக தாக்கியதாகவும் அவ்வேளையில் தான் தெய்வாதீனமாக உயிர் தப்பியதாகவும் குடும்பத்தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், பலத்த சத்தத்துடன் தீப்பிழம்பு போல் ஒளி வீட்டுக் கூரையை உடைத்துக் கொண்டு வீட்டினுள் ஊடுருவியதால் மின்சாதனங்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு சேதமேற்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் கட்டிலில் உறங்கிக்கொண்டிருந்தவேளை, கூரையின் பாகங்கள் தான் படுத்துறங்கிய கட்டிலின் மீது பலமாக வீழ்ந்ததாகவும் அதன்மூலம் சிறு காயங்களுடன் தான் உயிர் தப்பியதாகவும் இன்னுமொரு குடும்பஸ்தர் தெரிவித்தார்.

அவ்குடியிருப்புப் பகுதிகளிலுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த ஜன்னல், கண்ணாடிகள் வெடித்துச் சிதறியதுடன், மின்வயர்கள் பொருத்தப்பட்டிருந்த வீட்டின் சிறு சுவர்ப்பகுதிகள் உடைந்து சிதறியதாகவும் தளபாடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் பலரும் கவலை தெரிவிக்கின்றனர். மேலும், தம் பார்வையைப் பறிக்கும் வகையில் மிகப் பிரகாசமான நீல நிற மின்னல் கீற்றுகள் உள்நுழைந்துள்ளதால் தாம் மிகுந்த அச்சத்திற்குள்ளானதாகவும் இப்பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# இளைப்பாறும் கட்டடம் திறந்துவைப்பு



(அபு அலா, கந்தளாய் செய்தியாளர்)

சமூக சேவையாளர் சரவணமுத்து யோகநாயகத் தின் 4ஆவது ஆண்டு ஞாபகார்த்த நினைவை யொட்டி திருகோணமலை இலுப்பைக்குள பிரதேச சமுர்த்தி பயனாளிகளின் நலன்கருதி 4 இலட்ச ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட இளைப்பாறும் கட்டடம் திறந்துவைத்து பொது மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றது.

'காப்போம்' அமைப்பின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவுக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கட்டடத்தை திறந்துவைத்தார்.

இத்திறப்பு விழாவில், இலுப்பைக்குளம் சமுர்த்தி முகாமையாளர், திட்டமிடல் உத்தி யோகத்தர், சமுர்த்தி வங்கி அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் காப்போம் அமைப்பின் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட சமுர்த்தி பயனாளிகள் கலந்துகொண்டனர்.

சுமார் 2000 சமுர்த்தி பயனாளிகளைக்கொண்ட இலுப்பைக்குளம் பிரதேச சமுர்த்தி அலுவலக வளாகத்தில் இந்த இளைப்பாறும் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆரையம்பதியில் குடும்பப்பெண் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை

(மண்டூர் செய்தியாளர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் குடும்பப்பெண் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காளிகோயில் வீதி, மண்முனை, ஆரையம்பதி பிரதேசத்தைச் சேர்ந்த (வயது 48) மூன்று பிள்ளைகளின் தாயாரான காராளசிங்கம் கீதா என்பவரே இவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டவராவார்.

குறித்த பெண் பிறிதொரு நபரிடம் கடனாக பெற்றுக்கொண்ட பணத்தைக் கொடுப்பதற்கு தன்னிடம் பணம் இல்லாதபோது அதனை திருப்பிக் கொடுக்க மறுத்ததனால் வீட்டில் யாரும் இல்லாதசமயம், தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரிய 'வந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் பீற்றர் போலின் உத்தரவிற்கமைவாக, சம்பவ இடத்திற்கு சென்ற காத்தான்குடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி வேலு மணிமாறன் சடலத்தைப் பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அக்கரைப்பற்றில் இருவேறு பகுதிகளில் கஞ்சா பொதிகளுடன் இருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீரா நகர் பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின்படி, பொலிஸ் பரிசோதகர்களான வசந்த குமார, பகிதரன் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்த 620 மில்லி கிராம் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரை அக்கரைப் பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை (01) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரான்ஸ்போர் வீதியில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத்தகவலின்படி, உபபொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன் அவரிடமிருந்து 20 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப் பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று புதன் கிழமை (01) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிலக்கடலை அறுவடை விழாவும் கற்றல் உபகரணங்கள் வழங்கலும்



(மண்டூர் செய்தியாளர்)

சின்னவத்தை முத்தமிழ் வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற நிலக்கடலை அறுவடை விழா மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் த.செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்றது.


இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தனுஷியா ராஜசேகர் மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் த.அருள்ராஜா, எமது சமூகம் அமைப்பினர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பட்டிருப்பு கல்வி வலயத்தின் 70 பாடசாலைகளில் அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புறமான சின்னவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கஷ்ட நஷ்டங்களை ஓரேநாளில் என்னால் விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருந்தது. இப்படியான பாடசாலைகளில் கற்பிப்பதுதான் தர்மமும் தார்மீகப் பொறுப்புமாகும்.

இப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் பல தேவைப்பாடுகளும் பிரச்சினைகளும் உள்ளன. அடுத்ததாக எமது சமூகம் எமது தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்டது. எமது சமூகத்திற்கு எமது கோடான கோடி நன்றிகள். பாடசாலை என்பது வெறுமனே புத்தகப்படிப்புகள் மாத்திரமல்லாமல், வாழ்வதற்கான பயிற்சிக்கள மாகும் என வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் களுக்கான கற்றல் உபகரணங்கள் எமது சமூகம் அனுசரணையில் வழங்கப்பட்டதுடன், நிலக்கடலை அறுவடை விழாவும் இடம்பெற்றன.

# போடியார் புலம்பல்!



தமிழ், முஸ்லிம் உறவை முறிக்கவே கிளிநொச்சி பச்சிலப்பள்ளியில் 100 ஏக்கர் நிலத்த நரி ரணில் வழங்கப்போறாராம் எண்டு ஸ்ரீதரன் எம்.பி. சொல்லியிருக்காரு எலுவா.?

அதுக்குத்தானே உறவ முறிக்காம இருக்க முல்லத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபயில ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஷோட கூட்டு சேர்ந்து தமிழரசு கட்சிய அடவு வைச்சி இருக்கியல். இதுக்கு என்ன சொல்லப்போறியள்? கல்முன வடக்கு பிரதேச செயலகத்த ஒள்ளுப்பம் ஹக்கீம் நானாவோட கதச்சி தமிழ் மக்களிட நியாயமான கோரிக்கய எதிர்வரும் நோன்பு கஞ்சி குடிக்க முன்பு சரிக்கட்ட பாருங்கவன்!

# ராஜபக்ஷ குடும்பத்தினரை பாதுகாக்கவே ஜனாதிபதி கதிரையில் அமர்ந்துள்ளார் ரணில் விக்கிரமசிங்க

## சாணக்கியன் எம்.பி. சாடல்





(அப்துல்சலாம் யாசீம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேர்தலை கண்டால் பயம். அவர் மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி. அவர் ராஜபக்ஷ குடும்பத்தினரைப் பாதுகாக்கும் நோக்கிலேயே ஜனாதிபதி கதிரையில் அமர்ந்திருக்கின்றார் - என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

திருகோணமலை சல்லி சாம்பல்தீவு பகுதியில் செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் ஆரம்பித்த தேர்தல் பிரசாரங்களை நடத்தி வருகின்றோம். இதன் ஒரு கட்டமாக இன்றைய தினம் திருகோணமலை மாவட்டத்தில் சில பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும், மக்கள் மத்தியில் தேர்தல் நடக்குமா, நடக்காதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேர்தல் என்றாலே ஒரு பயம். அவர் மக்களால் தெரிவுசெய்யப்படாத ஜனாதிபதி.

மேலும், 2009ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கில் கிடைக்கப்பெற்ற வாக்குகளின் அடிப்படையில் பின்னடைவொன்று காணப்பட்ட விடயம் மறக்க முடியாத ஒரு விடயமாகும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் மாறிவிட்டன. தென்னிலங்கையிலும் சர்வதேசத்திலும் பரப்பிக் கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் இவ்வாறான ஒரு தேர்தல் நடந்தால் தமிழ் மக்களின் ஆதரவு எமக்குக் கிடைக்கும் என உறுதியாகிவிட்டது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தமிழரசுக் கட்சி முன்னெடுக்கும் - என்றார்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளைத் தலைவர் எஸ்.குகதாஸன், பொருளாளர் வெள்ளத்தம்பி சுரேஸ் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வீரமுனையில் தையல் நிலையம் ஆரம்பிப்பு



(வெல்லாவெளி செய்தியாளர்)

அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வேண்டுகோளை ஏற்று புலம்பெயர் தமிழ்ப் பற்றாளர்களின் நிதி பங்களிப்பில் வீரமுனை ஐங்கரன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தால் தையல் நிலையம் ஆரம்பிக்க ஏற்பாடாகியுள்ளது. முதல் கட்டமாக பிரித்தானியாவைச் சேர்ந்த வைத்திய நிபுணரும், தமிழ் பற்றாளருமான டாக்டர் இரத்தினம் கௌரிபாலன் தையல் நிலையத்தை ஆரம்பிப்பதற்கு தனது சொந்த நிதியிலிருந்து ரூபா2,00,000 வழங்கினார்.

முன்னதாக நெதர்லாந்து மனிதநேய கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக டாக்டர் இரத்தினம் கௌரிபாலன், கலாநிதி வை.ஜெயமுருகன் ஆகியோர் வீரமுனை ஐங்கரன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களை நேரில் சந்தித்து பேசினர். அப்பொழுதே தையல் நிலையம் ஆரம்பித்து நடத்துவதற்கு வழி செய்து தர வேண்டும் என்று சங்க உறுப்பினர்களால் ஒருமனதாக கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து மனிதநேய கூட்டுறவுச் சங்கம் இன்னமும் தேவையான தையல் இயந்திரங்களை வாங்குவதற்கு வழி ஏற்படுத்தித் தரும் என்று சமாச தலைவர் எஸ். லோகநாதன் செவ்வாய்க்கிழமை (28) நம்பிக்கை தெரிவித்தார். 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இன வன்செயலில் வீரமுனை பிரதேச மக்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு ஏதிலிகளாக இடம்பெயர்ந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் வீடுகளை உடைத்து கொள்ளையிட்ட நபர் கைது

(கனகராசா சரவணன்)

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தில் 20இற்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்துக் கொள்ளையிட்டுவந்த மட்டு. கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான சந்தேக நபர் ஒருவரை திங்கட்கிழமை (27) இரவு கைது செய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள ஆலையடிவேம்பு பிரதேசத்தில் வீடு ஒன்றை உடைத்து அங்கிருந்து 54 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்ட சம்பவத்தில் தொடர் விசாரணை மேற்கொண்டுவந்த நிலையில், குறித்த நபரை அக்கரைப்பற்று பகுதியில் வைத்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர், மட்டு. கல்லடி வேலூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் கிளிநொச்சி உட்பட பல இடங்களில் திருமணம் முடித்துள்ளதாகவும் மட்டக்களப்பில் இரு கொலைச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு பிணையில் வெளிவந்ததுடன் ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை, அம்பாறை, ஆலையடிவேம்பு, கிளிநொச்சி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் 20 வீடுகளுக்கும் மேல் உடைத்துக் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனவும் நீண்டகாலமாக தலைமறைவாகிவந்த நிலையில் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் ஆலோசனை கருத்தரங்கு



(பாண்டிருப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு, பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட் பட்ட பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் மாநாடு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன் வழிகாட்டலில் முறைசாராக் கல்விப்பிரிவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய அதிபர் க.செல்வராசா தலைமையில் இடம்பெற்ற வழிகாட்டல் ஆலோசனை கருத்தரங்கில் பிரதம அதிதியாக பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தனுசியா ராஜசேகர் கலந்துகொண்டார்.

இங்கு மாணவர்களுக்கு வாழ்க்கையை வெற்றிக் கொள்வதற்கான திறன்கள், தொழில்தகைமைகள் தொடர்பான விழிப் புணர்வு, உயர்தரப் பாடத்துறைகளும், பல்கலைக்கழக வாய்ப்புகளும், பரீட்சைக்குப் பின்னரான கல்வியியல் கல்லூரிக்கான வாய்ப்புகள், நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுத்தல் தொடர்பான விழிப்புணர்வூட்டல், போட்டிப் பரீட்சைகளுக்கு முகங்கொடுத்து தொழிலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் பற்றிய விழிப்பூட்டல் தொடர்பாக மாணவர்கள் தெளிவுபடுத்தப்பட்டனர்.

இதில் வளவாளர்களாக வலயக்கல்வி அலுவலக வளவாளர்கள், கணினி வள நிலைய வளவாளர்கள், பிரதேச செயலக வளவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு



(வெல்லாவெளி செய்தியாளர்)

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவான வைற்றலின் நிதி அனுசரணையில் சமகாலப் பொருளாதார நெருக்கடியினால் மிகவும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகள் திங்கட்கிழமை (27) மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான மயூரி ஜனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெல்லாவெளி, செங்கலடி மற்றும் கிரான் பிரதேசங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், அருவி பெண்கள் வலையமைப்பைச் சேர்ந்த அ.கிரிஜாலினி உட்பட வலையமைப்பின் பல அங்கத்தினர்கள் கலந்துகொண்டனர்.

# கிரீஸில் இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 36 பேர் உயிரிழப்பு; 85 பேர் படுகாயம்




கிரீஸில் பயணிகள் ரயிலும், சரக்கு ரயிலும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 36 பயணிகள் உயிரிழந்துள்ளதுடன், 85 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தலைநகர் ஏதென்ஸிலிருந்து 350 பயணிகளுடன் தெசலோனிக்கி நகரம் நோக்கி பயணிகள் ரயிலொன்று சென்றுகொண்டிருந்த நிலையில், அதே தண்டவாளத்தில் எதிரே சரக்கு ரயில் ஒன்றும் வேகமாக வந்துள்ளது. ஒரே தண்டவாளத்தில் வருவதை ஓட்டுனர்கள் உணரும் முன்பே அதிவேகமாக வந்த 2 ரயில்களும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

ரயில் பெட்டிகள் தடம் புரண்டு சரிந்து வீழ்ந்த நிலையில் 4 ரயில் பெட்டிகள் தீப்பிடித்து எரிந்தன. இந்தக் கோர விபத்தில் 36 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் இந்த விபத்தில் படுகாயமடைந்த 85 பேர் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். அவர்கள் அறுவரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இதேவேளை, 250 பயணிகள் சிறுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். அவர்களுக்கு முதலுதவிகள் அழிக்கப்பட்டு பஸ்கள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.





உலக செய்திகள்

## கொரோனா பரவலுக்கு சீனாவே காரணம்

### அமெரிக்கா குற்றச்சாட்டு

சீனாவின் வூஹானிலுள்ள நுண்கிருமிகள் ஆய்வகத்தில் ஏற்பட்ட கசிவால்தான் கொரோனா பரவியதாக அமெரிக்காவின் புலன் விசாரணை அமைப்பான எவ்பிஐ தெரிவித்துள்ளது.

உலகையே சுமார் 2 ஆண்டுகள் முடக்கிய கொரோனா வைரஸ் தொற்றுக்கான ஆரம்பப் புள்ளியாக சீனாவே இருந்ததாக எவ்பிஐ இயக்குநர் கிறிஸ்டோபர் வ்ரே தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

வூஹான் இன்ஸ்டிடியூட் ஒவ் வைரலொஜி வளாகங்கள், நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான சீன நிலையம் மற்றும் தடுப்பூசிகளை உற்பத்திசெய்யும் வூஹான் இன்ஸ்டிடியூட் ஒவ் உயிரியல் தயாரிப்பு ஆய்வகத்திலிருந்தே வைரஸ் பரவியிருக்க லாம் என்று எவ்பிஐ தெரிவித்துள்ளது.

## குடும்பத்துடன் பிறந்தநாள் கொண்டாட்டம்



தி.மு.க. தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தனது 70ஆவது பிறந்தநாளை நேற்று தனது குடும்பத்தினருடன் கொண்டாடினார்.


ஸ்டாலினின் பிறந்தநாளுக்கு பல்வேறு குடியரசு தலைவர்கள், பிரதமர்கள் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் எனப் பலரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், 70ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மெரினாவிலுள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடம், கலைஞர் கருணாநிதி நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதையடுத்து பெரியார் நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## எங்கள் தலைவர் 'நித்தி' துன்புறுத்தப்படுகிறார்: ஐ.நா. கூட்டத்தில் 'கைலாசா' பெண் பிரதிநிதி கவலை

ஐ.நா. சபைக் கூட்டத்தில் நித்தியானந்தாவின் 'கைலாசா' பிரதிநிதி கலந்துகொண்டது கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்தியாவில் நித்தியானந்தா மீது கடத்தல், குழந்தைகளைச் சட்டவிரோதமாக அடைத்து வைத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து கைது நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக நித்தியானந்தா வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றார். தப்பிச் சென்ற நித்யானந்தா மத்திய ஈக்குவடோரில் தீவு ஒன்றை வாங்கி அதற்கு 'கைலாச நாடு' என்ற பெயரிட்டு அதற்கான கொடியையும் வெளியிட்டதாக தகவல் வெளியானது. அந்த நாடு குறித்து www.kailaasa.org என்ற இணையதளத்தில் தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், கடந்த 22ஆம் திகதி ஜெனீவாவில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தில் நித்தியானந்தாவின் பெண் சீடர்கள்



கலந்துகொண்டமை கவனத்தை ஈர்த்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் கூட்டத்தில் கைலாசா பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் விஜயப்ரியா என்பவர் கலந்துகொண்டார்.

அந்தக் கூட்டத்தில் அவர் பேசும்போது, "கைலாசா என்பது இந்து மதத்தின் முதல் இறையாண்மைகொண்ட நாடு. இந்து மதத்தின் உயர்ந்த தலைவரான நித்தியானந்தாவால் கைலாசா உருவாக்கப்பட்டது. நித்தியானந்தா இந்து மதத்தின் மரபுகளைப் புதுப்பிக்கிறார்.

இந்து மதத்தின் பூர்வீக மரபுகள் மற்றும் வாழ்க்கை முறையைப் புதுப்பித்ததற்காக எங்கள் தலைவர் நித்தியானந்தா கடுமையான துன்புறுத்தல் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு ஆளாகியுள்ளார். நித்தியானந்தா மற்றும் கைலாசாவிலுள்ள புலம்பெயர்ந்த 20 இலட்சம் மக்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்க சர்வதேச அளவில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?" என்று ஐ.நாவிடம் விஜயப்ரியா கேட்டுள்ளார். கைலாசா 150 நாடுகளில் தூதரகங்களைக் கொண்டுள்ளதாகவும், மேலும், பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை நிறுவியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பான விவரம் வெளியான பிறகு, கைலாசாவை நாடாக ஐ.நா. அங்கீகரிக்கிறதா என பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## உலகக்கிண்ணத்தில் நேரடியாக ஆடும் வாய்ப்பை இழந்த இலங்கை



2024ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற ஐ.சி.சி. மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் நேரடியாக பங்கேற்கும் வாய்ப்பை இலங்கை மகளிர் அணி இழந்துள்ளது. இதனால், அதே ஆண்டு முற்பகுதியில் நடைபெறவுள்ள தகுதிகாண் சுற்றில் ஆடவேண்டிய நிலைக்கு இலங்கை உள்ளாகியுள்ளது.

8ஆவது மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடர் கடந்த வாரம் தென்னாபிரிக்காவில் நிறைவடைந்த நிலையில், 9ஆவது உலகக்கிண்ணத்துக்கு நேரடி தகுதிபெற்ற அணிகள் குறித்த விபரங்களை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

இதன்படி, நடைபெற்று முடிந்த மகளிர் ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இரண்டு குழுவிலும் முதல் 3 இடங்களைப் பிடித்த 6 அணிகள் அடுத்த ஆண்டு நேரடியாக விளையாடத் தகுதிபெற்றுக்கொண்டன. இந்த அணிகளுக்கு மேலதிகமாக அடுத்த ஆண்டு உலகக்கிண்ணத்தை நடத்தும் வரவேற்பு நாடான பங்களாதேஷ் மற்றும் மகளிர் அணிகள் தரவரிசையின்படி 7ஆவது இடத்திலுள்ள பாகிஸ்தான் அணியும் நேரடி தகுதி பெற்றுள்ளன.

இதன்படி, 10 அணிகள் மோதும் 2024 மகளிர் ரி20 உலகக்கிண்ணத்தில் 8 அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சிய இரண்டு அணிகள் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் நடைபெறும் தகுதிகாண் சுற்றுப்போட்டியிலிருந்து தெரிவு செய்யப்படும்.

## அவுஸ்திரேலியாவின் சுழலில் 109 ஓட்டங்களில் சுருண்ட இந்தியா



சுற்றுலா ஆஸி. மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பான நிலையில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 109 ஓட்டங்களுக்குள் சுருண்டு போனது.

கடந்த போட்டியில் அறிமுகமான அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் குணமென் தனது தாக்குதலை ஆறாவது ஓவரில் தொடங்கினார். அவரது மாயாஜால சுழலில் ரோஹிட் சர்மா (12), சுப்மன் கில் ஆகியோர் வெளியேறினர். மீண்டும் பந்துவீச வந்த குணமென், அஸ்வின் (3), உமேஷ் யாதவ் (17) ஆகியோரை ஆட்டமிழக்க செய்தார். இதன்மூலம் அவர் டெஸ்ட் அரங்கில் இரண்டாவது போட்டியிலேயே 5 விக்கெட்டுகளை சாய்த்தார்.

கடைசி விக்கெட்டாக சிராஜ் ரன்அவுட் ஆக, இந்திய அணி 109 ஓட்டங்களுக்கு சுருண்டது. அவுஸ்திரேலியாவின் குணமென் 5 விக்கெட்டுகளும், லயன் 3 விக்கெட்டுகளும், மர்பி ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## இரண்டாவது தடவையாகவும் சம்பியன் பட்டத்தை சுவீகரித்த கிண்ணியா மத்திய கல்லூரி




(கிண்ணியா நிருபர்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட 14 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாவது தடவையாகவும் தொடர்ச்சியான முறையில் கிண்ணியா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.

அகில இலங்கை பாடசாலை சம்மேளனம் மற்றும் கல்வி அமைச்சு இணைந்து நடத்திய குறித்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி தம்புள்ளை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் கண்டி விக்ரமபாகு மற்றும் கிண்ணியா மத்திய கல்லூரி அணியினர் ஒன்றையொன்று எதிர்த்தாடினர். இதில் 2:0 என்ற அடிப்படையில் கிண்ணியா மத்திய கல்லூரி அணியினர் சம்பியனாக முடிசூடினர்.

மொத்தமாக 24 பாடசாலை அணிகள் பங்குபற்றியதில் இறுதிச் சுற்றுக்கு கிண்ணியா மத்திய கல்லூரி அணி தெரிவாகியது. இதில் வரலாற்று ரீதியாக அனைத்துப் போட்டிகளிலும் மொத்தமாக 21 கோல்களை பெற்ற பெருமையையும் இக்கல்லூரி பெற்று சாதனை படைத்துள்ளது.

2020இலும் சம்பியனாகி தொடர்ச்சியாக, 2022 இலும் சம்பியனாக முடிசூடியுள்ளது. இதனால் இம் மாணவ வீரர்களை பயிற்சியில் திறம்பட ஈடுபடுத்திய விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கு பெற்றோர்கள் உட்பட பாடசாலை சமூகமும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

## மட்டக்களப்பு வின்சன் மகளிர் தேசிய பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் சம்னஸ் இல்லம் சம்பியன்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வின்சன் மகளிர் தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சம்னஸ் இல்லம் முதலாவது இடத்தையும், பட்மன் இல்லம் இரண்டாவது இடத்தையும், வின்சன் இல்லம் மூன்றாவது இடத்தையும், கிறோட் இல்லம் நான்காவது இடத்தையும் பெற்றன.

வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் திருமதி ரி. உதயகுமார் தலைமையில் திங்கட்கிழமை (27) மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளார் கே. மகேசன், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, விசேட அதிதியாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.குலேந்திரகுமார், அதிதிகளாக வலயக்கல்வி பிரதி பணிப்பாளர் நிர்வாகம் திருமதி எஸ்.ரவிராஜா, உடற்கல்வி பணிப்பாளர் வி.லவக்குமார், ஓய்வுபெற்ற கொழும்பு வலயக்கல்வி ஆலோசகர் செல்வி ஜஸ்மீன் ஆதம்லெப்பை ஆகியோர் கலந்து கொண்டு சம்பிராயபூர்வமாக ஒலிம்பிக் விளக்கு ஏற்றி விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்துவைத்து போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் வெற்றிக் கேடயங்களையும் வழங்கி கௌரவித்தனர்.






Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7